விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 20 திங்கட்கிழமை (05.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 229

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## யாழ்ப்பாணத்தில் லஷ்கர் இ தொய்பா இந்.புலனாய்வுத்துறை எச்சரிக்கை

(புதுடில்லி)

இந்தியாவுக்குள் ஊடுருவுவதற்காக, லஷ்கர் இ தொய்பா அமைப்பைச் சேர்ந்தவர்கள், யாழ்ப்பாணத்தில் முகாம்களை அமைத்து வருவதாக, இந்தியப் புலனாய்வு அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

புதுடெல்லி அதிகார வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்திய ஊடகம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இராமேஸ்வரம் வழியாக, தமிழ்நாட்டுக்குள் ஊடுருவும் நோக்கிலேயே லஷ்கர் இ தொய்பா தீவிரவாதிகள், யாழ்ப்பாணத்தில் முகாம்களை அமைத்து வருவதாக இந்திய மத்திய புலனாய்வுத்துறை, தமிழ்நாடு அரசாங்கம் மற்றும், புலனாய்வுப் பிரிவுகளுக்கு தகவல் அனுப்பியுள்ளது.

லஷ்கர் இ தொய்பா தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கும்படியும், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும் துறைசார்ந்த அமைப்புகளிடம் இந்தியப் புலனாய்வுத்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த எச்சரிக்கையை அடுத்தே, இந்தியக் கடல் பகுதியில் சீனர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர்களின் நடமாட்டம் தென்பட்டால், உடனடியாகத் தகவல் தரும்படி, இராமேஸ்வரம் பகுதி மீனவர்களிடம், கடலோரக் காவல்படையினர் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

லஷ்கர் இ தொய்பா தீவிரவாதிகள் இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்குள் நுழைவதற்கான தளமாக இலங்கை (20ஆம் பக்கம் பார்க்க)


## நவநீதம்பிள்ளைக்கு கட்டுப்பாடுகள் இல்லை

### உறுதிப்படுத்தியது அரசு!



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எங்கு வேண்டுமானாலும் பயணம் செய்யலாம். அவருக்கு எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட மாட்டாது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)




## மோசடிகளுடன் கூடிய தேர்தல் இம்முறை நடைபெறும்

### சுதந்திரக்கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

1999ம் ஆண்டு நடைபெற்ற வடமேல் மாகாண சபை தேர்தலை விட இம்முறை நடைபெறும் தேர்தல் மிகவும் மோசமான வன்முறைகள் மற்றும் மோசடிகளுடன் கூடிய தேர்தலாக இருக்கும் என்பதை வெளிகாட்டும் அடிப்படையான அடையாளம் தற்போது தென்பட ஆரம்பித்துள்ளதாக குருநாகல் மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலைமையை தற்போதே கட்டுப்படுத்தாவிட்டால் பாரதூரமான பல பிரச்சினைகள் ஏற்படும் என சில அமைச்சர்களும் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஏற்கெனவே ஆயுததாரிகளுடன் கூடிய நபர்களும் இலக்க தடுகள் இல்லாத வாகனங்களும் குருநாகல் நகருக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

ஊசி ரகத்தை சேர்ந்த நவீன துப்பாக்கிகள, மேலும் சில ஆயுதங்களுடன் இந்த நபர்கள் இரவு நேரங்களில் இலக்க தகடுகள் இல்லாத வாகனங்களில் குருநாகல் மற்றும் வாரியபொல நகரம் உட்பட பல தேர்தல் தொகுதிகளில் உலா வருகின்றனர் என ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுதந்திரக் கட்சியினர் கூறியுள்ளனர். (எ-4)

## எரிந்தது குப்பை வெடித்தது குண்டு

(யாழ்ப்பாணம்)

குப்பைக்கு தீ மூட்டியபோது குப்பைக்குள் இருந்த வெடிபொருள் வெடித்ததில் அரியாலை பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. அரியாலை பூம்புகார் 3ஆம் வட்டார பகுதியில் உள்ள வெற்றுக் காணி ஒன்றில் இருந்த குப்பைகளை காணி உரிமையாளர் தீ முட்டிய வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அச்சம்பவத்தில் உயிர் சேதங்கள எதுவும் ஏற்படவில்லை என்றும் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாகவும் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இராணுவத்தினரின் கட்டுப்பாட டிற்குள் இருந்த இப் பகுதியில் 2010ஆம் ஆண்டில் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## சேலத்தில் பிரபாவின் மனைவி தகவல் வழங்கியவர் கைது!

(சென்னை)

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மனைவி மதிவதனி தமிழகத்தின் சேலத்தில் பதுங்கி இருப்பதாக, இந்திய மத்திய விசாரணை பிரிவிற்கு குறுஞ்செய்தி அனுப்பிய பொறியிலாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

திருச்சி மாவட்டம் துறையூரை சேர்ந்தவர் 32 வயதான கே.துரைராஜ் என்ற பொறியிலாளரான இவருக்கும், சேலம் கிச்சிப்பாளையம் வ.உ.சி.நகரை சேர்ந்த 30 வயதான செல்வராணி என்பவருக்கும் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு திருமணம் நடந்தது.

துரைராஜ் முதலில் தஞ்சையில் உள்ள தனியார் கல்லூரி ஒன்றில் பேராசிரியராக பணியாற்றி நின்றுவிட்டார். பின்னர் வேறு கல்லூரிகளுக்கு விண்ணப்பித்து வேலை தேடி வந்தார்.

இந்த நிலையில் துரைராஜ், தனது மனைவியுடன் சேலம் வந்து தனது மாமனார் வீட்டுக்கு அருகில் வீடு வாடகைக்கு எடுத்து தனியே வசித்து வந்தார்.

இங்கு வந்து வேலை தேடி வந்த துரைராஜ், கரூரில் உள்ள தனியார் கல்லூரிக்கு வேலைக் கேட்டு விண்ணப்பித்து இருந்தார்.

இதனால் இந்த கல்லூரி நிர்வாகம் வேலைக்கு வந்து சேர சில நாட்களுக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## ஊடக அடக்கு முறைக்கு எதிராக போர்க்கொடி

(கொழும்பு)

வெலிவேரியவில் அண்மையில் உள்ளூர் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து ஊடக அமைப்பு ஒன்று மணிக கட்டில் கறுப்புப்பட்டியை அணியும் போராட் (20ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலைக் கண்காணிக்க சர்வதேசக் குழு யாழ்.வருகை

### கட்சி ஆதரவாளர்களுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடவென சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்துள்ளனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21-ம் திகதி இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தல் நீதி, நியாயமான முறையில்இடம்பெறவேண்டுமானால் சர்வதேச கண்காணிப்பாளர்கள் வரவழைக்கப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட ஒருசில அரசியல் கட்சிகளும் கபே அமைப்பு போன்ற சுயாதீன அமைப்புக்களும் வேண்டுகோள் விடுத்திருந்தன.

இந்நிலையில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கண்காணிப்பு பணியில் ஈடுபட பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகளான மார்ரின சாள்ஸ் கசீயே, அம்னாயாதை ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இந்தப் பிரதிநிதிகள் யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களை நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதேவேளை அரசாங்கத் தரப் [illegible]

## பரீட்சைக் கடமைக்குச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் மரணம்

### நீர்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த கோப்பாய் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மாரடைப்பால் மரணமடைந்துள்ளார்.

இன்று ஆரம்பமாகவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான பாதுகாப்பு கடமையில் நேற்று முன்தினம் இரவு குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஈடுபட்டிருந்த நிலையில் மாரடைப்பால் மரண மடைந்துள்ளார் எனவும் இவரது சடலத்தை நேற்று அதிகாலை தாம் மீட்டதாகவும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப் பட்டவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கான்ஸ்டபிளாக பணியாற்றிய பண்டாரவளையைச் சேர்ந்த இ.எம.புத்ததாச (வயது - 48) என்பவராவார்.

இவரது மரணம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டுவருவதாகவும் முதற்கட்ட விசாரணைகளின் மூலம் மாரடைப்பால் மரணமடைந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொலிஸாரின் அனுமதியுடன் சென்ற பேரணியைத் தடுத்தது இராணுவம்

## அரியம் எம்.பி குற்றச்சாட்டு

வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களில் இராணுவ ஆட்சி நடைபெறுகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு குருக்கள்மடம் பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய கவனயீர்ப்பு பேரணியின் இறுதியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

கடந்த 2009-ம் ஆண்டு மே மாதம் 19-ம் திகதிக்கு பின்பு இந்நாட்டில் சமாதானம் நிலவுவதாகவும் சிவில் நிர்வாகம் இடம்பெறுவதாகவும் அரசாங்கம் கூறுகின்றது. இருந்த போதிலும் ஜனநாயகக் கட்சி என்ற வகையில் ஓர் அமைதியான பேரணியை எம்மால் செய்ய முடியாதுள்ளது.

இந்தப் பேரணிக்கான அனுமதியினை பொலிஸாரிடம் பெற்றிருந்த போதிலும் இராணுவத்தினர் பேரணியை தடுக்கின்றனர். இரண்டு நிர்வாகங்களா இங்கு இடம்பெறுகின்றது என நான் கேட்க விரும்புகின்றேன்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இராணுவ ஆட்சி நடைபெறுகின்றது என்பதற்கு இது நல்ல உதாரணமாகும். குருக்கள்மடம் மற்றும் மாங்காடு பிரதேசங்களில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கோவில்கள் உடைக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டன.

இரண்டு மாதங்களாகியும் இன்னும் இதன் சூத்திரதாரிகள் கைது செய்யப்படவில்லை. இதனால் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் அரசாங்கம் சம்பந்தப்பட்டிருப்பதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

எமது கவனயீர்ப்பை ஜனநாயக அடிப்படையில் வெளிக்காட்ட முடியாத நிலையே இன்று வடக்கு, கிழக்கிலுள்ளது. வட மாகாண சபைத் தேர்தலை குழப்புவதற்கு முற்படுகின்றனர்.

அங்கு நேரடியாக இராணுவத்தினர் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இது தேர்தல் சட்டத்தை மீறும் செயலாகும். எந்த குழப்பத்தை ஏற்படுத்தினாலும் வட மாகாண சபை தேர்தலில் நிச்சயமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே வெற்றி பெறும். வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனே நிற்கின்றனர் என்றார். (எ-4)

## மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம்



தென்புலோலியூர் பரா.றமேஸ் நீதி அமைச்சினால் அரச அங்கீகாரம் பெற்ற தமிழ்-ஆங்கிலமொழி பெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

யாழ்ப்பாணம் காணி மாவட்டப் பதிவகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் இவர், அகில இலங்கை இளங்கோ கழகத்தின் முக்கிய உறுப்பினர் ஆவார்.

அக்கழகத்தினூடாக "அன்புப் பிள்ளைகளே" எனும் சிறுவர் பாடல் நூலினையும் இறுவட்டினையும் அண்மையில் இவர் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

கவிதை, விவாதம், பாடல் ஆக்கம், புராண படனம், சொற்பொழிவு எனப் பல துறைகளிலும் புலமை கொண்ட இவர் கலாபூஷணம் பரராஜசிங்கம் - பரமேஸ்வரி தம்பதியினரின் புதல்வர் ஆவார். (ந)

## மட்டு.பதில் அரச அதிபராக பெரும்பான்மை இனத்தவர்

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு பெரும்பான்மையினத்தை சேர்ந்த ஒருவரை மாவட்ட பதில் அரசாங்க அதிபராக நியமித்தமைக்கு எதிராக பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபராக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றும் அல்விஸ் நியமிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுநிர்வாக அலுவல்கள் அமைச்சின் நடைமுறைக்கு எதிராக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி சார்ள்ஸ் விடுமுறையில் சென்றுள்ளதால் அவர் குறித்த அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரை பதில் மாவட்ட அரசாங்க அதிபராக நியமித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாவட்ட அரசாங்க அதிபர் விடுமுறையில் செல்லும்போது அங்கு மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றுபவரே பதில் மாவட்ட அரசாங்க அதிபராக செயற்படுவது வழமையாகும்.

ஆனால் அதனை மீறி மேலதிக அரசாங்க அதிபர் ஒருவர் இருக்கும்போது அதற்கு மாறாக வேறு ஒரு மாவட்டத்தில் இருந்து பெரும்பான்மையினத்தை சேர்ந்த ஒருவரை நியமித்துள்ளது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபராக இருப்பவர் மட்டக்களப்பை சேர்ந்தவர் என்பதுடன் அமைச்சு ஒன்றின் செயலாளராகவும் பதவி வகித்தவர்.

மாவட்ட செயலகத்தின் செயலாளராக வரக்கூடிய அனைத்து தகுதியையும் கொண்டிருந்த அவரை புறந்தள்ளி பெரும்பான்மையினத்தை சேர்ந்த ஒருவரை நியமித்தது தொடர்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## ஈரான் ஜனாதிபதி பதவியேற்பு நிகழ்வில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கலந்து கொண்டார்

ஈரானின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஹசன் ரொஹானி பதவியேற்பு நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் பெற்றோலியத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன் யாப்பா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நேற்று நடைபெற்ற இந்நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட 11 நாடுகளின் ஜனாதிபதிகள் கலந்து கொள்வதாக ஈரான் உயர் சபையின் இராஜதந்திரப் பணியகம் முன்னர் தெரிவித்திருந்தது.

ஆயினும் இந்நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவில்லை என வெளி விவகார செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஈரானின் ஜனாதிபதியாக இருந்த மொஹமூட் அஹ்மடிநிஜாட் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4)

## முன்னாள் பொலிஸ் பேச்சாளருக்கு உயிர் அச்சுறுத்தல்

முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜெயகொடிக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எம்பிலிப்பிட்டி பிரதேச சபையின் தலைவர் எம்.கே.அமில கைது செய்யப்பட்ட காரணத்தினால் இவ்வாறு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது பிரதேச சபைத் தலைவர் தாக்குதல் நடத்தியதனைத் தொடர்ந்து இரத்தினபுரி மாவட்டத்திற்கு பொறுப்பாக கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜெயகொடி சட்ட நடவடிக்கை எடுத்திருந்தார். பிரதேச சபைத் தலைவரை கைது செய்து விசாரணை நடத்தியிருந்தார்.

எம்பிலிப்பிட்டிப் பிரதேச சபையின் தலைவர் சமில முன்னாள் தென் மாகாண அமைச்சர் அமரர் எம்.கே.ரஞ்சித் எனப்படும் சண்டிமல்லியின் சகோதரராவார். 2003-ம் ஆண்டு இடம்பெற்ற பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலான துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் சண்டிமல்லி கொல்லப்பட்டார்.

சண்டிமல்லி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு நெருக்கமானவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஜூன் மாதம் எம்பிலிப்பிட்டிய பிரதேச சபையின் தலைவர் சமில கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த சம்பவத்தினால் பிரசாந்த ஜெயகொடிக்கு பெரும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது சில அரசியல்வாதிகள் பிரசாந்த ஜெயகொடிக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-4)

## ஆட்டோ தடம்புரண்டு ஒருவர் படுகாயம்

வீதி அகலிப்புப் பணிக்காக குவிக்கப்பட்டிருந்த மண் குவியலின் மீதேறி முச்சக்கர வண்டி தடம் புரண்டதில் குடும்பப் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றிரவு 8 மணியளவில் அல்வாய் இலகடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் பருத்தித்துறை மருதடியினைச் சேர்ந்த விஜயகுமார் மாலினி (வயது-32) என்ற குடும்பப் பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

பருத்தித்துறை நெல்லியடி பிரதான வீதியில் நெல்லியடி நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் போதே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த பெண்மணி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீதிப் புனரமைப்பாளர்களின் கவனவீனமே இவ்விபத்திற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-4, 24)

## வெலிவேரிய உயிரிழப்பு மூன்றாக அதிகரிப்பு

வெலிவேரிய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது.

சுத்தமான தண்ணீர் வழங்குமாறு கோரி கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொதுமக்களுக்கும் இராணுவத்திற்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது.

இதன்போது காயமடைந்த 19 மற்றும் 17 வயதான இருவர் உயிரிழந்தனர். இந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மற்றுமொருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து வெலிவேரிய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)


**யாழ்.மாநகர சபை சைவசமய விவகாரக் குழுவினரால் நடாத்தப்படும் பேச்சுப்போட்டி-2013**

மேற்படி பேச்சுப்போட்டி இரண்டு பிரிவுகளாக நடாத்தப்படும்.
பிரிவு 1. வயது 10 தொடக்கம் வயது 15 வரை
பிரிவு 2. வயது 16 தொடக்கம் வயது 21 வரை

ஆகிய இரு பிரிவுகளில் ஆண், பெண் ஆகிய இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.

அனுமதி இலவசம்

போட்டி எதிர்வரும் 14.08.2013 புதன்கிழமை அன்று நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிபந்தனைகள்

1. பதிவுகளை தொலைபேசி மூலம் மேற்கொள்ளவும்.
2. எமது கலாசாரத்தை மேம்படுத்துவதை மையப்பொருளாக கொண்டு பேசவேண்டும்.
3. நேரம் 15 நிமிடங்களுக்குள் அமையவேண்டும்.
4. போட்டிக்கு நேரடியாக குறிப்பிட்ட திகதியில் சமுகமளிக்கவும்.
5. வயதினை உறுதிப்படுத்தும் ஆவணம் கொண்டு வரப்படவேண்டும்.
6. பதிவுகளை மேற்கொள்ளும் தொலைபேசி இல- 0212222275/0212222335

குறிப்பு:- ஒவ்வொரு பிரிவுக்கும் முறையே மூன்று பேருக்கு பெறுமதியான பரிசில் வழங்கப்படும். (இ)

THE ART OF LIVING

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி வழங்கும் சஹஜ் சமாதி தியானம்**

பயிற்சி வகுப்பு இன்று 05.08.2013 முதல் 07.08.2013 வரை

மாலை 6.30-8.30 மணி வரை

வாழும் கலை மையம், 254, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (C-4227)



பதிவு செய்ய அழைக்கவும் :-0775071363/0754303380

**பிள்ளையார் இன்**

சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும். 6 - 10 pm

12 மணிமுதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

சைவ உணவு [illegible]/- அசைவ உணவு 185/-

[illegible] வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829 (C-4221)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### தலைச் சுற்றல்

"சேர்! காலையிலே எழுந்திலிருந்து தலை சுற்றிக் கொண்டே இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே ஒருவர் இருந்தார்.

நிமிர்ந்து பார்த்தேன். அவர் தலை அப்படியேதான் இருந்தது. சுற்றவில்லை.

தலை நேராகத்தான் சேர் இருக்கிறது என்றேன்.

"உங்களுக்கு என்ன சேர்! கிண்டலாகத்தான் இருக்கும். அந்தந்த துன்பம் அவரவர்களுக்கு வந்தால் தான் புரியும்" என்றார்.

அது இருக்கட்டும் சேர். தலை கிறுகிறுப்பாக இருந்தால் ஏன் என்னைத் தேடி வந்தீர்கள் என்று கேட்டேன்.

" எல்லாம் காரியத்துடன்தான் வந்திருக்கிறேன். அதை பின்னர் கூறுகிறேன். இப்போது நீங்கள் எனக்கு சொல்லுங்கள் "என்று சொன்னார்.

என்ன சொல்ல வேண்டும் என்று கேட்டேன்.

"தலை சுற்றல் வருவதற்கு என்ன காரணம்?" என்று கேட்டேன்.

உடம்பினுள்ளே ஏதோவொரு கோளாறு நமக்கு இருப்பதை முன்கூட்டியே அறிவிப்பதாகக் கூறுவதுதான் இது.

BP என்று சொல்கிறோமே இரத்தக் கொதிப்பு; அது உடம்பிலே இருக்கிறதா என்பதை அடிக்கடி பரிசோதித்துப் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

இரத்தக்குழாய் தடித்து இருப்பதை அறிந்து கொண்டால் கொழுப்பு, இனிப்பு ஆகியவற்றை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

உங்களுக்கு புகைபிடிக்கும் பழக்கம் உண்டா? மதுப் பழக்கம் உண்டா? இப்படியெல்லாம் இருந்தால் தலை சுற்றல் இருக்கும். அந்தப் பழக்கத்தையெல்லாம் விட்டு விட்டால் இந்தத் தொந்தரவு இருக்காது.

இந்த உலகம் சுற்றிக் கொண்டே இருக்கிறது என்று ஒருவர் உங்களிடம் சொன்னால் உடனே அவர் பெரிய விஞ்ஞானி என்று நினைக்க வேண்டாம். ஏனென்றால் தண்ணீர் (சாராயம் குடிப்பவர்கள்) சாமிகளும் அப்படித்தான் சொல்வார்கள்.

சில பேருக்கு பித்தத்தினால் தலைச்சுற்று ஏற்படும். இதற்கு நமது வீட்டிலேயே மருந்து கிடைக்கும்.

இரசாயன தொழிற்சாலையிலே வேலை செய்கிற சிலருக்கு தலைசுற்றுவது வழமை. அங்கே இருக்கும் சூழல் ஒத்துக் கொள்வதில்லை. அதனாலே தலையிலே ஒரு கிறுகிறுப்பு தெரியும்.

சில பேர் எதுக்கெடுத்தாலும் உடனே ஒரு தூக்க மாத்திரையை தேடி செல்வார்கள். இல்லையென்றால் தலை வலி மாத்திரையை வாங்கிப் போட்டுக் கொள்வார்கள்.

தூக்க மாத்திரை, தலைவலி மாத்திரை இதையெல்லாம் அளவுக்கு அதிகமாக உபயோகிப்பவர்களுக்கு தலைசுற்றல் வரும்.

சிலருக்கு நரம்பு மிகவும் பலவீனமாக இருக்கும். அவர்களுக்குக்கூட இந்தப் பிரச்சினை இருக்கும். நரம்பு பலவீனத்தை சீர்செய்தால் இந்தத் தொந்தரவு சரியாகி விடும்.

நமது உடல் சீராக இருந்தால்தான் மனம் உற்சாகமாக இருக்கும். அதனால் கெட்ட பழக்கவழக்கங்களை விட்டுவிட்டால் வாழ்நாள் பூராகவும் துன்பம் இல்லாமல் சுறுசுறுப்பாக இருக்கலாம்.

இவ்வளவு விபரத்தையும் என்னிடம் வந்த அந்த தலை சுற்றல் ஆசாமியிடம் சொல்லி முடித்தேன் என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# தமிழக மீனவர் பிரச்சினை குறித்து மீண்டும் கடிதம் எழுதினார் ஜெயா

தமிழக மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் தொடர்பாக டில்லியில் உள்ள இலங்கை தூதரை அழைத்து கடுமையாக கண்டிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு கடிதம் ஒன்றை எழுதி அனுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் பிரதமருக்கு கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பிய கடிதத்தில் கூறியிருப்பதாவது,

தமிழக மீனவர்கள் கடந்த 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் மீன் பிடிக்க சென்ற போது, நடுக்கடலில் வைத்து அவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தி, அவர்களை சட்டவிரோதமாக கைது செய்தும் உள்ளதைத் தங்கள் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

இலங்கைக் கடற்படையினர் அவர்களை நடுக்கடலில் வைத்து பைப், அரிவாள் மற்றும் கொடூர ஆயுதங்களால் தாக்கி உள்ளனர். படு காயம் அடைந்த 5 மீனவர்களும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மீண்டும் 31 ஆம் திகதி 2 படகுகளில் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்த 16 மீனவர்களை இலங்கை கடற்படையினர் பிடித்து சென்றுள்ளனர். இலங்கை கடற்படையினர் தொடர்ந்து செய்யும் இந்த அட்டூழியம் மற்றும் சட்டவிரோத கைது நடவடிக்கைகள் சமீபகாலமாக அடிக்கடி இடம்பெறுவதை வேதனையுடன் தங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்திய அரசு இந்த விடயத்தில் தொடர்ந்து மௌனமாக இருப்பதால் தான் இலங்கை கடற்படையினர் துணிச்சலாக இத்தகைய அடாவடி செயல்களில் தொடர்ந்து ஈடுபடுகின்றார்கள்.

தமிழக மீனவர்களைப் பாதுகாக்கும் விடயத்தில் உயர் தூதரக தொடர்புகள் இருந்தும்கூட மத்திய அரசு தனது கடமையை செய்யாது தவறி இருப்பது எமக்கு மிகுந்த ஏமாற்றம் அளிப்பதாகவுள்ளது.

நான் பல தடவை இது தொடர்பாக தங்களுக்கு கடிதம் எழுதி உள்ளேன். அந்த கடிதங்களில் இலங்கை அரசுடன் உயர்மட்ட அளவில் பேச்சுவார்த்தை நடத்தி தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத்தடுக்கும் விடயத்தில் நடவடிக்கை தேவை என்பதை வலியுறுத் தியுள்ளேன்.

ஆனால் இந்த விவகாரத்தில் மத் திய வெளியுறவுத்துறை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதைத் தங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனவே மத்திய அரசு இந்த விவகாரத்தில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். டில்லியில்உள்ள இலங்கைத் தூதுவரை அழைத்து மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்களைத் தெரிவித்து அவரைக் கடுமையாக கண்டிக் கவும் வேண்டும்.

அதோடு இந்தியாவின் அழுத்தமான எதிர்ப்பையும் தெரிவிக்க வேண்டும். மத்திய அரசு இந்த விவகாரத்தில் உறுதியான நடவடிக்கை எடுக்காவிடின் அது தமிழ்நாட்டில் வாழும் மீனவ சமுதாய மக்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தி விடும்.

எனவே, இந்த விவகாரத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் இலங்கைச் சிறையில் வாழும் அப்பாவித் தமிழர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கையும் எடுக்க வேண்டும்.

இது விடயத்தில் தாங்கள் விரைந்து தலையிட்டு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## கரவெட்டியில் கவிதை செயலமர்வு

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கரவெட்டி பிரதேச செயலகத்தில் கவிதைச் செயலமர்வொன்று இடம்பெறவுள்ளது. இச் செயலமர்வு யாழ். மாவட்டத்திலுள்ள தகுதி வாய்ந்த வளவாளர்களைக் கொண்டு பத்து அமர்வுகளாக நடத்துவதற்கு திட்டமிடப் பட்டுள்ளது.

எனவே கரவெட்டி பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்வமுடைய வர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பு பிரதேச செயலகத்திற்கு நேரடியாக வருகை தந்தோ அல்லது 0212263258 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டோ தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 90-140 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 120 |
| தக்காளி | 60 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 |
| கோவா | 80 | 70 | 100 |
| கரட் | 120 | 160 | 140 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 30 | 30 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 120-160 | 140 |
| பெரிய வெங்காயம் | 110 | 110 | 100 |
| பாகற்காய் | 100 | 110 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 100 |
| பயற்றங்காய் | 40 | 40 | 60 |
| லீக்ஸ் | 120 | 100 | 140 |
| பீற்றூட் | 30 | 30 | 60 |
| கறிமிளகாய் | 60 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 60 | 40-80 | 100 |
| போஞ்சி | — | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | — | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 15-20 | 30 |
| தேசிக்காய் | 180 | 100 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 |

## இராசி பலன்

05.08.2013
(ஆடி 20, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 2.23 மணிவரை
புனர்பூசம் மாலை 6.46 மணிவரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை
சுபநேரம் 12.04-1.34 மணிவரை

**மேடம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** உடன் பிறப்புக்கள் மூலம் உள்ளம் மகிழும் செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தேக நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்** நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், தொழிலில் உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும், கரைந்த சேமிப்பை ஈடுசெய்யும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** சயன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, பணத்தால் பலன் கிடைக்கும், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், போசன நன்மையுண்டு.

**சிங்கம்** நண்பர்கள், உறவினர் நலன் கருதி சில செலவுகள் ஏற்படலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும், திடீர் பயணங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி** செல்வ நிலை உயரும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறலாம், இளைய சகோதரத்தின் வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், கௌரவமான நாள்.

**துலாம்** குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரபல்யமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள்.

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், சுற்றத்தாரின் வருகையுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, எதிர்பாராத பயணங்களால் நன்மையுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

**தனுசு** கவலைகள்தீர கற்பக மூர்த்தியை வழிபடவேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், செலவுகள் அதிகரிக்கும்.

**மகரம்** அபூர்வ சந்திப்புண்டு, தொழிலில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**கும்பம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், பயணங்கள் கைகூடும், முயற்சிகளில் முத்தான வெற்றிகிடைக்கும், சுவாரஸ்யமான நாள்.

**மீனம்** ஆசைகள் நிறைவேற ஆறுமுகனை வழிபடவேண்டிய நாள், பிள்ளைகளின் கல்வி நலன்கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள், தொழில் வளர்ச்சி அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலான் கடனட்டைகளில் இருந்து பிரமாண்டமான வணிக வெகுமதிகள்

செலான் வங்கி பி.எல்.சி. ஆனது, "செலான் அட்டைகள் பிரமாண்டமான வெகுமதிகள்" (Seylan Cards Mammoth Offers) எனும் தனது விற்பனை ஊக்குவிப்புத் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளது.

கடந்த ஜூலை 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதற்கொண்டு, செலான் வங்கியின் கடனட்டை வாடிக்கையாளர்கள் அனைவரும் ஒரு தொடரிலான பிரமாண்டமான அனுகூலங்கள் வழங்கி உபசரிக்கப் படவுள்ளனர்.

அதாவது சுப்பர் மார்க்கட் பொருட் கொள்வனவு முதல் - எரிபொருள் நிரப்புதல், ஆடைக் கொள்வனவு, உணவருந்துதல், ஹோட்டலில் தங்குதல், வெளிநாட்டுப் பயணம், சுகாதார சேவை வரையான இலங்கையின் அனைத்துப் பாகங்களையும் உள்ளடக்கியதான பல்வகைப்பட்ட வெகுமதிகள் வழங்கப்படவுள்ளன.

2013-ம் ஆண்டு ஓகஸ்ட் 31-ம் திகதி வரைக்கும் நடைமுறைப் படுத்தப்படும் இந்த ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் செலான் வங்கியின் கடனட்டை வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் நாடெங்கிலும் உள்ள உயர்தரமான ஹோட்டல்கள் மற்றும் தங்கு விடுதிகளில் தங்கியிருக்கும் வேளையில் 60 சதவீதம் வரையான கழிவினைப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறான ஹோட்டல்களுள் ஏடன் ஹோட்டல், அவானி - களுத்துறை, ஹோட்டல் சிகிரியா, கிளப் ஹோட்டல் டொல்பின் - நீர்கொழும்பு, செரண்டிப் ஹோட்டல், சிற்ட்ரஸ், ஓரியன்ட் ஹோட்டல் - பண்டாரவளை, டப்ரோ ஸ்பா - பேருவளை மற்றும் திஸ்ஸமஹாராம, அமாரா ஸ்கை, உடவளவ ரிசோர்ட்ஸ், டிக்வெல்ல ஹோட்டல், ர்ன்ன 212, லயா சபாரி, லயா பீச் மற்றும் லயா லெஷர் போன்றவையும் உள்ளடங்கும்.

ஆர்வமுள்ள செலான் வங்கியின் கடனட்டைப் பாவனையாளர்கள் பாதுகாப்பான பயணங்களை மேற்கொள்ள இயலுமாகவுள்ள அதே நேரம் கிளசிக் ட்ரவல்ஸ், ஜெட்விங் ஹொலிடேஸ், எய்க்கின் ஸ்பென்ஸ் ட்ரவல்ஸ் மற்றும் ஃபிளை இன்




ஸ்டைல் ஆகிய பயண சேவைகளில் மாதமொன்றுக்கு வெறுமனே ரூபா 3,500 செலவிடுவதன் வாயிலாக எந்தவொரு நாட்டிற்கும் பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

செலான் வங்கியின் கடனட்டை வாடிக்கையாளர்கள் கார்கில்ஸ், கீல்ஸ், ஆர்பிகோ, லாஃப்ஸ் மற்றும் ஏனைய சுப்பர் மார்க்கட் விற்பனை நிலையங்களில் வார இறுதி நாட்களில் மு.ப. 8.00 மணிமுதல் பி.ப. 8.00 மணி வரை பொருட் கொள்வனவை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு அலாதியான புது அனுபவம் கிடைக்கின்றது. இவ் விற்பனை நிலையங்களில் நீங்கள் ரூ.3,500இற்கு அதிகமான தொகையை கடனட்டையைப் பயன்படுத்தி செலவு செய்யும்போது 10% தள்ளுபடியை (அதிகபட்ச கழிவு ரூபா 1,000) கொண்டு வருகின்றது. அதேபோல், வரவு அட்டைகளின் மூலம் கொள்வனவை மேற்கொண்டால் 5 சதவீத (உயர்ந்தபட்ச கழிவு ரூபா 300) தள்ளுபடி கிடைக்கின்றது.

இதேவேளை, புதன் கிழமைகளில் எரிபொருள் நிரப்பும்போதும் அனுகூலங்கள் விஸ்தரிக்கப்பட்டு இருக்கின்றன. அதன்படி நாடெங்கிலும் உள்ள எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் கடனட்டை மூலம் ரூ.1,000 செலவு செய்து எரிபொருள் நிரப்பும்போது ஒவ்வொரு லீற்றருக்கும் ரூபா 10 (உயர்ந்தபட்ச கழிவு ரூபா 1,000) தள்ளுபடியும், வரவு அட்டையைப் பயன்படுத்தி நிரப்பினால் ரூபா 5 (உயர்ந்தபட்சம் ரூ. 300) தள்ளுபடியும் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கின்றது.

வெள்ளிக் கிழமைகளில் உங்களுக்கு விருப்பமான எந்தவொரு இடத்திற்கும் சென்று உணவு சாப்பிடுவதன் மூலம் வார இறுதியை நீங்கள் ஆரம்பியுங்கள். இதன்போது 20 சதவீத தள்ளுபடி உங்களுக்கு வழங்கப்படும். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ரூபா 5,000 இனைச் செலவளிக்க வேண்டியது மட்டுமே. (உயர்ந்தபட்சமாக ரூபா 2,000 கழிவாக கிடைக்கும்)

சுப்பர் மார்க்கட் கொள்வனவு, எரிபொருள் நிரப்புதல் மற்றும் உணவருந்துதல் போன்ற கொடுக்கல் வாங்கல்களுக்கான தள்ளுபடித் தொகையானது கடனட்டை பாவனையாளரின் செப்டெம்பர் மாத வங்கிக் கூற்று பட்டியலில் வரவு வைக்கப்படும்.

ஆடை மற்றும் அணிகலன்கள் கொள்வனவுக்கு செவ்வாய், வியாழன், சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் வெகுமதிகளை பெற்றுக் கொள்கின்றன. மேற்படி தினங்களில் ஹமீடியா, கூல் பிளானட், கியோர்டானோ, டில்லிஸ் அன்ட் கர்லோ, மதர் கெயார், சஃப் பன்ஸ், மல்லிகா ஹேமச்சந்திர. லக்ஷ்மிஸ், பெவேர்லி ஸ்ரீற், கிட்ஸ் அன்லிமிட்டட், ஸ்டோன் என் ஸ்ட்ரிங் போன்ற பல முன்னணி விற்பனை மையங்களில் ஆடைகளை கொள்வனவு செய்யும் வேளையில் 20 சதவீத கழிவு கிடைக்கப்பெறும்.

அதுமட்டுமன்றி லங்கா ஹொஸ்பிட்டல்ஸ், ஆசிரி ஹொஸ்பிட்டல்ஸ், டேர்டன்ஸ் ஹொஸ்பிட்டல் மற்றும் செலிங்கோ ஹெல்த் கெயார் ஆகிய வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படும் அவசர மருத்துவ சிகிச்சைகளுக்கு 45 சதவீதம் வரையிலான கழிவினையும் செலான் வங்கியின் கடனட்டை வழங்குகின்றது என செலான் வங்கியின் தனிநபர் வங்கியியல் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் திஸ்ஸ நாணயக்கார தெரிவித்தார்.

## செலான் வங்கி 1 பில். இலாபம்

சவால்மிக்க வெளிப்புற சூழலுக்கு மத்தியிலும் செலான் வங்கியானது, 2013 ஜூன் 30 திகதியன்று முடிவடைந்த 6 மாத காலப்பகுதியில் வருமான வரிக்கு முன்னரான இலாபமாக ரூ.1,483 மில்லியனை பெற்றுக்கொண்டதன் மூலம் மற்றுமொரு மனதில் பதியத்தக்க நிதிச் செயற்பாடுகளை நிலைநாட்டியுள்ளது.

இந்த முதலாம் அரையாண்டில் வரிக்குப் பின்னரான இலாபம் ரூபா 1,002 மில்லியனை எட்டியுள்ளதுடன், 2012இன் தொடர்புபட்ட முதல் 6 மாதங்களிலும் பெறப்பட்ட ரூபா 960 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 4.32% அதிகரிப்பையும் பதிவு செய்துள்ளது.

LKAS / SLFRS விதிமுறைகளுக்கு அமைவாக இடைக்கால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

தங்கத்தின் விலைகளில் ஏற்பட்ட கடுமையானதும் நிலையானதுமான வீழ்ச்சியின் விளைவாக, அடகு பிடித்தல் சேவைத் தளத்தில் தாக்கம் ஏற்பட்டதுடன், கடன்பெறுவதில் மந்த நிலை காணப்பட்டது.

அதேநேரம் வட்டிவீத எல்லைகள் மீதான அழுத்தம் துறை வாரியாக காணப்பட்டது மட்டுமன்றி, இதனால் 2013 ஜூன் 30 இல் முடிவடைந்த 6 மாதங்களுக்கான தேறிய வட்டி வருமானமானது ரூபா 4.33 பில்லியனாக 3% இனால் வீழ்ச்சியடைந்தது.

எவ்வாறிருந்த போதிலும், மேற்படி நிலைமையை ஓரளவுக்கு எதிரீடு செய்யக்கூடிய விதத்தில் வங்கி தனது வழக்கைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.




# வெளிநாட்டு முதலீட்டாளர் பங்கு விற்பனையில் ஆர்வம்

கடந்த வார இறுதிப்பகுதியில் உள்நாட்டு சிறு முதலீட்டாளர்களின் அதிகளவு சந்தை ஈடுபாட்டின் காரணமாக பங்குச் சந்தையின் பிரதான சுட்டிகள் உயர்வடைந்த நிலையில் பதிவாகியிருந்தன.

ஆனாலும் கடந்த வெள்ளிக் கிழமை, வியாழக்கிழமையுடன் ஒப்பிடுகையில் பிரதான சுட்டெண் 0.78 புள்ளிகள் சரிவடைந்து எதிர் பெறுமதியில் நிறைவடைந்திருந்ததுடன், S&P சிறிலங்கா 20 சுட்டி 13 புள்ளிகள் அதிகரித்து நிறைவடைந்திருந்தது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகளவு பங்கு விற்பனையில் கடந்த வாரம் ஆர்வம் செலுத்தியதை அவதானிக்க முடிந்ததுடன், சிலோன் டுபாக்கோ, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், வட்டவளை பிளான்டேஷன், கொமர்ஷல் வங்கி, சம்பத் வங்கி, சன்சைன் ஹோல்டிங்ஸ், எயிட்கன் ஸ்பென்ஸ் போன்ற நிறுவனங் களின் பங்குகளின் கடந்த வாரம் பெருமளவு ஆதிக்கம் செலுத்தியிருந்தன.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும்பொழுது, அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 6,155.82 ஆகவும், S&P சிறிலங்கா 20 சுட்டி 3490.57 ஆகவும் அமைந்திருந்தன.

ஜூலை 29ஆம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ. 4,005,800, 509 அமைந்திருந்தது.

கடந்த வார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் சிலோன் டொபாக்கோ, குட் ஹோப், செரண்டிப் லாண்ட், சிட்ரஸ் ஹிக்கடுவ மற்றும் ஹியுஜே போன்றன முதல் ஐந்து சிறந்த இலாப மீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

மெட்.ரெஸ்.ஹொ, மொரிசன்ஸ், ஃபின்லேஸ் கொலம் போ, அனிலங்கா ஹோட்டல்ஸ் மற்றும் ஆசிரி சென்ரல் போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு நட்டமீட்டியதாக பதிவாகியிருந்தன.

# ஆக்சியாடா நிறுவன முதலீடு இலங்கையில் 1.5 பில். டொலர்

மலேசியாவின் ஆக்சியாடா நிறுவனத்தின் மூலம் இலங்கையின் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகளின் பெறுமதி 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கவுள்ளதென நிறுவனம் அறிவித்துள்ளது.

அண்மையில் இலங்கை முதலீட்டு சபையுடன் மேற்கொண்டுள்ள 150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஃபைபர் ஒப்டிக் வலையமைப்பு விஸ்தரிப்புக்கான முதலீட்டு உடன்படிக்கைக்கு அமைய இந்த 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மொத்த பெறுமதி எய்தப்படவுள்ளது.

இலங்கையில் ஆக்சியாடா நிறுவனம், டயலொக் நிறுவனத்தின் உரிமையாண்மையை கொண்டுள்ளதுடன், இலங்கை யின் மிகப்பெரிய மொபைல் தொலைத்தொடர்பு வலையமைப்பை கொண்டுள்ளதுடன், நிலையான தொலைபேசி மற்றும் கட்டணம் செலுத்தி பார்வையிடும் தொலைக்காட்சி நாளிகை சேவைகளையும் வழங்கி வருகிறது.

இலங்கையின் மிகப்பெரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டாளர்களாக ஆக்சியாடா நிறுவனம் திகழ்கிறது

# வரி வருமானம் அதிகரிக்கிறது

## ஜெயசுந்தர தகவல்

இலங்கையின் வரி வருமானம் தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. இதற்கு நிலையான சுங்க வசூலிப்பு நடவடிக்கைகள் பங்களிப்பை வழங்கி வருகின்றன என திறைசேரியின் செயலாளர் நாயகம் பி.பீ.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வருமானம் கடந்த ஏப்ரல் மாதம் வரையில் மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டது. ஆயினும் ஏப்ரல் மாதத்தை தொடர்ந்து, இறக்குமதியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையால் இந்த நிலை ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் முன்னேறி காணப்பட்டது. வாகன இறக்குமதியில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பும் இந்த வருமான அதிகரிப்பில் பங்களிப்பு செலுத்தி வருகிறது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார

# CBL விருது வழங்கும் நிகழ்வு



தமது விற்பனை குழுவினரின் சிறப்பான செயற்பாடுகளை கௌரவிக்கும் வகையில் இலங்கை சொக்லட் துறை முன்னோடியான சிலோன் பிஸ்கட் லிமிடெட் நிறுவனமானது, "2012/13 வருடாந்த விநியோகஸ்தர் மாநாடு மற்றும் விற்பனை நட்சத்திர விருது" வழங்கும் நிகழ்வை அண்மையில் கொழும்பில் நடத்தியது.

இந் நிகழ்வில் CBL விற்பனை குழுவில் சிறப்பாக செயலாற்றியவர்கள் மற்றும் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக CBL தயாரிப்புகளை விற்பனை செய்துவரும் விநியோகஸ்தர்கள் போற்றி கௌரவிக்கப்படடனர். இந் நிகழ்வில் நாடுபூராகவுமுள்ள விநியோகஸ்தர்கள், விற்பனை குழு உறுப்பினர்கள், குழுமப் பணிப்பாளர்கள், வெளிநாட்டு வர்த்தக பங்காளர்கள் மற்றும் CBL நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர்கள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

CBL குழுமத்தின் வர்த்தக நாமங்களிடையே லங்கா சோய், சமபோஷ, மஞ்சி மற்றும் றிட்ஸ்பரி ஆகியன விற்பனையில் உயர் சாதனை படைத்தன. சிபிஎல் விற்பனை குழுவினர் கடந்த வருடம் க்ராக்கர், வேஃபர்ஸ், மாரி மற்றும் லெமன் பஃப் ஆகிய வர்த்தக நாமங்களை சந்தை முன்னோடியாக தக்கவைப்பதில் சாதனை படைத்தனர்.

இந் நிகழ்வில் மஞ்சி, றிட்ஸ்பரி, சமபோஷ மற்றும் லங்கா சோய் வர்த்தகநாமங்களின் கீழ் பல புதிய தயாரிப்புகள் அறிமுகம் செய்யப்பட்டன.

# உடன்படிக்கை

இலங்கை மற்றும் இந்தியா நாடுகளுக்கிடையில் சிறிய மற்றும் மத்தியளவு ஆடைத்தொழில் துறையை ஊக்குவித்து விஸ்தரிக்கும் நோக்கில் இரு நாடுகளுக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்தியாவின் ஆடைத்தொழில் துறை அமைச்சு மற்றும் இலங்கையின் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சு ஆகிய இரு நாட்டு பிரதிநிதிகளுமஇந்த உடன்படிக்கையில கைச்சாத்திடவுள்ளமை குறிப்பிடத்தக்கது

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 130.02 | 133.22 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 196.06 | 201.82 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 170.88 | 176.61 |
| சுவிஸ் பிராங் | 137.75 | 143.09 |
| கனேடிய டொலர் | 124.86 | 129.40 |
| அவுஸ்திரேலிய டொலர் | 114.95 | 119.45 |
| சிங்கப்பூர் டொலர் | 101.39 | 104.93 |
| ஜப்பான் யென் | 1.30 | 1.34 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.17 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.82 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மஹோற்சவம், எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளன.

இம் மஹோற்சவத்தில் 14 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 8 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த் திருவிழாவும் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு சமுத்திரத் தீர்த்தமும் இடம்பெறவுள்ளன. (அ-5)

# சட்டவிரோதமாக மலேசியா சென்ற 44 பேர் கடலில் மூழ்கி உயிரிழப்பு

(கோலாலம்பூர்)

இந்தோனேசியாவில் இருந்து சட்டவிரோதமாக மலேசியாவுக்கு கப்பலில் சென்ற 44 பேர் கப்பல் மூழ்கி உயிரிழந்ததாக அஞ்சப்படுகின்றது.

இந்தோனேசியாவில் இருந்து வேலை வாய்ப்புத் தேடி 44 பேர் மலேசியாவுக்கு ஒரு கப்பலில் கடந்த வியாழக்கிழமை சென்று கொண்டிருந்தனர். அன்று நள்ளிரவில் இராட்சத அலைகள் தாக்கியதில் அந்தக் கப்பல் மலேசியாவின் ஜோஹோர் மாநிலம் டான்ஜுங் சியாங் பகுதியில் கவிழ்ந்தது.

இதில் தப்பிய 3 பேர் பிளாஸ்டிக் ரம்களைப் பிடித்த படி கடலில் தத்தளித்தனர். அவர்களை மீனவர்கள் மீட்டபோதுதான் இந்தச் சம்பவம் வெளியுலகிற்குத் தெரிய வந்தது. கப்பல் விபத்தில் இருந்து உயிர்தப்பிய மற்றொருவரை மலேசிய கடல்சார் பாதுகாப்பு அமைப்பு மீட்டுள்ளது.

கப்பலில் இருந்த பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகளாவர். அவர்கள் அனைவரும் கடலில் மூழ்கி இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இவ்விபத்து நடந்த கடல் பகுதியில் 2 கப்பல்கள், 4 விரைவுப் படகுகள் மற்றும் 2 உலங்குவானூர்திகள் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் காணாமல் போன பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட யாரையும் கண்டறிய முடியவில்லை என்றும் மலேசிய கடல்சார் பாதுகாப்பு அமைப்பின் அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-2)

# 8 ஆண்டுகளின் பின் நிர்வாகத் தெரிவு

புங்குடுதீவு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய நிர்வாக சபை 8 ஆண்டுகளின் பின் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிர்வாக சபை தெரிவுக்கான பொதுச் சபைக்கூட்டம் கடந்த மாதம் 22 ஆம் திகதி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள கேட்போர் கூடத்தில் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தர்மகர்த்தா சபை நிரந்தர போஷகர்களாக இ.இரவீந்திரகுமார், ச.சத்திரவேல் ஆகியோரும் ஆலய தர்மகர்த்தா சபை போஷகர்களாக அ.இலங்கைநேசன், ப.தயாபரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நிர்வாக சபையில் தலைவராக செ.யுகேந்திரன், உபதலைவராக மா.லிங்கநாதன், செயலாளராக சி.க.லட்சுமணன், உப செயலாளராக செ.இரவீந்தின், பொருளாளராக மு.மு.நடராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-5)

# பிரி.படைவீரர்களின் கல்லறையை அகற்றுவது தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

கண்டி ஸ்ரீ தலதாமாளிகைக்கு அருகாமையில் அமைந்துள்ள பிரித்தானிய படைவீரரின் கல்லறையை அகற்றுவது தொடர்பில் விவாதங்கள் இடம்பெற்று வருவதாக கலாசார அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

1815 ஆம் ஆண்டு அம்மை நோய் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்த பிரித்தானிய படை வீரர்களின் 147 உடல்கள் இந்த மயான பூமியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்த மயான பூமி பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை எதிர்வரும் நவம்பர் மாதம் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டிற்காக இலங்கைக்கு வருகை தரும் பிரித்தானிய இளவரசர் சாள்ஸ் இந்த மயான பூமிக்கும் விஜயம் செய்யவுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையிலேயே இந்த கல்லறைகளை அகற்றுவதா இல்லையா என்பது குறித்து விவாதங்கள் இடம்பெற்று வருவதாக கலாசார அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# கோணேஸ்வர கடற்பரப்பில் மீனவர்கள் மீது தாக்குதல்

(திருகோணமலை)

திருகோணமலை கோணேஸ்வர கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மூன்று மீனவர்கள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

இதன்போது மீனவர்களின் 300 கிலோ மீன்களையும் அவர்கள் பறிமுதல் செய்துள்ளனர்.

அத்துடன் தாக்கப்பட்டவர்கள் சிகிச்சைக்காக கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது கொக்குவில் காமாட்சி அணி

கே.பி.கே. சமூக சேவை அமைப்பினால் யாழ். மாவட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட மாபெரும் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் கொக்குவில் காமாட்சி அணி வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

தும்பளை, மாதனை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள மைதானத்தில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற மேற்படி இறுதிப்போட்டியில் கரவெட்டி ஞான ம்ஸ் அணியை எதிர்த்து கொக்குவில் காமா ட்சி அணி களமிறங்கியது.

15 பந்து பரிமாற்றங்கள் கொண்ட இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய காமாட்சி அணி 15 பந்து பரிமாற்றங்கள் முடிவில் 9 இலக்குகளை இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் கஜீ 18 ஓட்டங்களையும் சிந்துஜன் 16 ஓட்டங்களையும் மயூரன், ஆதவன் ஆகியோர் தலா 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் நிரூபன் 3 இலக்குகளையும் அனு சயந்தன், குணதீபன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 102 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 15 பந்து பரிமாற்றங்கள் முடிவில் 9 இலக்குகளை இழந்து 94 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. இதில் ஜொனி 25 ஓட்டங்களையும் அனுசயந்தன் 21 ஓட்டங்களையும் அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் கஜீ, நிஷாந்தன் ஆகியோர் தலா 3 இலக்குகளையும் அகஜன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். இதன்மூலம் கொக்குவில் காமாட்சி அணி 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. இறுதிப் போட்டி ஆட்டநாயகனாக காமாட்சி அணியின் கஜீ மற்றும் தொடர் ஆட்ட நாயகனாக அதே அணியின் ரஜீகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ-5)

# 427 பாடசாலைகளிலும் சுகாதார குழுக்கள் வலுப்படுத்தப்படவுள்ளன

## யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர்

யாழ்.மாவட்டத்திலுள்ள 427 பாடசாலைகளிலும் சுகாதார மேம்பாட்டுக் குழுக்கள் வலுப்படுத்தப்படவுள்ளன என யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர். கேதீஸ்வரன் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் வளமான, ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்காகவே வலுப்படுத்தல் நடவடிக்கையை எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். ஆகையால் மாணவர்கள் சிறுவயதில் ஆரோக்கியமாக இருந்தால்தான் எதிர்காலத்தில் கல்வியிலும் சரி சமுதாயத்திலும் சரி மிளிரமுடியும்.

பாடசாலைகளில் சுகாதாரசேவைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வருடத்தில் யாழ்.மாவட்டத்தில் 400 வரையிலான பாடசாலைகளில் இவ்வேலைத் திட்டம் நடைபெற்றுள்ளன.

இன்னும் 27 பாடசாலைகளில் இவ் வேலைத்திட்டம் நடைபெறவுள்ளன.

வேலைத்திட்டங்களின் போது குறைபாடுகளையுடைய மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு தகுந்த சிகிச்சையளித்து உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்த வழி செய்யவுள்ளோம் என்றார். (அ-2)

# இனம் தெரியாதோர் ஆசிரியர் மீது தாக்குதல்

மாலுசந்தி வீதியின் அப்பாப் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள ஒழுங்கையில் இனந்தெரியாத நான்கு பேர் கொண்ட குழுவினரால் ஆசிரியர் ஒருவர் தாக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 6.45 மணியளவில் இடம் பெற்றுள்ளது. ஆறுமுகம் சண்முகநாதன் (வயது 45) என்ற ஆசிரியர் அவ்வீதியால் பயணித்துக் கொண்டிருந்த போது இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார். மயக்க நிலையில் கிடந்த அவரை அயலவர்கள் கண்டு மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இது தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-9-60)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து(V)<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>4உயரம்: 5'6" கி.பா: 47.25<br>தகைமை/தொழில்: O/L பந்தல் சேவை<br>தொ.இ:B2144 | பிறப்பு: 1985 இந்து(V)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>உயரம்: 5'6"<br>கி.பா : 54.5 சூ,செ 8<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ:G2182 |
| பிறப்பு: 1979 இந்து(V)<br>நட்சத்திரம்: புனர்புசம்<br>4உயரம்: 5'8" கி.பா:23<br>தகைமை/தொழில்: BSc(Agri)விவசாய உத்தியோகத்தர்<br>தொ.இ:B2146 | பிறப்பு: 1987 இந்து(V)<br>நட்சத்திரம்: அவிட்டம் 1கி.பா :27 சூ,செ 2 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBBS(Final Year)<br>தொ.இ:G2183 |
| பிறப்பு: 1981 இந்து(குருகுலம்)<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா : 42 செவ் 2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BFA ஆசிரியர்<br>தொ.இ:B2152 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா :12 சூ,செவ் 11<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BIT<br>தொ.இ:G2184 |
| பிறப்பு: 1970 இந்து(V)<br>நட்சத்திரம்: பூசம் 2<br>உயரம்: 5'9"<br>கி.பா : 23 சூ,செவ் 10<br>தகைமை/தொழில்:Multi Business<br>தொ.இ:B2154 | பிறப்பு: 1985 இந்து(V)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா : 61.5 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BAஆசிரியர்<br>தொ.இ:G2187 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதியர்களுக்கான கடன் வழங்கும் திட்டம்

(பருத்தித்துறை)

நெல்லியடி பான் ஏசியா வங்கியால் ஓய்வூதியர்களுக்கு கடன் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் ஓய்வூதியம் பெறும் தொகைக் கேற்பவே கடன் வழங்கப்படவுள்ளது.


இதன்படி, கடனைப் பெறுவதற்காக 30 இற்கும் மேற்பட்ட ஓய்வூதியர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

ஆகக் கூடிய கடனாக 5 இலட்சம் ரூபா வழங்கப்படும் என வங்கியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, கடனைப் பெற்றுக் கொள்ள பிணை நிபந்தனைகள் எதுவுமில்லை. எனினும் ஓய்வூதியர்கள் ஓய்வூதியத்தை மேற் குறித்த வங்கிக்கு மாற்றியமைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இம் மாதத்திற்கான ஓய்வூதியம் வழங்கப்பட்ட பின்னர் கடன் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-10)



நன்றி:-ஐலன்ட்

# தேர்தல் வன்முறைகள் தொடர்பில் முறையிட்டால் மட்டுமே நடவடிக்கை

## பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்ரி

(யாழ்ப்பாணம்)

**தேர்தல் வன்முறைகள் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டால் மட்டுமே நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்ரி தெரிவித்தார்.**

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் முறைப்பாடுகள் ஏதும் பதிவு செய்யப்பட்டுள்ளனவா? என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் கச்சேரியில் சில கட்சிகளின் வேட்புமனுத்தாக்கலின் போது பட்டாசு வெடிக்கப்பட்டது. இதனால் போக்குவரத்தில் பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

மேலும் தேர்தல் வன்முறைகள், முறைகேடுகள் தொடர்பில் முறையிடுவதற்கென தனியான பொலிஸ் பிரிவு ஒன்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப் பிரிவின் மூலம் யாழ்.மாவட்டத்தில் நடைபெறுகின்ற அனைத்துவிதமான தேர்தல் வன்முறைகள் தொடர்பிலும் விசாரணைகள் நடைபெறும்.

யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக யாழ்ப்பாண பொலிஸாரினால் பாதுகாப்பு தடைகள் இடப்பட்டு பாதுகாப்பு பணிகள் இடம் பெற்றுவருகின்றன.

இப்பகுதிக்குள் பட்டாசு வெடிப்பதற்கோ ஆரவாரங்களில் ஈடுபடுவதற்கோ யாழ். மாவட்ட கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுகளுக்கு பொலிஸாரின் அனுமதி வழங்கப்படவில்லை.

எனினும் அவ்வாறு மீறி ஏதாவது சம்பவங்கள் நடைபெறுமாயின் அது தொடர்பில் எமக்கு முறைப்பாடு செய்தால் நாம் நடவடிக்கை எடுப்போம். எவராவது பாட்டாசு கொளுத்தும் நிலை ஏற்படின், உடனடியாக பட்டாசு விற்பனை தடை செய்யப்படும்.

எல்லாவற்றையும் நாம் பார்த்து கொள்ள முடியாது. திருவிழாக்கள், கொள்ளைகள் என அனைத்திற்கும் குறைந்தளவிலான பொலிஸாரை வைத்தே நாம் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

பொலிஸாருக்கும் தற்போது வேலைப்பளு அதிகம். ஆகையால் சிறுவிடயங்களை பெரிதுபடுத்தாமல் புரிந்துணர்வுடன் செயற்படல் வேண்டும்.

வடக்குத் தேர்தல் தொடர்பிலீ பொலிஸாராகிய நாம் அக்கறையுடன் தான் செயற்பட்டு வருகின்றோம்.

ஆகையால், மேற்குறியபடி சிறுவிடயங்களை பெரிது படுத்தாமல் புரிந்துணர்வுடன் அனை வரும் செயற்படல் வேண்டும் என்றார் அத்தியட்சகர். (அ-4)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

புதிய உயர் மின் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக குறிப்பிட்ட தினங்களில் குறித்த பகுதிகளில் மின்தடை அமுலிலிருக்குமென யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித் துள்ளார்.

இதன்படி இன்று திங்கட்கிழமையும், தொடர்ந்து வரும் இரு நாட்களிலும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரையும் சரசாலை, மட்டுவில் பிரதேசங்களிலும் வாதரவத்தை, வீரவாணி, புத்தூர் ஆகிய இடங்களிலும் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை, 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணிவரையும் சரசாலை, மட்டுவில் பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# காட்டு வேம்படி வீதியை புனரமைக்குக

(தும்பளை)

அச்சுவேலி கதிரிப்பாய் காட்டு வேம்படி வீதி, சுமார் 30 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படவில்லையென மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்பொழுது இவ் வீதி குன்றும்குழியுமாக காணப்படுவதால் போக்குவரத்தை மேற்கொள்வதில் பணிகள் அசௌகரியங்களை சந்திக்கின்றனர்.

இதனை கருத்திற் கொண்டு மேற்படி வீதியை புனரமைக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ-9-19)

# மயானத்தை புனரமைக்குக

(பருத்தித்துறை)

துன்னாலை வல்லிபுர வீதியிலுள்ள தியான் மயானம் எவ்வித புனரமைப்பு வேலைகளும் செய்யப்படாது காணப்படுகின்றது.

மேற்படி மயானத்திற்கு சுற்று மதில்கள் அமைக்கப்பட்டு வந்த நிலையில் அவ்வேலையும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இம் மயானம் கவனிப்பாரற்று காணப்படுவதால் அங்குள்ள மடம் பயன்படுத்தமுடியாதளவுக்கு சேதமடைந்துள்ளது. இதனால் சடலங்களை தகனம் செய்யச் செல்பவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, மயானத்தை சீர் செய்து வழங்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-9-10)



யாழ்.மாவட்டத்தில் 512 ஆவது இராணுவப் படைப்பிரிவின் கட்டுப்பாட்டின் கீழ் அரியாலை பகுதியிலிருந்த 35 வீடுகளும் 6 காணித்துண்டுகளும் அண்மையில் உரிமையாளர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன. இதன்போது யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் காணிகள் மற்றும் வீடுகளுக்கான ஆவணங்களைக் கையளிப்பதையும் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, மேலதிக அரசாங்க அதிபர் றூபினி வரதலிங்கத்திடம் ஆவணங்களை கையளிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவ கால சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை ஒன்றியமும் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோயிலும் இணைந்து நடத்தும் இவ்வாலயத்தின் மஹோற்சவகால சிறப்பு சொற்பொழிவு எதிர்வரும் 10 ஆம்திகதி சனிக்கிழமை முதல் 19 ஆம் திகதி வரை தினமும் இரவு 7 மணிமுதல் 8 மணிவரை கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தீவக பிரதேச யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை ஒன்றியத்தின் உப செயலாளர் கோ. சிவகாந்தன் தலைமையில் நடைபெறும் இச்சிறப்புச் சொற்பொழிவில் பிரதம விருந்தினராக இந்து கலாசாரத் திணைக்களத்தின் இந்து அபிவிருத்தி உதவியாளர் திருமதி ஜெயந்திரகுமார் உதயகலா கலந்து கொள்ளவுள்ளார்.


இந்நிகழ்வுக்கான ஆசியுரையை யாழ். சின்மயா மிஷனின் பிரம்மசாரி யாக்ரத் சைத்தன்ய சுவாமிகள் வழங்கவுள்ளதோடு வாழ்த்துரையை யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை ஒன்றிய ஆலோசகர்மா.ந. பரமேஸ்வரன் வழங்கவுள்ளனர்.

சிறப்புச் சொற்பொழிவுகளை 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதிவரை முறையே வரம் தரு சித்தி விநாயகர் என்றும் தலைப்பில் சைவப்புலவர் நித்தியதசிதரன், சத்தியின் பெருமை என்னும் தலைப்பில் சைவப்புலவர் கைலைநாதன், நாயன்மார் காட்டிய நன்னெறி எனும் தலைப்பில் சைவப்புலவர் கமல்நாதன், கௌசிகா தேவி என்றும் தலைப்பில் சைவப்புலவர் நித்திய தசிதரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ-5)

# வயிற்றுப் பிழைப்புக்காகவே பலர் அரசியல் நடத்துகின்றனர்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)



**வயிற்றுப் பிழைப்புக்காகவே இன்று பலர் அரசியல் நடத்தி வருவதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன குறிப்பிட்டுள்ளார். தம்புள்ள பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.**

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் இன்று அரசியல் செய்வோரின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது.

பலர்வயிற்றுப் பிழைப்புக்காகவே அரசியல் நடத்துகின்றனர். அரசியல் என்பது இரண்டு பக்கங்களிலும் வெட்டும் இயல்புடைய ஒரு கூரிய ஆயுத மாகும்.

அதனைக் கொண்டு நல்லதும் செய்யலாம். கெட்ட நோக்கங்களையும் பூர்த்தி செய்து கொள்ள முடியும். குட்டையான ஆடையணிந்த தனது மகளுக்கு தண்டனை வழங்கிய ஆசிரியையைத் தண்டித்த அரசியல் வாதிகளை மக்கள்தான் அரசியலுக்கு கொண்டு வந்தனர்.

மகள் குட்டையான ஆடையணிந்தமைக்காக ஆசிரியையை மண்டியிடச் செய்யாது மகளின் அம்மாவையே மண்டியிடச் செய்திருக்க வேண்டும்.

பணத்திற்காக கொலை செய்யும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களும் நாட்டில் இருக்கிறார்கள். சில அரசியல்வாதிகளின் வருமான விபரங்கள் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவிடமே உள்ளன.

வருமான வரித் திணைக்களத்தினாலும் அவர்களது வருமான விபரங்களை வெளியிட முடிவதில்லை.

நாட்டில் இன ஐக்கியத்தை கட்டியெழுப்ப அனைத்து இன மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கருத்துரைக்கையில்,

புதிய தலைவர் ஒருவரை அறிவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

வயதுக்கு ஏற்றவாறு கட்சி எனக்கான பொறுப்புக்களை வழங்கும். கியூபாத் தலைவர் பிடெல் காஸ்ட்ரோ ஜனாதிபதி மற்றும் கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகி தன்னால் முடிந்த பொறுப்புக்களை மட்டும் மேற்கொண்டு வருகின்றார்.

கட்சியின் பொதுச் செயலாளர், ரில்வின் சில்வாவா? அல்லது வேறு ஒருவரா? என்பது கட்சி பொதுச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக் கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# எதிர்காலத்தில் மனிதர்கள் மனநோயால் உயிரிழக்கலாம்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் மனிதர்கள் உயிரிழக்க காரணமாக அமையும் விடயங்களில் மன நோயும் ஒன்றாக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக சர்வதேச ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அங்கொட தேசிய மனநோய் மருத்துவமனையில் நேற்றைய தினம் ஆரம்பமான ஆசிய உளவியல் நிபுணத்துவ மருத்துவர்களின் 4 ஆவது மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

மனநோய் சிகிச்சைக்கான மருத்துவர்கள் மற்றும் ஏனைய ஊழியர்களின் பாரிய தட்டுப்பாடு இதற்கு காரணமாக அமையலாம். இலங்கையில் மனநோய் மருத்துவர்களுக்கும் ஊழியர்களுக்கும் பெரும் தடடுப்பாடு காணப்படுகிறது.

இலங்கையில் இருந்து ஆயிரக்கணக்கான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறி வேறு நாடுகளுக்கு சென்று விட்டனர்.

உளவியல் மருத்துவ கொள்கைகளின் கீழ் மனநோயினால் பாதிக்கப்பட்ட சகல நோயாளர்களுக்கும் சிறந்த மருத்துவ சேவையை வழங்க வேண்டியது எமது கடமை என அமைச்சர் தெரித்தார். (அ-2)

# சீட்டுக்காசை செலுத்த முடியாத பெண் தூக்கிட்டு தற்கொலை

சீட்டுக்காசை வழங்க முடியாமையால் 8 பிள்ளைகளின் தாயொருவர் தற்கொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.சுதுமலை வடக்கு மானிப்பாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த வசந்தராசா விக்னேஸ்வரி (வயது 46) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின்பு நேற்று முன்தினம் காலை சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவரது மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

விசாரணையின் போது அப்பெண்ணிடம் சீட்டுக்காசை பெறுவதற்காக அவரது வீட்டுக்கு முற்பகல் 10 மணியளவில் சில நபர்கள் வந்ததாகவும் இதன்போது அந்தப்பெண் வீட்டிற்குள் சென்று கதவைப் பூட்டிவிட்டு இருந்ததாகவும் தெரியவருகின்றது.

அவ்வாறு வந்த நபர்கள் பிற்பகல் 3 மணிவரை அங்கிருந்து நகராத காரணத்தால் அந்தப் பெண்ணும் வீட்டுக்குள்ளேயே இருந்துள்ளார். இந்நிலை தொடர்கையில் வீட்டின் கதவை உறவினர்கள் உடைத்த போது அப்பெண் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட் டுள்ளார் என விசாரணையில் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-6)

# ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளும் திட்டமில்லை

## சஜித் எம்.பி. தெரிவிப்பு

ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளும் திட்டமில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கட்சியின் மீது ஏற்பட்ட அதிருப்தி காரணமாக அரசாங்கத்தில் இணைந்து கொள்ள உள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து கொண்டே உரிமைகளுக்காக குரல் கொடுக்கப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மக்களால் வழங்கப்பட்ட ஆணைக்கு அனைத்து அரசியல்வாதிகளும் அடிபணிந்து செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களின் ஆணைக்கு துரோகம் இழைப்பது ஜனநாயக பொறிமுறையின் மிகப் பெரிய பாவச் செயலாக தாம் கருதுவதாக குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிலர் கட்சி தாவவுள்ளதாக வெளியாகும் தகவல்கள் பற்றி உறுதியாக கூற முடியாது எனவும் சில வேளைகளில் அவ்வாறு நடக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## பொதுக்கூட்டம்

(கரவெட்டி)

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தின் அபிவிருத்திச்சங்கப் பொதுக்கூட்டமும் பெற்றோர் மற்றும் பழைய மாணவருக்குமான கலந்துரையாடலும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் ரி.சந்திரபாபு தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பழைய மாணவர்களையும் பெற்றோர்களையும் அபிவிருத்தி சங்க உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-24)



யாழ். எயிட் நிறுவனத்தால் யாழ். சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களின் நலன்கருதி 60 பேருக்கு கற்றல் மேம்பாட்டிற்கான பல்வேறு உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மேரி கட்டட பொறியியலாளர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்கள் நிறுவன உரிமையாளருமான ஞா. அன்ரன் இராஜசேகரத்துடன் உதவி பெற்ற மாணவர்கள் [illegible]. (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் உலகமகா யுத்தம்

முயற்சிகள் ஏதும் இன்றி முடங்கி மௌனமாக நீட்டிக்கிடக்கும் எந்த இனத்துக்கும் வலியவந்து நீதிதேவதை வரங்கள் ஏதும் தரப்போவதில்லை. உலகில் நடத்திமுடிக்கப்பட்ட இனப்படு கொலைகள் அனைத்திற்கும், இனச்சுத்தி கரிப்புகள் அனைத்திற்கும் உரியநீதி கிடைத்திருக்கா என்றால் இல்லை.


இனப்படுகொலைகளின் வடுக்களை தாங்கிய மக்கள் ஓய்வுஇன்றி எழுந்து நீதிக்கான தேடலை ஆரம்பித்தால் நிச்சயம், அது கிடைத்தே தீரும். அது இன்றோ நாளையோ, நாளை மறுநாளோ திடீரென நிகழ்ந்துவிடக்கூடிய ஒன்று அல்ல.

அதற்கான நீண்ட பயணங்கள் ஒய்வு இன்றி நிகழ்த்தப்படும்போது அது பல கதவுகளை திறந்துவைக்கும், நீதியின் கதவு உட்பட...

எல்லாவகையான கொடும்கொலைகளையும் செய்து முடித்துவிட்டு நீதியின் கண்ணில் இருந்து தூரச்சென்று ஒழித்திருந்து ஓர் போர்க்குற்றவாளியை, ஆண்டுகள் பல கடந்தபோதும் தேடிச்சென்று தூக்கிவந்து நீதிக்கு முன்னால் நிறுத்திய ஒரு தேசிய இனத்தின் உறக்கமில்லாத பயணம் இது:-

உலகின் இருபதாம் நுற்றாண்டின் மிகப்பெரிய இனப்படுகொலையாக கிட்லரின் படைகளால் மேற்கொள்ளப் பட்ட "யூதப்படுகொலை"யே ஆகும். அறுபதுலட்சம் யூதமக்கள் விசவாயு அறைகளிலும், கொலைக்களங்களிலும், கடும் குளிரிலும், பசியாலும் கொலை செய்யப் பட்டார்கள். இந்த யூதப்படுகொலை





யில் முக்கியமானதும், மிகவும் கொடூரமானதும் "அவ்ஸ்விற்ஸ்" முகாமில் லட்சோபலட்சம் யூதப்பெண்களையும், சிறுவர்களையும் விசவாயு அறைகளுக்குள் அடைத்து துடிக்கத்துடிக்கக் கொன்று எரித்தது ஆகும்.

மானிட வரலாற்றில் எப்போதுமே காணப்படாத இந்த இனப்படு கொலையை வடிவமைத்து முன்னின்று நடத்தியவன் "அடோல்வ்ஏச்மென்" என்ற ஜேர்மனிய தளபதி ஆகும். கொஞ்சம் கூட தயக்கமோ, சஞ்சலமோ இன்றி யூதர்களை புகையிரதங்களில் கொலை முகாம்களுக்கு அனுப்பிக் கொண்டிருந்தான் இவன்.

1942ம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் அதிகூடிய அமெரிக்க மற்றும் கூட்டுப் படைகளின் ஒன்றிணைந்த பலத்தின் முன்பாக "கிட்லரின்" கனவு சாம்ராஜ்யம் கலைந்து வீழ்ந்தவுடன் யூதப்படு கொலைக்கு பொறுப்பான "அடோல்வ் ஏச்மென்"னும் தனது உயிரைக் காத்துக் கொள்ள ஓடி ஒளியத் தொடங்கினான்.

அமெரிக்கா மற்றும் நேசநாட்டுப் படைகளால் பிடிக்கப்பட்ட ஜேர்மனிய தளபதிகள் "நூரன்பேர்க்" நகரில் அமைந்த நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு, சுட்டும், தூக்கிலிட்டும் மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

நூரன்பேர்க் நீதிமன்றத்தில் பல ஜேர்மனிய தளபதிகள் ஒப்புதல் வாக்கு மூலங்களையும் வழங்கினார்கள். அதில் மிகமுக்கியமாக "அவ்ஸ்விற்ஸ்" முகாமின் பொறுப்பாளரான தளபதி "றொடுல்வ் கோய்ஸ்" என்பவர் இந்த படுகொலைக் கான முழுஉத்தரவும் "அடோல்வ் ஏச் மென்" யூதப்படுகொலைகளுக்காக மிகவும் தேடப்படும் ஒருவரானார்.

முழு ஜேர்மனியும் கூட்டுப்படைகளினால் கைப்பற்றப்பட்ட சூழலில் கிராமங்களிலும், பண்ணைகளிலும் இந்த கொலைகார தளபதி ஒளித்திருந் தான். ஒருவாறாக 1948 இல் இத்தாலியை வந்தடைந்து அங்கிருந்து "றிச் சார்டோ கெலிமன்" என்ற பொய்ப் பெயருடன் சிரியாநாட்டின் "டமாஸ் கஸ்" நகரில் சிறிய ஆயுதங்களை இறக்குமதி செய்பவனாக இருந்தான்.

ஆனால், யூதர்களுக்கான இஸ்ரேல் தேசம் உருவானவுடன் யூதப்படுகொலைகளின் சூத்திரதாரிகளை தேடி அழிக்கவும், பிடித்துக் கொண்டு இஸ்ரேலுக்கு கொண்டுவரவும் விசேட இஸ்ரேலிய பிரிவுகள் மோப்பம் பிடிக்கத் தொடங்கின.

விசவாயு அறைகளுக்குள் லட்சோபலட்சம் யூதர்களை கொன்றழித்த "அடோல்வ் ஏச்மென்" என்பவரையும் அவர்கள் தேடியலைந்து கொண்டிருந் தார்கள். இனி இங்கிருப்பது அவ்வளவு பாதுகாப்பானது இல்லையென்று புரிந்துகொண்டு 1950ஆம் ஆண்டு ஆர் ஜென்டினாவுக்குள் நுழைந்து கொண் டான். அப்போதைய ஆர்ஜென்டீனா அரசு வேறு பொய்ப் பெயர்களில் தப்பித்து வரும் ஜேர்மனிய தளபதிகளுக்கு ஒரு ஒதுங்கிடமாக இருந்தது.

அங்கு "கெலிமன்" என்ற பெயரில் ஒரு தொழிலாளியாக இவன் வாழத் தொடங்கினான். 1952ல் ஆஸ்தீரியாவில் இருந்து தனது மனைவியையும் மூன்று குழந்தைகளையும் ஆர்ஜென்டீனாவுக்கு வரவழைத்து குடும்பமாக வாழத்தொடங்கினான்.

ஆண்டுகள் பல கடந்தன. மொத்தத்தில் எல்லோரும் இந்த கொலைகாரனை மறந்துவிட்டிருந்தனர். ஆனால், வலிகளை சுமந்த யூததேசமும் மக்களும் இவனை மறக்கவோ மன்னிக்கவோ தயாராக இல்லை. எங்கோ ஒரு உலகமூலையில் "அடோல்வ் ஏச் மென்" என்ற மானுட எதிரி பதுங்கிஇருப் பான் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

தேடிக்கொண்டே இருந்தனர். ஒருநாளில் அதற்கு பலனும் கிடைத் தது. மெத்தனமாக இவன்போட்டகடிதம் ஒன்று ஆஸ்திரியாவின் முத்திரை சேகரிக்கும் ஒருவருக்கு கிடைத்துப் போக அதை அவர் தனது யூதநண்பருக்கு காண்பிக்க "அடோல்வ் ஏச்மென்" புகலிடம் ஆர்ஜென்டீனா தான் என இஸ்ரேலுக்கு தெரிகிறது.



பிறகு தாமதிப்பார்களா என்ன? கணக்குத் தீர்க்கும் "ஒப்பிரேசன் ஏச்மென்" ஆரம்பமாகிறது. மொசாட் புலனாய்வு அதிகாரிகள் ஆர்ஜென்டீனாவுக்கு விரைகிறார்கள். ஏற்கனவே அங்கு இருந்த தகவல்களுடன் "அடோல்வ் ஏச்மென்"னை தேடிச்சலிக்கிறார்கள். இறுதியில் மார்ச் 19ஆம் திகதி 1960ம் ஆண்டு இவனின் இருப்பிடத்தை அடையாளம் கண்டு இவனையும் காண்கிறார்கள்.

## "அடேல்வ் ஏச்மென்"னை அடையாளம் காட்டிய திருமணநாள்

ஆனாலும், இவன்தான் அந்த வெறியன் என்று அடையாளப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அதுவரைக்கும் அவனின் இடம் முழுநேரமும் இஸ்ரேலிய புலனாய்வு கண்கள் மேய்ந்து கொண்டே இருந்தன. எங்கே போகிறான், என்ன செய்கிறான், என்பன அனைத்தும் கண்காணிப்பில் இருக்கிறது.

"அடோல்வ் ஏச்மென்"னை அடையாளம் கண்டு மூன்றுநாட்களின் பின்னர் மார்ச் 21ம் திகதி மாலைப்பொழுதில் அவன் ஒரு பூச்செண்டுடன் வீட்டுக்கு செல்கிறான். அவனின் குழந்தைகளும் மனைவியும் கூட நல்ல உயர்தர ஆடைகளுடன் அன்று காத்து நிற்கின்றனர். வீட்டுவாசலில்வைத்து "அடோல்வ் ஏச்மென்" தனது மனைவியிடம் அந்த பூச்செண்டைகொடுத்த பொழுதில் இவன்தான் அந்த கொலைகாரன் என இஸ்ரேல் உறுதி கொள்கிறது. ஏனெனில் அந்தநாள் "அடோல்வ் ஏச்மென்"னின் திருமணநாள் என்று இஸ்ரேலிய புலனாய்வு தகவல்கள் பதிந்திருந்தன.

தனது திருமணநாளின் 25வது வருட நிறைவுக்காக மனைவிக்கு கொடுத்த பூச்செண்டு ஒரு மிகப்பெரிய போர்க்குற்றவாளியை உறுதியாக அடையாளம் காண உதவியிருந்தது. இவன்தான் அவன் என எல்லாவகையிலும் உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.

இனிமேல் எப்படியாவது இஸ்ரேலுக்கு கொண்டு போகவேண்டும். அப்போது ஆர்ஜென்டீனாவில் இஸ்ரேலிய புலனாய்வாளர்கள் இயங்குவதும், இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டால் மரணதண்டனையோ, மிக நீண்டசிறைவாசமோ தான் கிடைக்கும்.

அப்படியான பொழுதில் அங்கு ஒருபோர்க்குற்றவாளியை கடத்தி இஸ்ரேலுக்கு கொண்டுவருவது என்பது நினைத்துக்கூடப்பார்க்க முடியாததாக இருந்தது. ஆனாலும், தமது உறவுகள் கதறிய இறுதிநேரக் கதறலுக்கு தீர்ப்பு எழுதும் துடிப்பும், ஆன்மவேகமும் எல்லா யூதமக்களிடமும் நிறைந்தே இருந்தது.

இஸ்ரேலில் இருந்து பல ஆயிரம் மைல் தூரத்தில் உள்ள ஆர்ஜென்டீனாவில் கைகளில் துப்பாக்கியோ வேறு எந்த ஆயுதமோ இன்றி அந்த போர்க் குற்றவாளியை கடத்தும் ஆபத்தான வேலைக்குள் இறங்குகின்றனர்.

1960ம் ஆண்டு மே11ம் நாள் வீட்டுக்கு அருகான பாதையில் நடந்துகொண்டிருந்த உலகின்மிக மோசமான மானிட விரோதி வெறும் கைகளால் மடக்கிப்பிடிக்கப்பட்டு கடத்தப்படுகின்றான். கைகளும் கால்களும்கட்டப்பட்டு ஒரு வீடு ஒன்றின் அறையில் கிடத்தப்பட்டிருந்த "அடோல்வ் ஏச்மென்" மே21ம் நாள் ஆர்ஜென்டீனாவின் "போனஸ் அயர்ஸ்" விமான நிலையத்தில் தரித்திருந்த இஸ்ரேலிய விமானத்தில் போதை ஏறி மயக்கமான விமான பணியாளர் என்று கூறப்பட்டு ஏற்றப்படுகின்றான்.

விமான நிலையக்கட்டுப்பாட்டு அறையின் உத்தரவு கிடைத்து விமானம் மேலெழும்பி ஆர்ஜென்டீனாவின் வான்பரப்பை கடந்த பின்னரே இந்த வீரமிகு செயலை செய்தவர்கள் தங்களுக்குள் கைகுலுக்கி கொள்கின்றனர்.

மறுநாள் இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் பிரதமர் பென்கூரியன் அடோல்வ் ஏச்மென் கைதுசெய்யப்பட்டு இஸ்ரேலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதை உத்தியோக பூர்வமாக அறிவிக்கிறார்.

1961ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ம் நாள் அடோல்வ் ஏச்மென்னுக்கு மீதான பதினைந்து குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றத்தில் சுமத்தப்படுகின்றது. கொலை முகாம்களில் இருந்து தப்பியவர்கள் சாட்சியங்களாக உணர்ச்சியுடன் முன்வருகிறார்கள்.

1961ம் ஆண்டு டிசெம்பர் 15ம் நாள் மனிதகுலத்துக்கு எதிரான செயல்களுக்காகஅவனுக்கு மரண தண்டனை வழங்கப்படுகிறது. 1962ம் ஆண்டு மேமாதம் 31ம்நாள் மனிதகுல விரோதியான அந்த கொலைகாரனுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படுகிறது.

பல இலட்சம் மக்களை துடிக்க துடிக்க கொன்று பின் அவர்களின் உடலை எரித்த அடோல்வ் ஏச்மென் என்ற இனப்படுகொலை குற்றவாளியின் மரணம் 23:58க்கு உறுதி செய்யப்படுகிறது. அதன்பின் அவனின் உடலை எரித்து அந்த சாம்பலை எடுத்துக்கொண்டு ஒரு படகு இஸ்ரேலின் கரையில் இருந்து வெகுதூரம் கடந்து செல்கிறது. இவனின் எஞ்சிய சாம்பல் கூட யூதமண்ணை தீண்டக் கூடாது என்பதற்காக ஒரு வாளிக்குள் வைத்து இஸ்ரேல் கடல் எல்லையை கடந்து கடலின் ஆழத்துள் எறியப் படுகிறது.


ஒரு மிகச் சிறிய தேசியஇனம், தனக்கான நீதியைத்தானே தேடிய நிகழ்வு இது. காலமும், அசையும் வாழ்வியலும் மற்றவர்களை எல்லாம் மறக்கச் செய்துவிடும். ஆனால், உறவுகளை இழந்தவர்களும், வலிகளை சுமந்தவர்களும் ஒரு போதும் மௌனமாயிருக்கவும் மாட்டார்கள், மறக்கவும் மாட்டார்கள்.

(இணையம்) (முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# மன்னா! திருந்து



பிரம்மதத்தன் காசியை ஆண்டபோது பாஞ்சால நாட்டின் தலைநகரான காம்பில்ய நகரில் பாஞ்சாலன் மன்னன் ஆட்சி செய்து வந்தான். அவன் உல்லாச சுகபோக இன்பத்தில் மூழ்கி ஆட்சியைக் கவனிக்காது இருந்து வந்தான். இந்நிலையில் நாட்டில் திருட்டுப் பயம் அதிகரித்தது. மக்கள் பகலில் அரசாங்க வீரர்களால் துன்புறுத்தப்பட்டனர். இரவிலோ திருடர்களாலும் கொள்ளைக்காரர்களாலும் தாக்கப்பட்டனர். இதனால் மக்கள் காட்டில் மறைந்து வசிக்கலானார்கள்.

இச்சமயம் போதிசத்வர் அந்நகரின் வெளியே புங்கமரத்தின் கீழ் ஊர்க்காவல் தெய்வமாக இருந்தார். மன்னன் அம்மரத்தைப் பூசித்து வந்தான். தன்னை சிரத்தையுடன் வழிபடும் மன்னன் தன் அறிவில்லாத்தனத்தால் நாட்டில் குழப்ப நிலை ஏற்படச் செய்துவிட்டானே என வருந்தி அவனுக்கு நல்ல

**அம்புலிமாமா கதைகள்**



உபதேசம் செய்ய அவர் நிச்சயித்துக் கொண்டார்.

ஒருநாள் பாஞ்சால மன்னன் தூங்கும்போது அவனுடைய கனவில் தோன்றி "நீ ஆட்சியை சரிவரக் கவனிக்கவில்லை. அதனால் உன் நாடு பாழாகிறது. இப்படிப்பட்ட மன்னன் இவ்வுலகில் தனக்கு உள்ளதை எல்லாம் இழப்பதோடு மறு உலகில் நரகவேதனையை அனுபவிப்பான். இது தெரியுமா உனக்கு? இனியாவது ஆட்சியில் நீ கவனம் செலுத்து. நல்ல முறையில் ஆண்டு குழப்பத்தைப் போக்கி நாட்டை முன்னுக்கு கொண்டு வா" என்று போதிசத்வர் கூறினார்.


மன்னன் மனம் விழித்துக் கொண்டது. மறுநாளே அவன் தன் நாட்டின் நிலையை நேரில் கண்டுகொள்ளத் தீர்மானித்தான். தன் அமைச்சர்களிடம் ஆட்சியைக் கவனிக்குமாறு கூறித் தன் புரோகிதரை கூட அழைத்துக் கொண்டு மாறுவேடம் பூண்டு நகரை விட்டுச் சென்றான்.

நகருக்கு வெளியே ஒரு வீட்டின் முன் ஒரு கிழவனைக்கண்டான். அவன் தன் வீட்டைப் பூட்டி முட்களைப் போட்டுவிட்டுத் தன் குடும்பத்தவருடன் காட்டிற்குப் போனவன் இரவில் தன்வீடு எப்படி இருக்கிறது எனக்காணத்திரும்பி வந்து வாசல் கதவைத் திறந்து கொண்டிருந்தான். அப்போது அவன் காலில் ஒரு முள் குத்தி விட்டது. அவன் உடனே கீழே விழுந்து "என் காலில் முள் குத்தியது போல இந்த பாஞ்சால மன்னன் மார்பில் அம்பு குத்தட்டும்" என்று கூறலானான்.

அது கேட்டு அரசாங்க புரோகிதர் அக்கிழவனை அணுகி "ஐயா! நீங்கள் கண்ணை மூடிக்கொண்டு முள் மீது காலை வைத்துக்குத்திக் கொண்டால் அதற்காக மன்னனைத் திட்டுவதா?" என்று கேட்டார். கிழவனும் "மன்னன் சரியாக இல்லாததால் அவனது ஊழியர்கள் அக்கிரமங்கள் புரிகிறார்கள். இரவில் திருடர்களின் தொந்தரவையும் சகிக்க முடியாது போனதால்தானே நாங்கள் வீடுகளைப் பூட்டி சுற்றிலும் முட்களைப் போட வேண்டியதாயிற்று. அரசன் ஒழுங்காக ஆட்சி நடத்தினால் நாங்கள் இப்படிச் செய்ய வேண்டி இராதே என்றான்.

அதைக்கேட்ட பின் மன்னனும் புரோகிதரும் இன்னொரு கிராமத்திற்குச் சென்றார்கள். அங்கு ஒரு பெண்மணியைக் கண்டனர். அவர்களுக்கு கல்யாண வயதில் இரு பெண்கள் இருந்தனர். அவர்கள் சென்றபோது ஒரு மரத்துக் காய்களைப் பறிக்க அவள் மரத்தின் மீதேறிக் கால் தவறிக் கீழே விழுந்து விட்டாள். அவள் "இந்த அநியாயக்கார மன்னன் ஒழிய மாட்டானா! இவனது ஆட்சியில் என் பெண்களுக்கு கல்யாணம் ஆகும் பாக்கியம் கூடக் கிடைக்கவில்லையே" எனக் கூவினாள்.

அதைக்கேட்ட அரசாங்க புரோகிதர் "அடப் பைத்தியமே! நாட்டிலுள்ள ஒவ்வொரு கன்னிப் பெண்ணிற்கும் மன்னனால் விவாகம் செய்து வைக்க முடியுமா?" என்று கேட்டார். அவளும் "பகலில் அரசாங்க வீரர்களாலும் இரவில் திருடர்களாலும் எங்களுக்குத் தொந்தரவு ஏற்படும்போது எங்கள் பெண்களுக்கு எப்படி விவாகம்



நடக்கும்?" என்று கேட்டாள். புரோகிதரும் மன்னனும் மறுமொழி பேசாமல் சென்றனர்.

சற்று தூரத்தில் ஒரு வயலில் ஒரு குடியானவன் உழுது கொண்டிருப்பதை அவர்கள் கண்டனர். உழும்போது ஏர்முனையில் எருது பட்டு அது கீழே விழுந்தது. உடனே அவன் "இந்நாட்டு மன்னன் மார்பில் ஈட்டி பாய்ந்து இந்த எருது விழுந்தது போல விழுந்து இறக்கக்கூடாதா?" என்று உரக்கக் கூறினான்.

புரோகிதர் அவனிடம் போய் "உன் கவனக் குறைவால் எருதிற்கு அடிபட்டு விழுந்தது என்றால் மன்னனைத் திட்டுகிறாயே. இது சரியா?" என்று கேட்டார். அவனும் "ஏன் சரி இல்லை? மன்னனின் ஆட்சி சரியாக இல்லாவிட்டால் மக்களுக்கு வாழ்வு ஏது? பகலில் அரசாங்க வீரர்களின் தொந்தரவு. இரவில் திருடர்பயம். என் மனைவி எனக்காகச் சமைத்து எடுத்து வந்த உணவைக்



கூடப் பிடுங்கிக்கொண்டு போய் விட்டார்களே" என்றான்.

மன்னனும் புரோகிதரும் அங்கிருந்து தலைநகருக்குத் திரும்பலானார்கள். வழியில் ஒரு குட்டையில் உயிருடன் உள்ள தவளைகளைக் காகங்கள் கொத்தித்தின்பதை அவர்கள் பார்த்தார்கள். ஒரு தவளை கோபத்தோடு "இந்தக் காகங்கள் நாங்கள் உயிருடன் இருக்கும்போதே எங்கள் குடும்பத்தவரைக் கொத்தித் தின்பது போல இந்தப் பாஞ்சால மன்னனையும் அவனது குடும்பத்தவரையும் எதிரிகள் குத்திக் குதறிக் கொல்லட்டும்" என்றது.

அதைக்கேட்ட புரோகிதர் "அட முட்டாள் தவளையே! உங்களைக் கொல்லும் காகங்களைத் திட்டாமல் இந்நாட்டு மன்னனை திட்டுகிறாயே. இதுவா நியாயம்?" என்று கேட்டார். அதற்குத் தவளை "நீங்கள் மன்னனின் மனம் குளிர்ந்து இருக்க இப்படிக் கேட்கிறீர்களே. அரசாங்க புரோகிதர் இப்படிக் கேட்பதில் ஆச்சரியமே இல்லை. நாட்டில் காகங்களுக்கு கூட உணவு கிடைக்காததால்தானே உயிரோடு உள்ள தவளைகளைக் கொத்தித் தின்கின்றன? இந்த நிலை நாட்டிற்கு யாரால் வந்தது? ஆட்சியை சரிவர கவனியாத அரசனால்தானே! இப்படிப்பட்ட மன்னன் இருந்தால் என்ன, இறந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான்" என்றது.

அதைக்கேட்ட மன்னன் "என்னைத் தவளைகள் கூடத்திட்டும் அளவிற்கு நாட்டின் ஆட்சி சீர்குலைந்து வீட்டதா? என்ன கேவலமான நிலைக்கு நான் வந்து விட்டேன்! இனி அதனைச் சரி செய்கிறேன்" எனக் கூறிக் கொண்டு அரண்மனைக்குச் சென்றான்.

அது முதல் அவன் ஆட்சியில் கவனம் செலுத்தி அக்கிரமக்காரர்களை ஒடுக்கித், திருடர்களைப் பிடித்து தண்டித்து மக்கள் பயம் இல்லாமல் சுகமாய் வாழவழி செய்தான்.

அதனால் மக்கள் அவனைப் புகழ்ந்து அவன் நீடுழிகாலம் வாழ வாழ்த்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை

# கொழும்பு, றோயல் கல்லூரி முன்னோடிப் பரீட்சை - 2013

# உயிரியல்

*(நேற்றைய தொடர்ச்சி...)*

41 - 50 வரை வினாக்கள் ஒன்றிற்கு மேற்பட்ட விடைகள் சரியானவை. கீழ்வரும் அறிவுறுத்தல்களைக் கொண்டு விடையளிக்க

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| ABD சரியாயின் | ACD சரியாயின் | AB சரியாயின் | CD சரியாயின் | வேறு விடை அல்லது விடைகளின் சேர்க்கை சரியெனின் |

41. அதிகமான நொதிய ஏவிகளாகப் பயன்படும் மூலகம் / மூலகங்கள
A) Ca B) P C) Mg D)Zn E) Mn

42. Reptilians க்கும் ஆவேசுக்கும் உள்ள இயல்புகள்
A. 4 அறை கொண்ட இதயம்
B. கண்ணில் சிமிட்டு மென்சவ்வுகள் காணப்படல்
C. மாறும் வெப்பநிலை குருதி விலங்காகும்.
D. நடுக்காதும் உட்காதும் மட்டும் காணப்படல்
E. முட்டையில் கருவூண் காணப்படல்

43. மனிதனின் சதையி ஆனது
A. அநேக சோணைகளை கொண்டுள்ளது.
B. சதையச்சாறு சுரக்கப்படுவது சதையக்குலைகளால் ஆகும்.
C. மாப்பொருளை மோற்றோசாக Lipase மாற்றும்
D. இலங்ககான் சிறுதீவுக் கூட்டம் மூலம் இன்சுலின் சுரக்கும்.
E. அமில சாற்றை சுரக்கும்.

44. குருதிச்சுற்றோட்டத்தை பற்றிய சரியான கூற்று
A. முள்ளந்தண்டுகள் வயிற்றுப்புற இதயத்தையும் முள்ளந்தண்டற்றவை, முதுகுப்புற இதயத்தையும் கொண்டவை.
B. மனித இதயத்தின் இதய முடுக்கி வலது சோணையறையில் அமைந்துள்ளது. இடது இதய அறையில் முடியுரு குடா திறக்கும்.
C. மனிதன் முற்றான இரட்டை சுற்றோட்டத்தையும் தேரை பூரணமற்ற இரட்டை சுற்றோட்டத்தையும் கொண்டது.
D. மனித குருதியில் அதிகளவு காணப்படுவது செங்குருதி கலங்கள் ஆகும். குறைந்தளவு காணப்படுவது மூலநாடிகள் ஆகும்.
E. மனிதனின் VI ஆவது தொகுதிவில் ஆனது சுவாசப்பை நாளமாக மாற்றம் அடையும்.

45. நீயூரோன்கள், நரம்பு கணத்தாக்கம் கடத்தப்படல் பற்றிய கூற்றுக்களில் சரியானது / சரியானவைகள்
A. தாக்க அழுத்தம் அசைவது கணத்தாக்கம் ஆகும். இது மூன்று படிகளை கொண்டது
B. நியூரோனின் ஓய்வு அழுத்தம் 70Mv ஆகும்.
C. நரம்புகணத்தாக்கத்தின் தாக்க அழுத்தம் இடம் பெயர்வதால் முனைவழிக்கப்பட்ட அலையாக செல்லும்.
D. ஒரு தாக்க அழுத்தத்திற்கு பின்பு 2 மில்லி செக்கனின் பின்பு தான் அடுத்த தாக்க அழுத்தம் உருவாக்கப்படும்
E. நரம்பு தொகுதியில் நியூரோன் கட்டமைப்பு தொழிற்பாட்டு அடிப்படை அலகு ஆகும்.

46. மனித மண்டையோடு பற்றிய உண்மையான கூற்றுக்கள்
A. பிடர் என்பின் பெருங்குடயத்தின் இரண்டு பக்கத்திலும் இரண்டு மேல் மூட்டு முளை காணப்படும்.
B. 22 என்புகளை கொண்டது. மண்டையோட்டின் கொள்ளளவு 1.65 லீற்றர்
C. நுதல் என்பில் குடாக்கள் காணப்படும் இது சத்தம் உருவாவதற்குரிய பரிவை நிலையை உருவாக்கும்.
D. கீழ்தாடையில் உள்ள மூட்டுகுமிழ் முளை கடைநுதல் சிபுக என்பு மூட்டுக்களை உருவாக்கும்.
E. வாழ்க்கையின் 5-6 வருடங்களின் பின்பு உச்சிக்குமிழிகள் என்பாக்கம் அடையும்.

47. சைக்கஸ், பூக்கும் தாவர அமைப்புக்களுக்கிடையே சரியான ஒழுங்கு சோடிகளை தெரிவு செய்க

| சைக்கஸ் அமைப்பு | பூக்கும் தாவர அமைப்பு |
|---|---|
| A. நுண் வித்தியிலை | கேசரம் |
| B. மாவித்தியிலை | சூல் வித்திலை |
| C. பெண்புணரிதாவரம் | வித்தகவிழையம் |
| D. நுண்வித்திகலன் | முளையம் |
| E. ஆண்கூம்பு | கேசரம் |

48. மெண்டலின் விதிகளில் இருந்து விலகும் கூர்ப்பு தொடர்புகளைக் காட்டும் சோடி / சோடிகள்
A. மனிதனில் M, N குருதிக்கூட்டங்கள் - இணை ஆட்சி
B. White leghorn இன் இறகு நிறம் - பின்னடைவான மேலாட்சி
C. பசு மாட்டில் இருந்து பெறப்பட்ட பாலின் அள்வு - பல்பரம்பரை அலகுகளின் தலைமுறையுரிமை
D. Mirabilis இன் பூவின் நிறம் - நிறைவில் ஆட்சி
E. மனிதனில் Thalasimia - இலிங்கமிணைந்த இயல்புகள்.

49. வளிமாசாக்கிகளினால் ஏற்படும் பாதகமான விளைவுகளின் சரியான சோடி/ சோடிகளை தெரிவு செய்க
A. கந்தகவீரொட்சைட்டு –Bronchitis
B. ஐதரோகாபன் - ஒளி இரசாயன தூமங்கள்
C. குளோரோபுளோரோகாபன் - பார்வை குறைபாடு
D. காபனோர் ஒட்சைட்டு - தூண்டல்களுக்கு துலங்கும் அளவு பாதிப்படையும்
E. நைதரசன் ஒட்சைட்டு - தசை இயைபாக்கம் குறைவடையும்

50. Prions பற்றி கூற்றுக்களில் சரியானது
A. இவை புரதத்தால் ஆன தொற்றக் கூடிய துணிக்கைகள்
B. Virus ஐ விட சிறியவை
C. நீயூக்கிளிக் அமிலங்கள் இரட்டிப்படையும் போது விகாரத்தை ஏற்படுத்தும்
D. உணவினால் பிரதானமாகக் கடத்தப்படும்.
E. சமையல் வெப்பநிலையில் அழிக்கப்படக் கூடியது

# இரசாயனவியல் II

## பகுதி A

### அமைப்புக் கட்டுரை வினாக்கள்

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01)

A i. தாவரத்தின் துணைகலச்சுவரில் செலுலோசு தவிர காணப்படும் வேறு இரண்டு சேதனப் பதார்த்தங்களின் வகையை பெயரிட்டு அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு உதாரணத்தைக் குறிப்பிடுக.

ii. தாவரத்தின் கலச்சுவரின் இரண்டு தொழில்களைத் தருக?

iii. கலமென்சவ்வை "திரவ சித்திர வடிவ மாதிரி அமைப்பு" என வர்ணிக்கப்படுவது ஏன் என விளக்குக?

iv. முதலுரு மென்சவ்வில் காணப்படும் புரதத்தின் இரண்டு தொழில்களைத் தருக?

v. வெங்காயமேற்றோல் உரியை பயன்படுத்தி ஒளி நுணுக்குக்காட்டியில் தாவரக்கலங்களை அவதானிப்பதற்குரிய வழுக்கி ஒன்றை எவ்வாறு தயாரிப்பீர் என்ற படிமுறைகளை ஒழுங்காக விபரிக்குக.

B. i. நொதிய தொழிற்பாட்டில் சிறப்பு வெப்பநிலைக்கு மேலாக வெப்பநிலையை. அதிகரிக்கும் போது தாக்கவீதம் குறைவதற்குரிய காரணத்தை விளக்குக.

ii. மனிதனின் உமிழ்நீரில் காணப்படும் இரண்டு நொதியங்களை பெயரிட்டு அவற்றின் தொழில்களைத் தருக.

iii. காழ் கலன் மூலகங்களுக்கும் நெய்யரிக்குழாய் மூலகங்களுக்கும் இடையே உள்ள கட்டமைப்பு, தொழிற்பாட்டு வித்தியாசங்களை எழுதுக.

iv. a. என்பு அமைப்பை உருவாக்க பயன்படும் கலங்களைப் பெயரிடுக?

b. என்பில் காணப்படும் பிரதான அசேதனப் பதார்த்தத்தைப் பெயரிடுக.

v. குருதியில் கல்சியம், பொஸ்பேற்று அயன்களை சீராக்கும் இரண்டு ஓமோன்களைப் பெயரிட்டு அவற்றின் தொழில்களை எழுதுக

C. i. காற்று சுவாசத்தில் இலத்திரன் கடத்தற் தாக்கத்தில் உருவாகும் இரண்டு பிரதான விளைபொருட்களைக் குறிப்பிடுக.

ii. உயிர்க்கலங்களில் குளுக்கோசு முற்றாக ஒட்சியேற்றம் அடைந்து ATP மூலக் கூறுகள் உற்பத்தி செய்யும் முறைகளைப் பெயரிட்டு இச்செயல் முறைகள் எங்கு நடைபெறுகின்றது எனவும் எவ்வளவு ATP மூலக்கூறுகள் உருவாகின்றன எனவும் குறப்பிடவும்.

iii. ஒளித்தொகுப்பில் ஒளியில் தங்கியுள்ள தாக்கத்தில் நீரின் பங்களிப்பு என்ன?

iv. a. பச்சையுருமணியில் ஒளி பொசுபோரிலேற்றம் நிகழும் இடத்தைக் குறிப்பிடுக

b. ஒளித்தொகுப்பில் தாக்க நிறமாலைக்கும் உறிஞ்சல் நிறமாலைக்கும் இடையேயுள்ள தொடர்பை எழுதுக

v. ஒளித்தொகுப்பின் பூகோள உயிரியல் முக்கியத்துவத்தை எழுதுக.

**02)** A.

1. அங்கிகளின் இயற்கை பாகுபாடு என்றால் என்பதால் கருதப்படுவது யாது?
2. அங்கிகளின் பாகுபாடு பற்றி Haeckel என்பவர் வழங்கிய பங்களிப்பு யாது?
3. Archae, Eukaraya விற்கும் பொதுவான ஆனால் Bacteria இல் காணப்படாத இரண்டு இயல்புகள் எழுதுக

கீழ் காட்டப்பட்ட வெவ்வேறு வகையான அல்காக்களின் வரிப்படத்தைப் பயன்படுத்தி கீழ் உள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

4. a. மேலே உள்ள எல்லா அங்கிகளிலும் காணப்படாத ஆனால B யில் உள்ள கட்டமைப்பு இயல்பைத் தருக?

b. Ciliophora, Rhizopoda ஆகிய இரண்டிலும் பொதுவான ஆனால A,B,C அங்கிகளில் காணப்படாத கட்டமைப்பு, தொழிற்பாட்டு இயல்புகள் ஒவ்வொன்றையும் எழுதுக?

| | இயல்பு | Bipalium | தெள்ளு Ticks | நொருங்குநட்சத்திரம் Brittlestars | மட்டி Mussels |
|---|---|---|---|---|---|
| 1 | தலையாகுசெயல் | | | | |
| 2 | அகவன்கூடு | | | | |

B. கலன் தாவரம் ஒன்றினது வாழ்க்கை வட்டம் கீழே தரப்பட்டுள்ளது.

i. கீழ்வரும் குறிக்கப்பட்ட பகுதிகளைப் பெயரிடுக

ii. மேலே குறிப்பிட்ட தாவரப் பிரிவின் வகுப்புக்களைப் பெயரிட்டு அமைப்பு A யில் வகுப்புக்களுக்கிடையில் உள்ள இரண்டு வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. ஆண் புணரித்தாவரமான (2 B) யில் குறிப்பிட்ட மேலே உள்ள தாவரத்திற்கும் சைக்கசின் ஆண் புணரித் தாவரத்திற்கும் இடையான அமைப்பு, தொழிற்பாட்டு வேறுபாடுகள் ஒவ்வொன்றைத் தருக

| | | புணரித்தாவரம் 2 B | சைக்கஸ் புணரித்தாவரம் |
|---|---|---|---|
| 1 | தொழிற்பாட்டு வேறுபாடு | | |
| 2 | அமைப்பு வேறுபாடு | | |

iv. F என்னும் அமைப்பு வித்தி தாவரமாக மாறும் போது ஏற்படும் படிப்படியான மாற்றங்களை எழுதுக.

C. i. தற்போது உயிரின் தோற்றம் பற்றி ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கை எது?

ii. a. அம்பிபியன்கள் எந்த வகுப்பு அங்கிகளில் இருந்து உற்பத்தியாகின?

b. மேலே கூறிய வகுப்பிற்கு உதாரணம் தருக

iii. உயிர்பல்வகைமை செழிப்பு மையங்கள் என்பதால் கருதப்படுவது யாது?

iv. a. உயிர் அங்கியின் அழிவு பற்றி கருதப்படுவது யாது?

b. இலங்கையில IUCN செந்தரவுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட அழிந்து விட்ட விலங்கின் பெயரைக் குறிப்பிடுக

v. a. உயிர் பல்வகைமையை பாதுகாக்கும் இரண்டு முறைகளைப் பெயரிட்டு ஒவ்வொன்றிற்கும் ஒரு உதாரணம் தருக

b. மேலே உள்ள முறையில் விலங்குகளை பாதுகாக்கும் போது எந்த நிலைமைகள் விலங்குகளுக்கு கொடுக்கப்பட வேண்டும்?

03) A. கீழே உள்ள வரிப்படத்தை அவதானித்து வினாக்களுக்கு விடையளிக்க.

i. மேலே காட்டப்பட்ட இழைய அமைப்பை விபரிக்கும் அங்கம் எது?

ii. கீழ் உள்ள அமைப்புக்களைப் பெயரிடுக

iii. 3A (i) இல் குறிப்பிட்ட அங்கத்தின் பிரதான பகுதிகளைப் பெயரிடுக

iv. B யின் தொழிலைக் குறிப்பிடுக

v. a. மேற்கூறிய அங்கத்தினால் உறிஞ்சப்படும் நான்கு கூறுகளை பெயரிடுக

b. இந்த அங்கத்தால் சுரக்கப்படும் ஓமோனைப் பெயரிட்டு இதன் தொழிலைக் குறிப்பிடுக

B. i. a. மனிதனின் மைய நரம்பு தொகுதியை சுற்றி காணப்படும் மென்சவ்வு கவசத்தைப் பெயரிடுக

b. சிலந்தி வலையுருவிற்கு கீழான வெளி என்பதால் கருதப்படுவது யாது

ii. மனித மூளையில் பின்வரும் தொழில்களைச் செய்யும் அமைப்புக்களைப் பெயரிடுக.

a. உடலில் வெப்பநிலையை சீராக்கல்

b. இதயத் துடிப்பு வீதத்தைச் சீராக்கல்

c. தும்மல் செயற்பாட்டைச் சீராக்கல்

d. கற்றலையும் ஞாபக சக்தியையும் ஏற்படுத்துவது

iii. தோலில் பின்வரும் புலன் நிலைமைகளை உணர்வதற்கு காரணமான அமைப்புக்களின் பெயர்களைக் குறிப்பிடுக

1. குறைவான வெப்பநிலை

2. உயர் வெப்பநிலை

iv. மனிதனின் தோலில் மேற்றோலில் இருந்து உருவாகும் பெறுதிகளைப் பெயரிடுக

v. மனிதனின் கீழ் தோலின் தொழில்கள் நான்கைத் தருக

D. i. பின்வரும் முள்ளந்தண்டுகள் எவ்வாறு வேறு முள்ளந்தண்டுகளிலிருந்து வேறுபடுகின்றது.

1. மாதிரி கழுத்து முள்ளந்தண்டு

2. நெஞ்சறை முள்ளந்தண்டு

3. அச்சு முள்ளந்தண்டு

ii. எவ்வாறு முள்ளந்தண்டில் நரம்புகுடையங்கள் உருவாக்கப்படுகின்றது?

iii. a. இரண்டு அடுத்த முள்ளந்தண்டிற்கு இடையே காணப்படும் அமைப்பு யாது?

b. மேலே கூறப்பட்ட அமைப்பு எவ்வாறு உருவாக்கப்படுகின்றது?

iv. a. மனிதனின் இடுப்பு என்புகள் உருவாக்குவதில் சம்பந்தப்பட்ட என்புகளைப் பெயரிடுக

b. ஆண், பெண் இடுப்பு வளையத்திற்கு இடையான இரண்டு வேறுபாடுகளை எழுதுக

vi. a. Osteoporosis என்னும் நோயின் அறிகுறிகளை எழுதுக

b. Osteoporosis நோய் ஏற்படுவதற்கு காரணமான ஒரு காரணியை எழுதுக?

04) A. i. Hardy Weinberg சமநிலை என்றால் கருதப்படுவது யாது?

ii Hardy Weinberg சமன்பாட்டை எழுதுக.

iii. மனிதனின் தலைமயிரின் நிறம் ஒரு சோடி எதிருருக்களால் தீர்மானிக்கப்படுகின்றது. கறுப்பு தலைமயிர் ஆனது மண்ணிறமான தலைமயிருக்கு பின்னடைவானது. ஒரு குடித்தொகையானது கார்டிவெயின் சமநிலையில் உள்ள போது 25% தனியன்கள் கறுப்பு தலைமயிரை கொண்டது. இந்தக் குடித்தொகையில் என்ன நூற்று வீதம் இதர நுக நிலையை கொண்டுள்ளது.

iv. சில குடித்தொகையில் Hardy weinberg சமநிலையை இல்லாதொழிக்க பங்களிப்பு செய்யும் காரணிகளை பெயரிடுக.

B. i. a. சூழற்தொகுதி என்றால் என்ன?

b. ஒரு சூழற்றொகுதியில் உள்ள முக்கியமான உயிரியல் கூறுகளை பெயரிடுக

ii. ஒரு சூழற்றொகுதியில் எல்லா அங்கிக்கும் உணவு வளத்தை கொடுப்பது யார்?

iii. முதலான உற்பத்தித்திறன் என்பதால் கருதப்படுவது யாது?

iv. உணவுச் சங்கிலியின் இணைப்புக்களை நான்கு அல்லது ஐந்திற்கு எல்லைப்படுத்துவது ஏன்?

v. உயிர் கோளத்தில் காபன் மீள் சுழற்சியடைவதை கீழ் உள்ள இடைவெளியில் பாய்ச்சற் கோட்டுப்படமாக வரைந்து காட்டுக

C. i. கைத்தொழிற்சாலையில் உபயோகிக்கப்படும் நான்கு நுண்ணங்கிக் கூட்டங்களைப் பெயரிடுக

ii. உணவு நிரப்பிகளாக பயன்படும் இரண்டு நுண்ணங்கி கலங்களை பெயரிடுக

iii. வினாகிரி உற்பத்தியில் பயன்படும் இரண்டு பிரதான படிமுறைகளை குறிப்பிட்டு ஒவ்வொரு படிமுறையிலும் பயன்படும் நுண்ணங்கிகளைப் பெயரிடுக

iv. a. உயிர்வாயு என்பதால் கருதப்படுவது யாது?

b. உயிர்வாயுவில் உள்ள சேர்வையின் பெயரை எழுதுக

c. a. உயிர்ப்பரிகாரம் என்பதால் கருதப்படுவது யாது?

b. உயிர்ப்பரிகாரம் பயன்படுத்தப்படுகின்ற இரண்டு சந்தர்ப்பங்களை எழுதுக

## வடக்கில் உள்ள

# 10 இலட்சம் மக்களைப் பாதுகாக்க 1 ½ இலட்சம் இராணுவத்தினர் தேவையா?

### சுரேஸ் எம்.பி. கேள்வி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் 10 இலட்சம் மக்களுக்கு ஒன்றரை இலட்சம் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நீதி நியாயமான முறையில் நடைபெற வேண்டும் என்றால் இராணுவத்தினர் முகாம்களுக்குள் முடக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் அக்கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு தேர்தலை முன்னிட்டு இராணுவத்தினரின் கட்டுப்பாடுள்ள ஒரு சில பிரதேசங்கள் விடுவிக்கப்படுவதாகவும், இது சர்வதேசத்தை ஏமாற்ற செய்யும் திட்டமிட்ட செயற்பாடு எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் தானாக விரும்பி நடத்தவில்லை.

மாறாக இந்தியாவினதும் அமெரிக்காவினதும் பாரிய அழுத்தம் காரணமாகவே இந்த தேர்தலை நடத்த முன்வந்துள்ளது.

இதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக முன்னெடுத்து வரக்கூடிய அழுத்தங்கள் காரணமாகவும் ஜெனீவாவில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலும், இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவான அழுத்தங்களினாலும்தான் வடக்கில் யாழ்.மாவட்டத்திலும் சரி ஏனைய மாவட்டங்களிலும் சரி மக்களுடைய காணிகளை விட்டு இராணுவம் வெளியேறி வருகின்றது.

ஆனால், தற்போது தேர்தலை முன்னிட்டும் எதிர்வரும் (25 ஆம்) திகதி ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருகை தரவுள்ள நிலையிலும் பொதுநலவாய நாடுகளின் மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ளதாலுமே இராணுவத்தினர் காணிகளை விடுவிக்கின்றனர்.





திகதி ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் தலைவி நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருகை

குறிப்பாக தேர்தலை நோக்காக கொண்டே இது நடைபெறுகிறது எனலாம்.

வலிகாமம் வடக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள 6 ஆயிரத்து 500 ஏக்கருக்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் காணிகளை படையினர் விடுவிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

மேலும் வலிகாமம் வடக்கு காணிகளை விடுவிக்க ஏற்கனவே பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. இருப்பினும் அந்தக் காணிகள் விடுவிக்கப்படவில்லை.

மேலும் இங்கு நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினர் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். இன்னும் 13 ஆயிரம் இராணுவத்தினர் தான் இங்குள்ளனர் என யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி கூறியுள்ளார்.

அத்தோடு பலாலியை விடுவிக்குமாறு கோரிக்கை விடவேண்டாம் என்ற தொனியிலும் அரியாலையில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் பேசியுள்ளார்.

ஆனால், நாங்கள் யாழ்.மாவட்டத்தில் மட்டும் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினரை பற்றி கூறவில்லை. வடக்கு மாகாணத்தில் ஒன்றரை இலட்சம் இராணுவத்தினர் இருக்கின்றனர். அது பற்றி யாரும் மறுத்து கூறவில்லை.

ஒன்றரை இலட்சம் இராணுவத்தினர் இருக்கின்ற வட மாகாணத்தில் 10 இலட்சம் மக்கள்தான் வாழ்கின்றனர்.

10 இலட்சம் மக்களுக்கு ஒன்றரை இலட்சம் இராணுவம் தேவையா? எனவும் இராணுவத்திற்கு அப்பால் கடற்படை, விமானப்படை, விசேட அதிரடிப்படையினர், சிவில் இராணுவப் படை என பல்வேறு பட்ட வடிவங்களில் படைகள் இருக்கின்றன.

எனவே, ஜெனரல் ஹத்துருசிங்க கூறுவது போன்று 13 ஆயிரம் இராணுவத்தினர் மட்டும் இங்கு நிலைகொண்டிருக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் மேலும் குற்றம் சாட்டினார்.

(அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு கொல்லியம்பாவை



## ஆன்மீகம் 78

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

மகாசக்தி தரும் தெய்வீக மருந்து சித்தம் தெளிய மருந்துதான் இருக்கிறது. பேரின்பம் அதற்குள்ளே என்று வள்ளலார் பாடியது தான் நினைவுக்கு வரும். அதை உட்கொண்டவர்கள் சற்று நேரத்தில் பேச்சிழப்பர். அவர்கள் சிந்தனை ஒருமைப்படும் ஆனந்தமாய் அமர்ந்து இருப்பார்கள். அவர்கள் அனுபவம் என்ன என்பது எனக்குத் தெரியாது. ஆனால் என் அனுபவத்தை வாசகர்களாகிய உங்களுக்கு தெரிவிப்பது என் கடைமை ஆகும். அந்த தெய்வீக ஞானப்பொடி எனக்கு பரமானந்தத்தை அள்ளித்தரும்! மனம் ஒருமைப்படும். என்கண்களில் அருகிலிருக்கும் ஏதாவது ஒருபாறையில் உருவம் தெரிந்த இடத்தில் மஞ்சள் குங்குமமிட்டு, காட்டில் கண்ணில் படும் மலர்களையும், இலைகளையும் பறித்து வந்து- அர்ச்சனை செய்வேன். வடமொழி படித்தறியா நான் பண்டிதர் போல சரளமாக சமஸ்கிருத மந்திரங்களைச் சொல்லி மணிக்கணக்கில் அர்ச்சனை செய்து முடித்து- இறுதியில் கற்பூரம் காட்டி நமஸகரித்து வணங்குவேன். என் மூச்சின் ஆற்றலும் உடலில் ஏற்படும் ஆவேசமும், அடங்கும் வரை மந்திரங்கள் சொல்வது ஒயாது. மந்திரம் என்றாலே சமஸ்கிருதம். அரபி போல் எல்லா நாட்டு பாஷைகளும் சரளமாய் வரும். ஆனால், மந்திரம் சொல்லும் போது என் மனம் புருவ மத்தியில் ஆழ்ந்து அங்கு விநோதமான காட்சிகளும், குருவின் திருஉருவமும், சொல்லமுடியாத சொல்லக் கூடாத காட்சிகள் எனக்குத்தோன்றும். விதவிதமான ரூபங்கள் உயிருடன் என் நெற்றியில் தோன்றும்போது என் உடல் என் வசம் இருக்காது கட்டுப்படுத்த முடியாது. ஏதோ ஒரு உகலத்தில் மனிதர்களே இல்லாத மண்டலத்தில் இருப்பேன்.



சென்னை தியாகிகளுடன் மகாலிங்க சித்தர் சமாதியில், அன்னை சித்தர் (பெரம்பலூர்)


அந்த தெய்வீக உணர்வு உணர்ந்தவனுக்கு தான் உணர்வாய் இருக்கும். அந்த உணர்வை உடலில் கண்டவனை உலக ஆசை ஒன்றும் செய்யாது.

ஆனால், சிறுகச் சிறுக, நான் என்வயப்படும்போது மந்திர வேகமும் சேர்ந்து குறையும். தியானத்தில் எது நடந்தாலும் என் உள்ளுணர்வு மட்டும் இவைகளைக் கவனித்துக்கொண்டே இருக்கும். இது என்ன பைத்தியக் காரன் போல் நடந்து கொள்கிறோமோ என்று உள்ளுணர்வு அவதானிக்கும். இது ஏதோ ஒரு அமானுஷ்ய சக்தியின் காரணத்தால் ஏற்படும் நிகழ்வுகள் என்பதும்புரியும். தியான நிலை முடிந்ததும் என் உள்ளுணர்வு நடந்தவைகளை எனக்கு நினைவுபடுத்தும் போது வெட்க உணர்வால் கண்களைத் திறக்கவே இயலாமல் தவிப்பேன். பிறகு ஒரு வழியாக கண்களைத் திறக்கும்போது வழக்கம்போல் சித்தர் பெருமான் என்னை உற்று நோக்கியவாறு அமர்ந்து கொண்டிருப்பர்.

என்ன ராஜா பூஜையெல்லாம் நடந்துவ முடிந்துவிட்டதா? எல்லோரும் உனக்காக காத்திருக்கிறோம்! முதலில் எல்லோரும் பசியாறுவோம், என் பார்கள். உடன் வந்தவர்களில் வழக்கமாக என்னை பிடிக்காத சிலர் நாம் பசியிலேயே வாடிக்கிடக்கிறோம். இவன் என்னடான்னா பெரிய சாமியார் மாதிரி பயாஸ்கோப் காட்டிக்கிட்டு இருக்கிறான். சினிமாக்காரன் இப்போ கமரா இல்லாமலேயே நல்லா நடிச்சிக்கிட்டுருக்கிறான். சமயம் கிடைக்கும் போது பேச, இல்லை- இல்லை அவருக்கு ஏதோ அருள்கிட்டி இருக்கிறது. என்று சிலர் மறுக்க அவர்களுக்குள் வாத பிரதி வாதங்கள் ஏற்படும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இவர்கள் என்னை ஏன் வெறுக்கிறார்கள். இவர்களுக்கு நான் எந்த கெடுதலும் நினைத்தது இல்லையே. என என் மனம் வருந்தியது.

தொடரும்

# தெலுங்கானா போராட்டம்- புதைந்துள்ள உண்மைகள்




## ஆந்திர மாநிலத்தை நிலைகுலையச் செய்திருக்கும் தெலுங்கானா தனிமாநில போராட்டம் தேசிய இன போராட்டமா...? இல்லை பிரிவினைவாதமா...?

தனியார்ம- தாராளமயமாக்கலைத் தொடர்ந்து கல்குவாரி, நிலக்கரி மற்றும் சுண்ணாம்புக்கல் சுரங்கங்கள், வீட்டுமனைத் தொழில், தகவல் தொழில்நுட்பத்துறை, சேவைத்துறை, சினிமாத்துறை, காடுகள் முதலான வற்றில் தெலுங்கானாவுக்கு வெளியேயுள்ள பிற மாவட்டங்களின் புதுப் பணக்கார மாஃபியா கும்பல்களின் ஆதிக்கமும் சூறையாடலும் தெலுங்கானா பிராந்தியத்தில் தீவிரமடைந்தன. ஆடம்பர, உல்லாச, களிவெறியாட்டங்களில் இக்கும்பல் கொட்டமடித்தது. இப்புதுப்பணக்கார கும்பலின் வாரிசுகள் உயர்கல்வி, வேலைவாய்ப்பு, அரசாங்கப் பதவிகளைப் பெருமளவில் கைப்பற்றிக் கொண்டனர். தெலுங்கானா நடுத்தரவர்க்கம் அவர்களோடு போட்டியிட இயலாமை குமுறியது.

அதன் எதிரொலியாக தெலுங்கு தேசம் கட்சியிலிருந்து விலகிய சந்திர சேகர ராவ் தலைமையில் தெலுங்கானா ராஷ்டிர சமதி என்ற புதிய கட்சி 2001இல் உருவாகியது. தெலுங்கானாவைத் தனி மாநிலமாக்கவேண்டும் என்பதே இக்கட்சியின் மையமான கோரிக்கை.

ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டியின் மறைவைத் தொடர்ந்து, காங்கிரஸ் நிலவும் கோஷ்டிச் சண்டையைச் சாதகமாக்கிக் கொண்டு, தோல்வியடைந்து கிட்டத்தட்ட முடமாக்கிவிட்ட தமது கட்சிக்கு புத்துயிர் அளிக்கும் நோக்கத்துடன், தனித் தெலுங்கானா கோரி கடந்த நவம்பர் இறுதியிலிருந்து உண்ணாவிரதப்போராட்டத்தை தொடங்கினர், சந்திரசேகர ராவ். அதை ஆதரித்து மாணவர்களும் இளைஞர்களும் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர். மாணவர்கள் மீதான போலிசின் கண்மூடித்தனமான தடியடித்தாக்குதலை தொடர்ந்து ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர்கள், அறிவுறைத்துறையினர் - என அம்மாநிலமெங்கும் போராட்டத்தை ஆதரித்து நடுத்தர வர்க்கத்தினர் அணிதிரண்டனர். தனித் தெலுங்கானா மாநிலம் கோரி சிலர் தற்கொலை செய்துகொண்டதும், உணர்ச்சிமிகு போராட்டமாக அது மாறத் தொடங்கியது.

இதற்கு மேலும் தெலுங்கானா தனி மாநிலக்கோரிக்கையைத் தட்டிக் கழித்தால், தெலுங்கானா பிராந்தியத்தில் காங்கிரசு செல்லாக்காசாகிவிடும் என்பதாலும், இதேபோல நாட்டின் இதர பகுதிகளிலும் தனி மாநிலம் கோரி போராட்டங்கள் பெருகத் தொடங்கிவிடும் என்ற அச்சத்தாலும், போராட்டத்தைச் சாந்தப்படுத்தி நீர்த்துப்போக வைக்கும் உத்தியுடனும் காங்கிரசு ஆட்சியாளர்கள் தெலுங்கானா தனி மாநிலக் கோரிக்கை[illegible] ஏற்பதாக அறிவித்தனர். தனி மாநில அறிவிப்பைத் தொடர்ந்து சந்திரசேகரராவ், உண்ணாவிரதத்தைக் கைவிட்டதோடு, போராட்டங்களைக் நிறுத்திக் கொள்வதாக அறிவித்து, 2014-க்குள் தெலுங்கானா தனி மாநிலத்தை உருவாக்கித் தருமாறு மைய அரசிடம் கோரினர்.

ஆனால், தெலுங்கானா மாநிலம் உருவானால், அது இன்றைய ஆந்திரப் பிரதேசத்துக்கு இழப்பாக இருக்கும், தலைநகரான ஐதராபாத் தெலுங்கானாவுக்குப் போய்விடும்என்றெல்லாம் வாதங்களை வைத்து, தெலுங்கானாவின் கோரிக்கையை ஆந்திராவின் பிறபகுதிகளில் உள்ள பெருமுதலாளிகளும், புதுப் பணக்கார நில மாஃபியா - சுரங்க மாஃபியாக்களும் எதிர்க்கின்றனர். தெலுங்கானா பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்துவது இவர்கள் தான். ஐதராபாத் மற்றும் தெலுங்கானா பிராந்தியத்திலுள்ள பெரு நகரங்களில் சினிமாத்துறை, வீட்டு மனைத்துறை, தகவல் தொழிநுட்பத்துறை முதலானவற்றில் கோடிகோடியாய் முதலீடு செய்து சூறையாடுவதும் இந்தக் கும்பல்கள்தான். இவர்கள் தான் இப்போது தெலுங்கானா எதிர்ப்புப் போராட்டத்தை பின் னணியிலிருந்து இயக்குகிறார்கள்.

அரசியல் சட்டப்படி, புதிய மாநிலத்தை உருவாக்குவதற்கான மசோதா, நாடாளுமன்றத்தில்தான் அறிமுகப்படுத்தப்படவேண்டும். அதன் பிறகு, அரசுத் தலைவர் ஒப்புதல் பெற்று, கருத்தறிவதற்காக அம்மாநிலச்சட்டமன்றத்துக்கு அனுப்படவேண்டும். சட்டமன்றத்தின் கருத்தை நாடாளுமன்றம் ஏற்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.




ஆனால், காங்கிரசு ஆட்சியாளர்களோ, இத்தீர்மானம் ஆந்திரசட்ட மன்றத்தில் அறிமுகப் படுத்தப்பட்டு ஒருமித்த கருத்தின் படி முடிவு செய்யப்படும் என்று கூறுகின்றனர். காங்கிரசின் நிதியாதாராமாக உள்ள புதுப் பணக்கார மாஃபியா கும்பலைச் சாந்தப்படுத்தவும், ஒருமித்த கருத்து ஏற்படவில்லை என்று காரணம் காட்டி, மீண்டும் இழுத்தடிக்கவுமே காங்கிரசு கயவாளிகள் முயற்சிக்கின்றனர்.

இணையம்

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிக்க நீர் கேட்டவர்களுக்கு தோட்டாக்களால் பதில்

## அரசை சாடுகிறார் திஸ்ஸ அத்தநாயக்க

குடிப்பதற்கு குடிநீர் கேட்ட அப்பாவி மக்களுக்கு மனச்சாட்சியின்றி துப்பாக்கி தோட்டாக்களை பதிலாக வழங்கியது இலங்கை அரசு. உலகில் இதுவரை ஆட்சிக்கு வராத மிகவும் கேவலமான காட்டுமிராண்டித்தனமான அரசாங்கம் இது என்பதைத் தனது செயல் மூலம் அது நிரூபித்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ரத்துபஸ்வல மக்கள் கோரிக்கை தொடர்பில் அரசாங்கம் பதில் வழங்கிய விதத்தை ஐக்கிய தேசியக் கட்சி அருவருக்கத்தக்கதாக கருதி வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்துடன் மனிதாபிமானத்தை மதிக்கும் உலகில் உள்ள அனைவரும் இதனைக் கண்டிக்க வேண்டும்.

இச் சம்பவத்தின் போது இடம்பெற்ற இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் அகப்பட்டு அவ் வழியால் சென்று கொண்டிருந்த பாடசாலை மாணவர் ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

தண்ணீர் கேட்ட மக்களுக்கு இராணுவத்தை கொண்டு சட்டவிரோதமாக அரசு தான் நினைத்தவாறு துப்பாக்கி வேட்டுக்களால் பதில் வழங்கியிருப்பது தெளிவாகியுள்ளது.

சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டு மேலும் 34 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் மூன்று பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக கூறப்படுகிறது.

அத்துடன் இந்த சம்பவம் தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதலை கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாக கண்டிருக்கிறது என தெரிவித்துள்ளார். (அ-2)

# பலாத்கார வழக்குடன் தொடர்புடைய கணவன் மற்றும் மனைவிக்கு பிணை

(கரவெட்டி)

வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்த கணவன் மனைவியான தம்பதியர் மூன்றரை வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சொந்த பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரவெட்டி பகுதியில் இளம் பெண்ணொருவரை மூவர் பாலியல் பலாத்காரம் செய்தது மட்டு மன்றி அவரிடமிருந்த நகைகளையும் அபகரித்துச் சென்ற வழக்குடன் தொடர்புடைய கணவன்-மனைவி ஆகிய இருவரையும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த சந்தேக நபர்கள் மன்றில் தம்மை பிணை எடுக்க எவரும் இல்லையெனவும் தாம் மூன்றரை வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.

இந் நபர்களுக்கு முன்னதாகவே பிணைமனு வழங்கப்பட்டிருந்தும் பிணை எடுக்க எவரும் இல்லாதிருந்தமையைக் கருத்தில் கொண்டு இருவரையும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சொந்த பிணையில் செல்ல அனுமதித்ததுடன் தினமும் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் அவர்கள் சமுகம் தந்து கையொப்பமிட வேண்டுமெனவும் நீதவான் உத்தரவிட்டார்.

இச்சம்பவத்துடன் தொடர்புபட்ட மற்றுமொரு சந்தேக நபருக்கும் இவ்வாறு பிணை வழங்கப்பட்ட போதிலும் வேறொரு வழக்கிற்காக அவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-9-24)

# முன்னேஸ்வரத்தில் மிருக பலி பூஜைகள்

(கொழும்பு)

முன்னேஸ்வரம் காளி கோயிலில் இம்முறை மிருக பலி பூஜைகள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆலயத்தின் சிரேஷ்ட பூசகர் ஒருவரை ஆதாரம் காட்டி ஆங்கில ஊடகமொன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

மிருக பலி பூஜைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது அரசாங்கத்தின் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு நடைபெறவிருந்த மிருக பலி பூஜைகளைப் பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தடுத்திருந்தார். இச்சம்பவம் துரதிர்ஷ்டவசமானது என ஆலய பூசகர் தெரிவித்துள்ளார். இவ்வாண்டில் எவ்வித தடையுமின்றி பூஜைகளை நடத்த விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பிரான்ஸிய கப்பல் கொழும்பு வருகிறது

இலங்கைக்கு இதுவரை பயணிக்காத மிகப் பெரிய கப்பல் ஒன்று இன்று திங்கட்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளதாக இலங்கைத் துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொழும்புத் துறைமுகத்தை விரிவுபடுத்தும் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள கொழும்பு தெற்கு துறைமுகம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு பிரான்சிற்கு சொந்தமான போககஸ் கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு வரவுள்ளதாக அதிகார சபை கூறியுள்ளது.

ஜோர்தானில் இருந்து புறப்படும் இந்தக் கப்பல் இன்று அதிகாலை கொழும்புதுறைமுகத்தை வந்தடையவுள்ளது.

பிரான்ஸ் நாட்டின் மிகப் பெரிய சரக்கு கப்பல் இலங்கைக்கு வருவது மிகவும் முக்கியமான நிகழ்வு எனவும் அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ-2)




- 1100 - லண்டன் மன்னனாக முதலாம் ஹென்றி முடி சூடினான்.
- 1583 - சேர் ஹம்பிறி கில்பேர்ட் வட அமெரிக்காவில் லண்டனுக்கான முதலாவது குடியேற்ற நாட்டை (தற்போதைய) சென் ஜோன்ஸ், நியூபவுண்லாந்தில் அமைத்தார்.
- 1806 -இலங்கையில் முகமதியர்களுக்கான திருமணச் சட்ட விதிகள் அரசியல் நிர்ணய சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டன.
- 1884 -விடுதலைச் சிலைக்கான அடிக்கல் நியூயோர்க் துறைமுகத்தில் பெட்லோ தீவில் நாட்டப்பட்டது.
- 1914 - ஐக்கிய அமெரிக்காவும் பனாமாவும் கூட்டாக பனாமாக் கால்வாய் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: லாத்வியா சோவியத் ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டது.
- 1960 - புர்கினா பாசோ (அப்பர் வோல்ட்டா) பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1962 - 17 மாதத் தேடுதல் வேட்டையின் பின்னர் நெல்சன் மண்டேலா கைது செய்யப்பட்டார். இவர் 1990 ஆம் ஆண்டு வரை விடுவிக்கப்படவில்லை.
- 1962 - அமெரிக்க நடிகை மரிலின் மன்றோ லொஸ் ஏஞ்ஜெலீசில் உள்ள அவரது வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.
- 1963 - ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், ஐக்கிய இராச்சியம் ஆகியன காற்று மண்டலம், விண்வெளி மற்றும் நீருக்கடியில் அணுச் சோதனைகளை நிறுத்த உடன்பட்டன.
- 1969 - மரைனர் 7 செவ்வாய்க் கோளுக்கு மிக அண்மையாக (3,524 கிமீ) சென்றது.

**பிறப்புக்கள்**

- 1908 - ஹரல்ட் ஹோல்ட், அவுஸ்திரேலியாவின் 17ஆவது பிரதமர்
- 1923 - தேவன் நாயர், சிங்கப்பூர் ஜனாதிபதி
- 1930- நீல் ஆம்ஸ்ட்றோங், சந்திரனில் காலடிவைத்த முதல் மனிதர்
- 1968 -நளாயினி தாமரைச்செல்வன், ஈழத்து எழுத்தாளர்

**இறப்புகள்**

- 1895 - பிரெட்ரிக் ஏங்கல்ஸ், மாக்சியத் தத்துவ வியலாளர்
- 1962 - மார்லின் மன்றோ, அமெரிக்க நடிகை

### பிரெட்ரிக் எங்கெல்ஸ்



பிரெட்ரிக் எங்கெல்ஸ் 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜேர்மன் அரசியல் மெய்யியலாளராவார். இவர் பிரசியாவிலுள்ள பர்மன் என்னுமிடத்தில் 1820 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி பிறந்தார். 20 வயது வரை நாய் பிழைப்பு என்று அவரே குறிப்பிடும் வணிகத்தில் ஈடுபட்டார். சிறுவனாக இருக்கும் பொழுதே மதங்களின் மீதும் முதலாளித்துவத்தின் மீதும் வெறுப்பு கொண்டிருந்தார். இக்காலக்கட்டத்தில் பெர்னிலுள்ள மெய்யியல் அறிஞர் எகலின் கொள்கையைப் பின்பற்றுபவர்களோடு தொடர்பிலிருந்தார்.

மான்செஸ்டரில் தன்னுடைய தந்தையின் நூற்பு ஆலையில் 1845 ஆம் ஆண்டு வேலை செய்த பொழுது தொழிலாளர்களின் மேல் முதலாளித்துவத்தின் வரையற்ற அடிமைத்தனத்தை நேரடியாக உணர்ந்தார். தன்னை முன்னிலைப்படுத்தாமல் மார்க்சை முன்னிலைப்படுத்தினார் எங்கெல்ஸ். மார்க்சின் கருத்துக்களை வளமுள்ளதாக்க அவ்வப்போது உறவாடி பல புதிய கருத்துக்களையும் மார்க்சுக்குக் கொடுத்தார். மதவாதம் மக்களின் வாழ்வை மூச்சடக்கச் செய்து கடுமையானதாக்கிக் கொண்டிருக்கிறது.

மதவாத தத்துவமானது சாதாரண மக்களின் அரசியல் நலன்களுக்கு எதிரானது. முதலாளி/நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் நலனைக் காப்பதற்காகவே உள்ளது எனவும் முதலாளித்துவமானது தொழிலாளிகளுக்கு வேலை பாதுகாப்பின்மையை உருவாக்கி உள்ளது. தன் வாழ்க்கை என்னவாகுமோ என்ற பயத்தை உண்டாக்கியுள்ளது என முதலாளித்துவத்தைப் பற்றியும் 1839 ஆம் ஆண்டு முதலாளித்துவ சமூகத்தில் மக்களின் சிந்தனைகளும், செயற்பாடுகளும் பொருளாதார நலன் குறித்தே சுற்றி வருகின்றன என முதலாளித்துவ பொருளாதாரத்தைப் பற்றியும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

# மாகாண தேர்தலின் பின்னர் இரு அதிகாரங்கள் பறிக்கப்படும்

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள 9 மாகாண சபைகளின் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பறிக்கப்படும் என இலங்கைப் பிரதமர் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்கு, வட மேற்கு மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் நடந்து வருகிறது. இப்பணிகளைப் பார்வையிட்ட பிரதமர் ஜயரத்ன நிருபர்களிடம் கூறுகையில்,

இலங்கையில் உள்ள 9 மாகாண சபைகளின் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பறிக்கப்படும் என உறுதிபட தெரிவித்தார்.

இம் மாகாணங்களின் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை பறிக்க ஏதுவாக, 13 ஆவது சட்ட திருத்தத்தில் திருத்தங்களை கொண்டு வர இலங்கை முயற்சி செய்துவருகிறது.

எனினும் இந்திய அரசின் அழுத்தம் காரணமாக, இந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவது தேர்தல் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த 1987 ஆம் ஆண்டு இந்திய அரசின் தலையீட்டின் பேரில், அப்போதைய பிரதமர் ராஜீவ் மற்றும் ஜயவர்த்தன இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் காரணமாக, இலங்கையில் மாகாண சபைகள் உரு வாக்கப்பட்டன.

தற்போது அவற்றுக்கு அளிக்கப்பட்ட காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பறிக்க மஹிந்த ராஜபக்ஷ அரசு முயற்சி செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நியூசிலாந்து பால்மாவில் பக்றீரியா கலப்படம்

நியூசிலாந்தின் மிகப் பெரிய பால்மா நிறுவனத்தின் குழந்தைப் பால்மா உள்ளிட்ட பொருட்களில் பாட்டுலிஸம் எனும் நோயைத் தரவல்ல பக்றீரியா கிருமி கலந்திருக்கலாம் என அந்நாட்டின் அரசாங்கம் எச்சரித்துள்ளது.

பாட்டுலிஸம் என்பது சில நேரம் உயிரிழப்பையும் ஏற்படுத்தவல்ல ஒருவகை வாத நோய்.

அவுஸ்திரேலியா, தாய்லாந்து, மலேசியா, வியட்நாம், சவுதிஅரேபியா உட்பட பல வெளிநாடுகளிலும் தமது வாடிக்கையாளர்களுக்கு தகவல் கொடுத்துள்ளதாக நியூசிலாந்தின் முன்னணி பால் உற்பத்திப் பொருட்கள் நிறுவனமான ஃபோன்டெர்ரா கூறுகிறது. 2008 இல் சீனாவில் குழந்தை கள் பால்மா ஒன்றில் மெலமின் கலப்படம் ஏற்பட்டு குழந்தைகள் அறுவர் உயிரிழந்ததை அடுத்து இறக்குமதி செய்யப்படும் பால் மாவுக்கு சீன நுகர்வோர் மாறியிருந்தனர். பாதிப்புள்ள பால்மா பொருட்களை கடைகளில் இருந்து உடனடியாக திரும்பப் பெற சீனா உத்தரவிட்டுள்ளது.

நியூசிலாந்திலிருந்து இறக்குமதியாகும் பொருட்கள் மீதும் தீவிர பரிசோதனைகள் மேற்கொள்ள சீனா உத்தரவிட்டுள்ளது. நியூசிலாந்திலிருந்து பால்மா இறக்குமதி செய்யும் நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசுக்கு கடிதம் எழுதியும் இதுவரை பதில் கிடைக்கவில்லை

## மத்திய அமைச்சர் நாராயணசாமி



(சென்னை)

**இலங்கை கடற்படையினர் தமிழக மீன்வர்களைக் கைது செய்யும் சம்பவங்கள் தொடராமல் இருக்க தமிழக, புதுவை மீனவர்கள் தமிழக முதல்வரைச் சந்தித்துப் பேச வேண்டுமென மத்திய அமைச்சர் வி.நாராயணசாமி கோரிக்கைவிடுத்துள்ளார்.**

காரைக்காலுக்கு கடந்த வெள்ளிக்கிழமை வருகை தந்த அமைச்சர், சிறையில் இருக்கும் காரைக்கால்மேடு, கிளிஞ்சல் மேடு கிராமங்களைச் சேர்ந்த 29 மீனவர்களின் குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

அவ்வேளை அமைச்சரிடம் மீனவர்கள், கடந்த 2 மாதகாலமாக இந்தியக் கடல் பகுதியிலேயே நாம் மீன்பிடித்து வந்தோம். ஆனால், அங்கு மீன்வளம் குறைந்துவிட்டமையால், எமக்கு பெரும் நட்டம் ஏற்பட்டு குடும்பம் நடத்தமுடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் மீன்கள் அதிகமிருக்கும் பகுதியை நோக்கிச் செல்லும் போது, நாம் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளாகின்றோம்.

எனவே, நாம் இலங்கைப் பகுதியில் குறிப்பிட்ட மாதங்கள் மீன்பிடிக்க உரிமை பெற்றுத் தர வேண்டும் என்றனர்.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறுகையில், தமிழக, புதுவை மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ள சம்பவங்களை இலங்கை அமைச்சர்களான ஆறுமுகம் தொண்டைமான், செந்தில் தொண்டைமானுடன் பேசி வலியுறுத்தியுள்ளேன்.

கைது செய்யப்பட்டவர்களை ஓரிரு நாட்களில் விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும்.

மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்படாதிருக்க மத்திய அரசு இலங்கை அரசுடன் பேசி ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்த முயன்றுள்ளது.

இலங்கை அரசும் இதற்கு ஒப்புக் கொண்டுள்ளது. இருநாட்டு மீனவர்களும் முதலில் பேச்சு நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

இது குறித்து நடவடிக்கை எடுக்க மத்திய அரசு இரண்டு, மூன்று முறை தமிழக அரசுக்கு கடிதம் எழுதியும், இதுவரை பதிலெதுவும் இல்லை. இந்நிலையில் மத்திய அரசு இப்பிரச்சினையில் நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

தமிழக, புதுவை மீனவ அமைப்பினர் தமிழக முதல்வரை சந்தித்து இது குறித்து பேச வேண்டும். முதல்வரின் சம்மதத்தை பெற்றுவிடின் இப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு ஏற்பட்டுவிடும் என்றார். (அ-2)

# நிதானத்துடன் பரீட்சையை எதிர்கொள்ளுங்கள்

## வடக்கு ஆளுநர் வாழ்த்து



வட மாகாணத்தில் க.பொ.த. உ/த பரீட்சையில் தோற்றும் வடமாகாண மாணவர்களுக்கான ஆளுநரின் வாழ்த்துச் செய்தி.

நாடெங்கிலும் நடைபெறும் க.பொ.த. உ/த பரீட்சை இன்று ஆரம்பமாகிறது. இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த 16 ஆயிரத்து 604 மாணவர்களுக்கென வடமாகாண கல்வி அமைச்சின் மாகாண கல்வித் திணைக்களமும், வலயக் கல்வி திணைக்களமும் பாடசாலை மட்டத்தில் ஒருங்கிணைந்து கருத்தரங்கு பயிற்சிகளை நடத்தி சிறந்த முறையில் அவர்களை பரீட்சைக்குத் தயார் படுத்தியுள்ளது.

இப் பரீட்சையில் இம்முறை வட மாகாணத்திலிருந்து சிறந்ததான அடைவு மட்டத்தை மாணவர்கள் பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

மாணவர்கள் இப்பரீட்சையை நிதானத்துடனும் துணிவுடனும் எதிர்கொண்டு வினாக்களுக்கு உரிய முறையில் விடையளித்து சிறந்த பெறுபேறுகளை பெறவேண்டுமென வாழ்த்துகின்றேன். (அ)

# தேர்தலுக்காக இன்னும் 20 மில்லியன் தேவை

(கொழும்பு)

எதிர்வரும் மூன்று மாகாண சபை தேர்தல் செலவுகளுக்கு மேலும் 20 மில்லியன் ரூபாய்கள் தேவை என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கண்காணிப்பாளர்களை அழைப்பதற்காகவே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மாகாண சபைத் தேர்தல்களுக்கு செலவிடப்படும் ஆயிரத்து 500 மில்லியன்களுக்கு மேலதிகமாகவே இந்த 20 மில்லியன் ரூபாய்கள் கோரப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தல்களுக்காக சர்வதேசத்தில் இருந்து 11 கண்காணிப்பாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


# நயினாதீவில் ஆடிப்பூர திருவிழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருக்கோயில் ஆடிப்பூரத் திருவிழா கடந்த 31 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடர்ச்சியாக 10 நாட்கள் நடைபெற்று வருகின்றன.

இவ் விழாவின் 10 ஆம் நாள் வெள்ளிக்கிழமை ஆடிப்புரத்தினத்தன்று அம்பாளுக்கு விசேட திரவிய அபிஷேகம், 108 சங்காபிஷேகம், நவோத்திர சகஸ்ர மகாசங்காபிஷேகம் என்பன நடைபெற்று தொடர்ந்து தீபாராதனை வேதஸ்தோத்திர திருமுறைப் பாராயணம், திருவூஞ்சல், புஸ்பாஞ்சலி ஆகிய பூஜை வழிபாடுகள் இடம்பெற்று அம்பாள் வீதியுலா வரும் நிகழ்வும் அன்னதான நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (அ)





திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பகத்தில் ஆக்கத்திறன் நாள் விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பணிப்பாளர் பா. தனபாலன், ஆசிரியர்கள் ஆகியோரின் வழிகாட்டலில் சிறுவர்கள் புத்தாக்கங்களை மேற்கொள்வதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# இராணுவ தளபதிகள் வரிசையில் பொன்சேகாவின் படம் நீக்கம்

(கொழும்பு)

இலங்கையின் இராணுவத்தளபதிகள் வரிசையில் இருந்து சரத் பொன்சேகா நீக்கப்பட்டுள்ளார்.

அதனடிப்படையில் இராணுவத் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள இராணுவத் தளபதிகளின் நிழற் பட வரிசையில் இருந்து சரத்பொன் சேகாவின் படம் நீக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இலங்கையின் 20 ஆவது இராணுவத் தளபதியாக பொறுப்பேற்றுக்கொண்ட லெப்.ஜெனரல் தயாரத்னாயக்க, பதவியிலிருந்து ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி ஜென்ரல் ஜெகத் ஜெயசூரியவின் நிழற் படத்தை திறந்து வைத்தார்.

ஆனால், அந்த நிழற் படத்திற்கு முன்னே இருக்க வேண்டிய, முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன் சேகாவின் படம் அங்கு இருக்கவில்லை. சரத்பொன்சேகாவின் படம் இருக்க வேண்டிய இடத்திலேயே ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவின் படம் வைக் கப்பட்டிருந்தது.

இதேவேளை, 2009 ஆம் ஆண்டு ஜூலையில் ஜெயசூரிய இலங்கை இராணுவத் தளபதியாக பதவியேற்ற போது, முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன் சேகாவின் நிழற் படத்தை திறந்து வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இடதுசாரி வேட்பாளரை நீக்கியது அரசாங்கம்

## அமைச்சர் வாசு கடும் விசனம்

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் இடம் பெற்றுள்ள இடதுசாரி ஜனநாயக முன்னணியின் வேட்பாளரை இறுதி நேரத்தில் நீக்கியமை தொடர்பில் அமைச்சர் வாசுதேவ நாயணக்கார விசனம் வெளியிட்டுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர் முன்னணியில் போட்டியிட இடதுசாரி ஜனநாயக முன்னணிக்கு ஒதுக்கப்பட்ட ஒரு இடத்துக்கு [illegible] பவரை களமிறக்க வாசுதேவ நாணயக்கார முடிவு செய்திருந்தார்.

ஆனால், இறுதி நேரத்தில் இந்த வேட்பாளர் பட்டியிலில் மாற்றம் செய்யப்பட்டு, அவ்விடத்துக்கு அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் ஒருவருக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பலத்த ஏமாற்றமும், அதிருப்தியும் கொண்ட அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இது குறித்து ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலளார் சுசில் பிறேம ஜயந்திடம் கடும் விசனம் வெளியிட்டுள்ளார்.

அத்துடன் ஆளும் ஐக்கிய மக்கள் சுந்திர முன்னணி வேட்பாளர் பட்டியலில் இருந்து இடதுசாரி ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் எதற்காக நீக்கப்பட்டார்? என கேள்வி எழுப்பி ஜனாதிபதிக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார். ஆனால், இக்கடிதத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதுவரை பதிலளிக்கவில்லை என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(முல்லைத்தீவு)

கருநாட்டுக்கேணி கிராமத்தில் கசிப்பு உற்பத்தி நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கசிப்பு உற்பத்தி நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் கலாசார சீரழிவுகளும் குடும்பத்தில் பிணக்குகளும் ஏற்படுகின்றன.

எனவே, கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்த உரிய தரப்பினர் முன்வரவேண்டுமென்பதே அப்பகுதி மக்களின் வேண்டுகோளாகும்.

(ம-267)

## வருடாந்த திருவிழா

(பூநகரி)

கௌதாரிமுனை கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மண்ணித்தலை செபஸ்தியார் ஆலய திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகி 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து ஆறு நாட்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் 24 ஆம் திகதி திருநாள் திருப்பலியுடன் நிறைவடையவுள்ளது.

திருவிழாவை முன்னிட்டு சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதிகள் என்பன ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-9-84)

## இறுவெட்டு வெளியீடு

(பூந்தோட்டம்)

சு.வரதகுமாரின் இயக்கத்தில் தயாரிக்கப்படவுள்ள **பூவிழி டொட் கொம்** என்ற திரைப்படத்தின் பாடல் தொகுப்புக்களின் இறுவெட்டு வெளியீடு எதிர்வரும் 16 ஆம் திகதி வவுனியாவில் இடம் பெறவுள்ளது.

ஏ.வி.ஆர். மூவியின் தயாரிப்பில் வெளிவரவுள்ள இத் திரைப்படம் தீபாவளியன்று இந்தியாவின் வட பழனியிலுள்ள திரையரங்கொன்றில் வெளியிடப்படவுள்ளது.

இப் படத்திற்கான இசையை இசையமைப்பாளர் கந்தப்பு ஜெயந்தன் வழங்கியுள்ளார்.

(ம-9-266)

### வளப்பற்றாக்குறையுடன் இயங்கும்

# புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை வளப்பற்றாக்குறையுடன் இயங்குவதால் வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் பெரும் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டிய நிலை உள்ளது.**

கடந்த ஜுன் மாதம் தொடக்கம் இயங்க ஆரம்பித்துள்ள இப் பொதுச் சந்தையை புதுக்குடியிருப்பு கிழக்கு, புதுக்குடியிருப்பு மேற்கு, ஆனந்தபுரம், மன்னாகண்டல், மல்லிகைத்தீவு, இரணைப்பாலை, கோம்பாவில், சிவநகர், வள்ளிபுனம், தேவிபுரம் ஆகிய கிராம மக்கள் பயன்படுத்துகின்றனர்.

இச் சந்தையில் 100 இற்கும் மேற்பட்ட வியாபாரிகள் வியாபாரம் செய்வதுடன் தினமும் ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட நுகர்வோர் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வந்து செல்கின்றனர்.

இந்நிலையில் இச்சந்தையில் வாகன தரிப்பிடம் இல்லை; சந்தைக்கு செல்கின்ற பாதை குன்றும் குழியுமாக காணப்படுகிறது; சந்தையின் தளத்திற்கு சீமெந்து இடப்படவில்லை. சுற்று வேலி அமைக்கப்படாமையால் கால்நடைகளும் சந்தையை அசுத்தம் செய்கின்றன.

மேலும் கழிவுநீர் வாய்க்கால் வசதி இல்லை. கழிவுகள் தினமும் அகற்றப்படுவதில்லை. கழிவுகள் அகற்றப்படாமையால் நுளம்புகள் பெருகும் நிலையும் உள்ளது.

மேலும் மின்சார வசதி, குடிநீர் வசதி, மல்சலகூட வசதி, நிரந்தர கட்டட வசதி, தளபாட வசதி என்பன இல்லை.

சந்தைக்கு காவலாளியும் இன்மையால் சந்தையில் உள்ள



பொருட்கள் தினமும் திருடப்படுகின்றன.

எனவே, இத்தனை வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கும் இப் பொதுச் சந்தையை உரிய தரப்பினர் கருத்தில் எடுத்து நிவர்த்தி செய்ய முன்வர வேண்டுமென வியாபாரிகளும் நுகர்வோரும் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர்.

(ம-267)

## வீதி விளக்கின்மையால் பயணிப்போர் சிரமம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவு வேளைகளில் பயணிப்போர் விபத்துக்களை எதிர்நோக்க வேண்டிய அவலநிலை உள்ளது.

மேற்குறித்த பிரதேச செயலர் பிரிவில் 46 கிராமங்களில் மக்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவு வேளைகளில் பயணிப்போர் பெரும் சிரமத்தின் மத்தியிலே பயணிக்க வேண்டிய நிலை உள்ளது.

மேற்குறித்த பிரதேச செயலர் பிரிவில் பாலங்கள் உள்ள நிலையில் வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் அச்சத்துடனே மக்கள் பயணிக்க வேண்டிய நிலை உள்ளது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு வீதி விளக்குகளை பொருத்தி போக்குவரத்திற்கு உதவ வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர்.(ம-267)




## ரயில் முன் பாய்ந்த பெண் ஆபத்தான நிலையில்

(குருமன்காடு)

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட புகையிரதத்தின் முன்னால் பாய்ந்த பெண் தலையில் காயமடைந்து ஆபத்தான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற புகையிரதத்தின் முன்னால் நேற்று முன்தினம் மாலை சுமார் 60 வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவர் பாய்ந்துள்ளார்.

பாய்ந்தவர் தலையில் காயமடைந்த நிலையில் வவுனியா புகையிரத திணைக்கள உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-250)

## அங்குரார்ப்பண கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கலைஞர் ஒன்றிய அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பாரம்பரிய கலைகளை அழியவிடாது பாதுகாப்பதற்கும், மறைந்து கிடக்கும் கலை ஆற்றல்களை வெளிக்கொணரும் நோக்கிலும் ஆக்கபூர்வமான கருத்துக்களும் ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளதால் கலைஞர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-267)









வவுனியாவில் இத்தாலிய நாட்டு நிறுவனம் ஒன்றின் நிதியுதவியுடன் ஆடைத்தொழிற்சாலை ஒன்று நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஜனாதிபதி உள்ளிட்ட விருந்தினர்கள் மங்கல வாத்தியம் முழங்க அழைத்து வரப்படுவதையும் அமையப் பெற்ற ஆடைத் தொழிற்சாலை கட்டடத்தை ஜனாதிபதி நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் தொழிற்சாலையை பார்வையிடுவதையும் இத்தாலிய நாட்டு அதிகாரி ஒருவர் ஆடைத் தொழிற்சாலை தொடர்பாக விளக்கமளிப்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரியில் திருட்டுச் சம்பவங்கள்

சாவகச்சேரி வடக்கு மீசாலைப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இரண்டு இடங்களில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இப்பிரதேசத்திலுள்ள இலுவம் செல்வ விநாயகர் ஆலயத்தில் கடவுளுக்கு அணியப்பட்டிருந்த தங்கம் மற்றும் வெள்ளியிலான இரண்டு பூ நூல்களையும் ஆலயத்திற்கு அருகாமையிலிருந்த கடையை உடைத்து அங்கிருந்த பொருட்களையும் திருடியுள்ளனர்.

திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-9-29)

# மரண தண்டனைக்காக 377 பேர் காத்திருப்பு

கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை மற்றும் போதைவஸ்து வர்த்தகம் உட்பட கொடூர குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 377 ஆக அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களில் 255 பேர் வெலிக்கடை சிறைச்சாலையிலும் மற்றும் 121 பேர் கண்டி, போகம்பர சிறைச்சாலையிலும் ஒருவர் மஹர சிறைச்சாலையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களில் மூவர் பெண்களாவர். (அ-2)

## ஜோதிலிங்க இரதபவனி

காசி விஸ்வநாதர்–வடமராட்சி
மு.ப.6.00–பி.ப.12.00 நாகர் கோயில்
காலை 10.00–11.30 இளைஞர் நிகழ்வு
மதியம் 2.00– இரவு 8.00 ஆழியவளை
ஸ்ரீவெட்டு முருகன் ஆலயம்
மாலை– 5.00– 6.30 இளைஞர் நிகழ்வு
இரவு– பருத்தித்துறை சிவன் கோயில்
ஸ்ரீசோமநாதர்– வலிகாமம்
காலை 11.00 இரவு மாவிட்டபுரம்
கந்தசாமி கோயிலில் தரிசனம்

# போலிவிசாவில் இலங்கை பயணிக்க முயன்ற மூவர் சென்னையில் கைது

(சென்னை)

போலி கடவுச்சீட்டு மூலம் இலங்கை பயணிக்க முயன்ற வெளிநாட்டவர்கள் ஐந்து பேரை குடியுரிமைத்துறை அதிகாரிகள் கைது செய்தனர்.

சென்னையில் இருந்து கொழும்புக்கு பயணிக்கவிருந்த விமானம் நேற்று முன் தினம் இரவு 11.55 மணிக்கு புறப்பட தயாராக இருந்த நிலையில் விமான பயணிகளின் கடவுச்சீட்டுக்களை குடியுரிமைத் துறை அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அப்போது இலங்கையைச் சேர்ந்த 3 பேர் போலி விசா வைத்திருந்தமை தெரியவந்ததையடுத்து மூவரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை வங்காளதேசத்தைச் சேர்ந்த இருவர் நேற்று முன்தினம் காலை 7 மணிக்கு ஏர்–இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் மூலம் கொழும்பிற்கு பயணிக்க சென்னை விமான நிலையம் வந்திருந்தனர்.

அவ் இருவரின் கடவுச்சீட்டுகளும் போலி என்பது விசாரணையில் தெரிய வந்தது. உடன் இருவரும் கைது செய்யப்பட்டு விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (அ-2)

# உணவு தயாரிப்போருக்கு அறிவூட்டல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம், உணவு தயாரித்தல் துறையிலுள்ளோர், உணவகங்கள் மற்றும் சுற்றுலாத் துறை சார்ந்தவர்களுக்கு அத்துறையை மேம்படுத்துவதற்கு அறிவூட்டல் நிகழ்வு ஒன்றை இம்மாத பிற்பகுதியில் ஏற்பாடு செய்துள்ளது.

உணவு தயாரித்தலில் சுகாதாரமான நடைமுறைகள் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் உற்பத்திகளை மேற்கொள்ளுதல், தர முகாமைத்துவமும் ஒழுங்க மைப்பும், சர்வதேச தர நிர்ணயம் மற்றும் அதற்கான வழிகாட்டல் கள் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்நிக ழ்வு இடம்பெறவுள்ளமையால், குடா நாட்டைச் சேர்ந்த மேற்படித் துறைசார்ந்தோர், உணவு உற்பத்தி மற்றும் பதனிடல், உணவு கையாளும் துறையினர், மென்பான உற்பத்தியாளர்கள், உப உணவு தயாரித்தல் துறையினர், வெதுப்பக உரிமையாளர்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் போன்றோ மேற்படி நிகழ்வில் கலந்து கொள்வதன் மூலம் அவர்கள் தமது தொழிற்றுறையை மேம்படுத்த சிறந்த வாய்ப்பாகவும் அமையும்.

இந்நிகழ்வு துறைசார் வல்லுநர்களால் மிகச்சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளோர் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் இல 124, இராசாவின் தோட்டம்வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலமைந்துள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற் றுறை மன்றத்துடன் தொடர்பு கொண்டு தமது பங்கு பற்றலை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இந்நிகழ்வு தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 021 222 6609 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியுமென யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம் அறிவித்துள்ளது. (அ)

# கச்சதீவை மீட்பதற்கு நடவடிக்கை வேண்டும்

## டி.ஆர்.பாலு தெரிவிப்பு

கச்சதீவை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் குரல் எழுப்புவோம் என்று தி.மு.க. மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரை சுமுகமாக நடத்துவது தொடர்பாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை சபாநாயகர் மீராகுமார் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்தார்.

இக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் கச்சதீவை மீட்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் வலியுறுத்துவோம்.

அதுபோல இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் மன்மோகன்சிங் பங்கேற்க கூடாது என்பதையும் வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் எதிர்ப்பு தெரிவிப்போம் என்றார்.

இதேபோல் தெலுங்கானாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆந்திர பாராளுமன்ற உறுப்பினர்களும் தனி மாநிலம் கோரி பிற மாநில பாராளுமன்ற உறுப்பினர்களும் குரல் கொடுக்கக் கூடும் என்பதால் மழைக்கால கூட்டத் தொடரும்கூட சுமுகமாக நடைபெறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது என்றும் தெரிவிக்கின்றன. (அ-2)

# சிறைச்சாலைக்குள் கைதி தூக்கிட்டு தற்கொலை

(கொழும்பு)

கைதியொருவர் பொலிஸ் சிறைச்சாலையினுள் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் புத்திக சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை காலி–பத்தேகம எனும் இடத்தில் இடம்பெற்றுள்ளது. இதன்போது 47 வயதுடைய காமினிலியன ஆராச்சி என்பவரே உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இக் கைதியை கடந்த 6 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் பத்தேகம பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இவர் , தான் அணிந்திருந்த சாரத்தைக் கிழித்து சிறைச்சாலைக்குள் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். (அ-2)

# கடற்படையினரால் இருபது தமிழக மீனவர்கள் கைது

இராமேஸ்வர மீனவர்கள் 20 பேரை இலங்கைக் கடற்படையினர் பிடித்துச் சென்றுள்ளனர்.

கச்சதீவு அருகே 5 விசைப் படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த பாம்பன் பகுதி தமிழக மீனவர்களே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களிடம் மன்னார் கடற்படை முகாமில் வைத்து இலங்கை கடற்படை விசாரணை நடத்தியுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் முதல் இற்றைவரை இலங்கை கடற்படையால் 18 முறை தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலின் போது மீனவர்கள் 236 பேர் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களில் 94 பேர் இலங்கை சிறைகளில் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# சட்டத்தை மீறி செயற்படுவோருக்கு மன்னிப்பே கிடையாது- சிறிசேன

(கொழும்பு)


மாகாண சபை தேர்தலின் போது சட்டத்தை மீறி செயற்படும் ஆளும் கட்சி வேட்பாளர்கள் எவருக்கும் மன்னிப்பே கிடையாது. தேர்தல் சட்டத்தை மீறும் எவரையும் நாம் பாதுகாக்க மாட்டோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளரும் சுகாதார அமைச்சரு மான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.


குருநாகல் மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தல் பிரசார அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாகாணசபை தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெறுவது நிச்சயம். எமது வெற்றியை கௌரவமான முறையில் பெற்றுக்கொள்வதற்கு வேட்பாளர்கள் முன்னின்று செயற்பட வேண்டும்.

எனவே, மாகாணசபை தேர்தலில் போட்டியிடும் ஆளும்கட்சி வேட்பாளர்கள் அனைவரும் தேர்தல் சட்டத்தை மீறாமல் சமாதானமான முறையில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (அ-2)





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 197 ஆவது ஆண்டு நிறைவு தின நிகழ்வும் கல்லூரி தின நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன. இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன், சென்பீற்றர் தேவாலய குரு முதல்வர் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட அதிபர், பழைய மாணவர்கள் ஆசிரியர் உள்ளிட்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மல்லாகம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீய காரியங்களை செய்கின்றவர்கள் திட்டமிட்டுச் செய்தாலும் அவர்கள் ஏமாந்து விடுவார்கள்.

- லா புரூயர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நயினாதீவு இறங்குதுறையில் இருந்து தமிழரின் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும்

முந்தி வந்த செவியை பிந்தி வந்த கொம்பு மறைக்கின்றது என்ற தமிழ்ப் பழமொழிக்கு நிறைந்த அர்த்தம் உண்டு. இந்தக் கருத்தில் இருந்து தான் அத்தனை பிரச்சினைகளும் தோற்றம் பெறுகின்றன.

அந்த வகையில் முந்தி இருந்ததை பிந்தி வந்தது மறைப்பது, தடுப்பது, குலைப்பது என அனைத்தும்,பிரச்சினையின் தோற்றுவாய்களே.

இதற்கு நல்ல உதாரணம் நயினாதீவுக்கான குறிகாட்டுவான் படகுச் சேவையாகும்.

முன்பெல்லாம் குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவுக்குச் செல்லும் படகுகள், நயினாதீவு அம்மன் கோயிலின் முன்பாக உள்ள இறங்குதுறையில் தரித்து நின்று பயணிகளை இறக்கும். ஆனால் இப்போது நயினாதீவில் உள்ள விகாரைக்கு சிங்கள மக்கள் செல்லும் பொருட்டு விசேடமாக இறங்குதுறை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த இறங்குதுறை அமைக்கப்பட்டதன் பிற்பாடு, குறிகாட்டுவானில் பயணிகளை ஏற்றிக்கொண்டு நயினாதீவுக்குச் செல்லும் படகுகள் முதலில் நாகவிகாரை இறங்குதுறைக்குச் செல்லும்.

அங்கு படகில் இருக்கின்ற சிங்கள மக்களை இறக்கிய பின்பே நயினாதீவு இறங்குதுறைக்கு பயணிக்கின்றது.

இத்தகைய நடவடிக்கையால் குறிப்பிட்ட நேரத்திற்குச் செல்லமுடியாத அளவில் பெரும் கஷ்டங்களை நயினாதீவு மக்களும், வெளியிடங்களில் இருந்து கடமையின் நிமித்தம் நயினாதீவுக்குச் செல்வோரும் எதிர்கொள்கின்றனர்.

நாகவிகாரை இறங்குதுறையில் விகாரைக்குச் செல்பவர்கள் மட்டுமே இறங்கிக் கொள்வர்.

ஆனால் நயினாதீவு இறங்குதுறையில் நாகபூசணி அம்மன் கோயிலுக்குச் செல்பவர்கள் மட்டும் அன்றி அந்த ஊர்மக்கள் மற்றும் ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் என பலரும் உள்ளனர்.

நிலைமை இதுவாக இருக்கின்ற போதிலும் படகுகள் நாகவிகாரை இறங்குதுறைக்கு முதலில் செல்லுதல் என்பது கட்டாயமான தாக்கப்பட்டுள்ளது.

காலாகாலமாக குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவு இறங்குதுறைக்குச் செல்கின்ற நடைமுறையில், இந்த புதிய புகுத்தல் தமிழ் மக்கள் மத்தியில் எத்துணை தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கும் என்பதை மனிதநேயத்தோடு பார்ப்பது கட்டாயமானதாகும்.

நயினாதீவில் நாகவிகாரை உள்ளது. அதனால் சிங்கள மக்கள் அங்கு செல்வதற்கு விசேட ஏற்பாடுகள் செய்தாக வேண்டும்.

இது பௌத்த சிங்கள நாடு. அங்கு இருப்பதோ கடற்படை. எனவே நயினாதீவு மக்கள் என்று பார்க்க முடியாது. நாம் இட்டதே சட்டம். இதற்கு அங்கு இருக்கக்கூடிய சாதுவின் ஆசியும் உண்டு என்ற நினைப்பில் நடந்து கொள்வது இனஒற்றுமைக்கு குந்தகமானது.

இந்த நாட்டில் இனஒற்றுமை ஏற்பட வேண்டும் என யாரேனும் நினைப்பார்களாயின் அவர்கள் நயினாதீவு இறங்குதுறையில் இருந்து நிலைமையை சீராக்கவேண்டும்.

எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழ்கின்றோம் என்று கூறுவது புறவயமானது. உண்மையான இனஒற்றுமை என்பது அகவயமானது. ஆக அகவயமான ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமாயின் எந்தச் சந்தர்ப்பதிலும் சிங்களம்-தமிழ் என்ற பாகுபடுத்தலுக்கு இடம்கொடுக்கக் கூடாது.

# நாட்டில் யுத்தம் இல்லை என்பதற்காக சமாதானம் உள்ளதாக கருதமுடியாது

## சட்ட விரிவுரையாளர் சர்வேஸ்வரன் தெரிவிப்பு

போர் இடம் பெறவில்லை என்பதற்காக நாட்டில் நிரந்தர சமாதானம் வந்துவிட்டதாக கருதமுடியாது என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர் அ.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைமனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்தியக் காரியாலயத்தின் ஏற்பாட்டில் சிவில் சமூக அங்கத்தவர்களுக்கான மனித உரிமைகள் தொடர்பான செயலமர்வு ஒன்றினை யாழ்.கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நேற்று நடத்தியிருந்தது.

இதில் வளவாளராக கலந்து கொண்ட அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஒரு நாட்டில் யுத்தம் இடம் பெறவில்லை என்பதற்காக அந்த நாட்டில் வாழும் சகல இன மக்களும் சமாதானத்துடன் வாழ்கின்றார்கள் என்றும் பொருள் கொள்ள முடியாது.

சண்டையில்லை என்பதற்காக சமாதானம் நிலவுகின்றது எனவும் கூறமுடியாது. நாட்டில் நிரந்தர சமாதானம் வந்துவிட்டது என்றால் பாதுகாப்பு படைகள் தேவையில்லை.

ஆயுதங்கள் களையப்பட வேண்டும், ஆயுதக்குழுக்களை கலைத்தல் வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு மீள்குடியேற்றம், முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளித்தல், சமூக மயமாக்கல், மீள்கட்டுமானம், மீள்இணைத்தல் போன்ற நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும்தெரிவித்தார்.

மேலும் இராணுவத்தினர் எல்லாம் இடங்களிலும் பாரிய ஆயுதங்களுடன் நிற்கக் கூடாது எனவும் மனரீதியாக ஆயுதக்களைவு ஏற்படும் போதுதான் நாட்டில் நிரந்தரசமாதானம்ஏற்பட்டுவிட்டதாககருத முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(எ-6)

# மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காதது ஏன்?

## கேள்வி எழுப்பும் ஊரதீவு மக்கள்

புங்குடுதீவில் ஊரதீவுக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கு எந்தத் தரப்பினரும் நடவடிக்கை எடுக்காதது ஏன் என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

புங்குடுதீவில் ஏனைய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஊரதீவு மற்றும் மடத்துவெளிக் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் ஊரதீவு கிராம அபிவிருத்திச் சங்கம், மடத்துவெளி சனசமூக நிலையம் என்பவற்றால் பல தடவைகள் உரியதரப்பினருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. ஆனால் எந்தநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் கணனிகள் உட்பட பல இலத்திரனியல் உபகரணங்கள் மின்சாரம் இல்லாததால் பழுதடைந்து போகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

மாணவர்கள் இரவு நேரங்களில் குப்பி விளக்குகளில் தமது கல்வியை கற்கின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலை யாழ். குடாநாட்டில் ஊரதீவு மடத்துவெளிக் கிராமங்களில் மட்டுமே காணப்படுகின்றது.

இன்றைய நவீன உலகில் பல்வேறு இலத்திரனியல் சாதனங்களின் பயன்பாடு அதிகரித்துக் காணப்படுகின்ற போதும் அவற்றை ஊரதீவு,மடத்துவெளிக் கிராமங்களில் பயன்படுத்த முடியாத அவல நிலையில் அப்பகுதி மக்கள் காணப்படுகின்றனர்.

ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது ஊரதீவு மடத்துவெளிக் கிராமங்கள் மட்டும் ஏன் புறக்கணிக்கப்படுகின்றது என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

கடந்த சில வருடங்களாக மின்சாரம் வழங்குவதற்கான கோரிக்கைகள் உரிய தரப்பினரிடம் வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே காலதாமதம் இன்றி தமது கிராமத்துக்கும் ஒளி கிடைக்க வேண்டும் என ஊரதீவு, மடத்துவெளி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-1)

# நடிகர் அஜித்தின் படத்தை கிழித்ததால் மாணவி தற்கொலை

நடிகர் அஜித்குமாரின் புகைப்படத்தினை கிழித்தெறிந்தமைக்காக பாடசாலை மாணவியொருவர்தற்கொலைசெய்துள்ளார்.

இச்சம்பவம் யாழ்ப்பாணத்தில் ஆவரங்கால் மேற்கில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தினைச் சேர்ந்த அருமைத்துரை அனுஷ்கா(வயது 17) என்ற பாடசாலைமாணவியேஉயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்தமாணவியின் சகோதரன்வெளிநாடொன்றிலிருந்து கடந்த ஒரு மாதத்திற்குமுன்னர்யாழ்ப்பாணம்வந்து உள்ளார்.

வந்தவர் தன்னுடைய வீட்டிற்கு கடந்த மாதம் 29-ம் திகதியன்று சென்ற போது குறித்த மாணவி நடிகர் அஜித்தின் புகைப்பட கலண்டர்களினை தனது மேசையில் பரப்பி வைத்திருந்துள்ளார்.

இதன்போது அங்கு வந்த மாணவியின் சகோதரன் அப்படங்களினை கிழித்தெறிந்து விட்டு போய்ப் படிக்குமாறும் பேசியுள்ளார்.

அவர்சென்றதும்யாரும்எதிர்பார்த்திராத வகையில் தன்மேல் மண்ணெண்ணெயினைஊற்றிநெருப்பினைமூட்டியுள்ளார்.

நெருப்பில் தன் மகள் எரிவதனைக் கண்ட தந்தையார் உடனடியாக தீயினை அணைத்து அவரை அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனை,மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-4)

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

04.08.2013க்கான வினாவும் விடையும்:-

வினா:- வாழ்க்கையின் குறிக்கோள் என்ன?

விடை: எப்பொழுதும் ஆனந்தமாக இருத்தல். இதைத்தான் மோட்சம், முக்தி, பேரின்பநிலை, சிவகதி அடைதல் எனப் பலவாறாக அழைப்பர்.

05.08.2013: வினா:- வெற்றி அடைவதற்கான இரகசியம் யாது?

விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு (01.09.2013) மாலை 4 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கவும்.

சின்மயாமிஷன்
யாழ்ப்பாணம்

இல.9., செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

# அன்புரைகள்



நீங்கள் உயிரறிவைப் பெற்று உண்மை விளக்க ஒளியில் விழிப்போடு வாழ வாழ்விலே ஒரு நல்லதோர் திருப்பத்தை ஏற்றிருக்கிறீர்கள். நீங்கள் மேன்மையுற வேண்டும். உங்களால், உங்கள் வாழ்வின் ஒழுக்கம் பின்பற்றி மனிதகுலம் மேன்மையுறவேண்டும். உலகம் அமைதி பெறவேண்டும். நுண்மாண் நுழைபுலன்,ஏற்பும் இணக்கமும், தன்மை நலப்பேறு, தகைமை, ஆக்கம் என்னும் ஐவகை குணநல உயர்வில் நீங்கள் அபார விழிப்புடன் வாழவேண்டும்.

ஆக்கினை, மூலாதாரம், சகஸ்ராதாரம், சக்திகளம், சிவகளம் எனும் ஐவகை தவத்தாலும் அறிவை நுண்மை மிக்கதாயும் ஆற்றல் மிக்கதாயும் வளப்படுத்திக் கொள்ளுங்கள், எண்ணங்களை ஆராய்தல், ஆசை சீரமைப்பு , சினம் தவிர்த்தல், கவலையொழித்தல், மெய்ப் பொருள் உணர்தல் என்னும் ஐவகையான தற்சோதனைப் பயிற்சியினால் மனிதப் பிறவியின் மாண்பைச் சிறப்பித்துக் கொள்ளுங்கள். உங்களைப் பார்த்து இத்தகைய சீரிய வாழ்க்கை நெறியினை மற்றவர்களும் பின்பற்றும் படியாக உங்கள் வாழ்வை அமைத்துக் கொண்டு உயர்வு பெறுங்கள். இது நமக்கு மட்டுமன்று மனித குலம் முழுமைக்கும் வாழ்க்கை நலத் தொண்டாக அமையும்.

உலகில் மனிதகுல வாழ்வில் எத்தனையோ மாற்றங்கள் இதுவரையில் ஏற்பட்டன. மனவளமும் உடல்நலமும் அமைதி வாழ்வும் அளிக்கக் கூடிய நமது குண்டலினி யோக வாழ்வே மனித குலத்துக்கு எல்லா வகையிலும் நலம் பயக்கவல்லது. நீங்கள் ஒவ்வொருவரும் அமைதிப் படையின் உறுப்பினராகத் திகழ வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கான். இந்திய தூதரகம் அருகே தாக்கு; குழந்தைகள் உட்பட பலர் பலி!

(பெஷாவர்)

**ஆப்கானின் இந்திய தூதரகம் அருகே நடத்தப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதலில் 9 குழந்தைகள் உட்பட 12பேர் உயிரிழந்தனர். 20 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் ஆப்கானின் ஜலாலாபாத் இந்தியத் தூதரகம் அருகே நிகழ்ந்துள்ளது.**



இதுதொடர்பாகதெரியவருவதாவது, ஜலாலாபாத் நகரில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு எதிரே, வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட காரில் வந்த தற்கொலைப் படை பயங்கர வாதிகள் 3 பேர் இத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதில் ஒருவர்காரில்உள்ள குண்டு களை வெடிக்க வைத்துள்ளார். ஏனைய இருவர் உடலில் குண்டு களை அணிந்து தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்த முயன் றுள்ளனர். ஆனால் பாதுகாப்புப் படை வீரர்கள் அவர்களை சுட்டுக் கொன்றதாக ஆப்கான் அதிகாரி கள் தெரிவித்தனர்.

ஜலலாபாத் நகரில் இந்திய துணைதூதரகம் செல்லும் பாதை யில் மசூதி அருகே கார்க்குண்டு வெடித்தது. இந்தக் குண்டுவெடிப் பில் 9 குழந்தைகள் உயிரிழந்த னர். அவர்கள் அருகில் உள்ள மசூதி யில் மதபோதனை வகுப்புக்கு சென்றபோதே இந்த விபத்தில் சிக்கி இறந்துள்ளனர். 21 பேர் பலத்த காயமடைந்தனர்.

தற்கொலைப் படைத்தாக்குதல் நடந்ததும் அந்தப் பகுதியை ஆப்கா னிஸ்தான் பாதுகாப்பு படையினர் சுற்றி வளைத்துள்ளனர். குண்டு வெடிப்பில் படுகாயம் அடைந்தவர் கள் அருகிலுள்ள மாகாண அரச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இத்தாக்குத லில் இந்திய தூதரக அதிகாரிக ளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவி ல்லை என்று மத்திய அரசு தெரி வித்துள்ளது.

இந்தியத் தூதரகத்தைக் குறி வைத்தே இத்தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது. ஆப்கானில் இந்தியா மேற்கொண்டு வரும் வளர்ச்சிப் பணிகளுக்கு எதிராகவே இத்தாக் குதல் நடத்தப்பட்டதாக தெரிகிறது. ஹக்கானி பயங்கரவாத அமைப் பினர் இத்தாக்குதலை நிகழ்த்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா உறுதி

இதுபோன்ற பயங்கரவாதத் தாக்குதல்களினால், ஆப்கானுக்கு இந்தியா அளித்து வரும் உதவியை நிறுத்தாது என்று இந்திய வெளியுற வுத்துறை அமைச்சகத்தின் செய் தித் தொடர்பாளர் சையது அக்பருதீன தெரிவித்துள்ளார். தற்கொலைப் படைத தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங் கலைத் தெரிவிக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

# ஈரானின் ஜனாதிபதியாக ரௌஹானி பதவியேற்பு

(தெஹ்ரான்)

ஈரானின் 7 ஆவது ஜனாதிப தியாக ஹசன் ரௌஹானி (வயது 64) முறைப்படி பதவியேற்றார்.

ஈரானில் கடந்த ஜுன் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற ஹுசன் ரௌஹானி எனும் இஸ்லாமிய மதகுரு உத்தி யோக பூர்வமாக நேற்று முன்தினம் பதவியேற்றார்.

இதன்மூலம் ஈரானின் முன் னாள் ஜனாதிபதியான மொஹமட் அகமது நிஜாத்தின் அனைத்து அதி காரங்களும் இவரிடம் கைமாறியுள் ளன.

நேற்று முன்தினம் பதவியேற்ற இவர் பொதுமக்கள் முன்னணி யில் நேற்றைய தினம் சத்தியப்பிர மாணம் செய்தார்.

தேர்தலில் வெற்றி பெற்றால் சர் வதேச நாடுகளில் இருந்து ஈரான் தனி மைப்படுத்தப்பட்ட நிலையை தான் மாற்றுவதாக உறுதி மொழி அளித்திருந் தார். இவ் ஈரானில் அணு வாயுதத் திட்டங்களை உலகுக்கு அறிவிக்கும் பேச்சாளராகவும் 1979 ஆம் ஆண்டில் ஈரா னில் அரசியல் புரட்சி ஏற்பட்ட முன்னர் ஒரு இஸ்லாமிய விடுத லைப் போராளியாக வும் பணியாற்றியிருந் தார். தற்போது புதிய



ஜனாதிபதியான ரௌஹானி முன் பாக இருக்கும் மிகப் பெரும் சவால் களாக ஈரானிலுள்ள சர்வதேச அரசி யல் கைதிகளை விடுவித்தல், நாட் டின் பொருளாதாரத்தை மிகவும் பாதித்திருக்கும் சர்வதேசத்தின் பொரு ளாதாரத் தடைகளை அகற்றுதல் ஆகியன உள்ளன.

இதேவேளை ஈரானின் ஜனாதி பதியாக ரௌஹானி கடமையாற்ற வுள்ள போதிலும் முக்கிய அரசியல் முடிவுகளை எடுப்பதில் அந்நாட்டின் பிரதான சக்தியாக அவர் விளங்க மாட்டார் என்றும் கூறப்படுகின்றது. ஈரானின் ஆன்மீகத் தலைவரான கம னேய் என்பவருக்கே இறுதி அறி விப்பு செய்யும் உரிமையுள்ளது எனவும் கூறப்படுகின்றது. (அ-2)

# எகிப்தில் முர்ஸி பதவி விலக அமெரிக்காவே காரணம்

## அல்கொய்தா குற்றச்சாட்டு



எகிப்தின் ஜனாதிபதியாக இரு ந்த முகமது முர்ஸி பதவி விலகிய மைக்கு அமெரிக்காவின் சதி தான் காரணம் என அல்கொய்தா தலை வர் அல் ஜவாஹிரி குற்றம் சாட்டி யுள்ளார்.

எகிப்தில் கடந்த மாதம் 3 ஆம் திகதி ஏற்பட்ட இராணுவ புரட்சி மூலம் ஜனாதிபதி முஹமது முர்ஸி பதவி விலகினார்.

இராணுவத்தால் கைது செய்யப் பட்டுள்ள முர்ஸி தற்போது சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை விடுவித்து மீண்டும் பத வியில் அமர்த்தக் கோரி முர்ஸியின் ஆதரவாளர்கள் தொடர்ந்து போராட் டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அங்கு மீண்டும் கலவரம் வெடித் துள்ளது.

இந்நிலையில் அவர் பதவி வில கியதற்கு அமெரிக்காவின் சதி தான் காரணம் என அல்கொய்தா தலை வர் அல் ஜவாஹிரி குற்றம் சாட்டி யுள்ளார்.

இது தொடர்பாக அவர் வீடியோ ஒளிப்பதிவு ஒன்றை வெளியிட்டுள் ளார். அவர் வெளியிட்டுள்ள வீடி யோவில் கூறியிருப்பது,

எகிப்தில் சிறுபான்மை இனத்த வராக வாழும் கிறிஸ்தவர்கள் தெற்கு பகுதியைப் பறித்து தங்களுக்கு என தனிநாடு உருவாக்கத் திட்டமிட்டுள் ளனர்.

அதற்காக அமெரிக்கா எகிப்து இராணுவத்துடன் சேர்ந்து சதி செய்து முர்ஸியை பதவி நீக்கம் செய்துள்ளது.

தற்போது துணை ஜனாதிபதி யாக பதவி ஏற்றுள்ள எல்பரதே, முன்பு சர்வதேச அணு சக்தி கழகத்தின் தலை வராக இருந்தபோது ஈராக்கின் அழி வுக்கு காரணமாக இருந்தார் என்றும் தெரிவித்தார்.


இதற்கிடையே போராட்டம் நடத்தி வரும் முர்ஸியின் ஆதரவாளர்க ளுக்கு உள்துறை அமைச்சகம் எச்ச ரிக்கை விடுத்துள்ளது. (அ-2)

# குண்டுகளை கண்டுபிடிக்கும் நவீன கருவி தயாரிப்பு

இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சாதனம் முதன்முறையாக அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு உலகம் முழுவதும் விற்பனை செய்யப்படவுள்ளது.

குண்டுகளை விரைவாகக் கண் டறிய உதவும் இந்தச் சாதனம் வோஷி ங்டனில் வெள்ளை மாளிகையை ஒட்டி அமைந்துள்ள அமெரிக்க வர்த் தகக் கூட்டமைப்பின் அலுவலகத் தில் நேற்று முன்தினம் அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த சாதனத்தை தெற்கு கரோ லினாவில் உள்ள குரோவே அன்ட் கம்பனி உற்பத்தி செய்து சந்தைப் படுத்தும் ஐ.இ.டி.நைட்ரோ- ஈஸ்ட



ர்ஸ், நைட்ரமைன்ஸ், டிரைநைட்ரோ லூன், டைனமைட் உள்ளிட்ட பொருட் களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட வெடிகுண்டுகளை எளிதில் கண்டறி வதற்கு இந்த சாதனம் உதவும்.


இது எளிதாக எடுத்துச் செல் லும் வகையில் வடிவமைக்கப்பட் டுள்ளது. விலை குறைவானது. வெடி குண்டு வெடிப்பதற்கு முன்பும் பின் பும் இந்தக் கருவியைக்கொண்டு முக் கியமான தகவல்களைச் சேகரிக்க முடியும். இந்திய இராணுவம், துணை இராணுவம் மற்றும் பொலிஸில் இந்த சாதனம் ஏற்கனவே பயன் பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து அமெரிக்க முன் னாள் பாதுகாப்புத்துறை அமைச் சர் வில்லியம் எஸ்.கோஹென் கூறு கையில், இந்தியா, அமெரிக்கா இடையே பரஸ்பரம் தொழில்நுட்ப பரிமாற்றம் நடைபெறுவதற்கு இந்த முயற்சி சிறந்த உதாரணமாக உள்ளது. இதன் மூலம் இரு நாடுகளும் பயன்பெ றும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு எதிராக தென்னாபிரிக்கா ஆதிக்கம்

# 2 வது போட்டியிலும் வெற்றி



இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இலங்கை அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரின் முதலாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றிருந்த நிலையில் இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது இருபது -20 போட்டி அம்பாந்தோட்டை மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்படுத்தாடியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அவ் அணி சார்பாக அதிகபட்சமாக மில்லர் 36 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். டுமினி 30 ஓட்டங்களைப் பெற்றார்.

இலங்கை அணி சார்பாக குலசேகர மற்றும் சேனநாயக்க தலா 2 விக்கெட்டுக்களையும் மலிங்க ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.


146 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

இலங்கை அணி சார்பாக சங்கக்கார அதிகபட்சமாக 39 ஓட்டங்களைப் பெற்றார்.


இப்போட்டியின் நாயகனாக தென்னாபிரிக்க அணியின் மில்லர் தெரிவானார்.

3 இருபது-20 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் 2:0 என்ற நிலையில் தென்னாபிரிக்க அணி தொடரை கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி இருபது -20 போட்டி நாளை அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளது.



## இலங்கை–பாக். தொடர் எப்போது?



பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கு,இடையிலான தொடர் வரும் டிசம்பர் - ஜனவரி (2014) மாதங்களில் ஐக்கிய அரபு எமிரேட்சில் (யு.ஏ.இ.இ) நடக்கவுள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காக, பாகிஸ்தானில் சர்வதேச போட்டிகள் நடக்கவில்லை.

இதனையடுத்து பாகிஸ்தான் அணி, ஐக்கிய அரபு எமிரேட்சில் (யு.ஏ.இ.இ) போட்டிகளை நடத்தி வருகிறது. வரும் டிசம்பர் - ஜனவரி (2014) மாதங்களில், பாகிஸ்தான் அணி, இலங்கைக்கு எதிராக மூன்று டெஸ்ட், ஐந்து ஒருநாள் மற்றும் இரண்டு சர்வதேச "இருபது-20" போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது.

இதன்படி பாகிஸ்தான், இலங்கை அணிகள் வரும் டிச., 11, 13-ம திகதியில் இரண்டு சர்வதேச "இருபது-20" போட்டியில் மோதுகின்றன. அதன்பின் டிச., 18, 22 (ஷார்ஜா), டிச., 20 (டுபாய்), டிச., 25, 27 (அபுதாபி) திகதிகளில் ஐந்து ஒருநாள் போட்டிகள் நடக்கவுள்ளன. அடுத்த ஆண்டு ஜன.8-12-ம் திகதியில் அபுதாபியில் முதல் டெஸ்ட் போட்டியும்; ஜன.இ 16-20 திகதியில் ஷார்ஜாவில் 2-வது டெஸ்ட் போட்டியும் நடக்கவுள்ளன.

## எனது வெற்றிக்கு தோனியே காரணம்



சிம்பாவேக்கு எதிரான 5 ஒருநாள் போட்டியிலும் இந்திய அணி வெற்றி பெற்று முத்திரை பதித்தது. இந்தியா-சிம்பாவே அணிகள் மோதிய 5-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி புலவாயோவில் நேற்றுமுன்தினம் நடந்தது.

இப் போட்டியில் இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றி மூலம் இந்திய அணி 5 ஆட்டத்திலும் வென்று சிம்பாவேயை வெள்ளையடித்தது.


முதல் போட்டியில் 6 விக்கெட் வித்தியாசத்திலும் (31 பந்துகள் எஞ்சி இருந்தது), 2-வது ஆட்டத்தில் 58 ரன்னிலும், 3-வது போட்டியில் 7 விக்கெட் வித்தியாசத்திலும் (87 பந்து மீதம்), 4-வது போட்டியில் 9 விக்கெட் வித்தியாசத்திலும் (115 பந்து மீதம்) இந்திய அணி வெற்றி பெற்று இருந்தது.

சிம்பாவேக்கு எதிரான ஒருநாள் தொடரை 5-0 என்ற கணக்கில் வென்றது குறித்து தற்காலிக அணித் தலைவர் வீராட் ஹோலி கூறியதாவது,

சிம்பாவே தொடர் வெற்றிகரமாக முடிந்தது. இதற்கு தோனியே காரணம். ஆடுகளத்தில் எப்படி செயல்படுவது என்பது பற்றிய யுக்தியை அவரிடம் இருந்து கற்றேன். இதை பயன்படுத்திய நான் சிறப்பாக செயல்பட்டேன். இந்த அணியில் திறமை வாய்ந்த வீரர்கள் இருந்ததால் எனக்கு கப்டன் பதவி கடினமாக தெரியவில்லை.

இவ்வாறு வீராட் ஹோலி கூறியுள்ளார்.

## சர்ச்சைக்குரிய நடுவர் ஆசாத்ரவூப் ஓய்வு




பாகிஸ்தானை சேர்ந்த நடுவர் ஆசாத் ரவூப். ஐ.பி.எல். போட்டியில் சூதாட்டத்தில் இவருக்கு தொடர்பு இருப்பதாக கூறப்பட்டது மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து சர்வதேச நடுவர் குழுவில் இருந்து அவரை ஐ.சி.சி. நீக்கியது.

இந்த நிலையில் தனது தனிப்பட்ட காரணங்களுக்காக நடுவர் பணியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து உள்ளார் 57 வயதான ரவூப்.

48 டெஸ்ட் போட்டிகளுக்கு இவர் நடுவராகப் பணிபுரிந்துள்ளார்.

## யாழ்.இந்து வெற்றிக் கேடயத்தை சுவீகரித்தது





Matrix homes [illegible] யுடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்திவந்த கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த இறுதிப் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் ஆரம்பம் முதலே தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி வந்த யாழ்.இந்துக் கல்லூரி 99.35 என்ற 64 புள்ளிகளின் அடிப்படையில் சுற்றுக் கேடயத்தை கைப்பற்றி சாதனை படைத்தது.

இப் போட்டியின் சிறந்த வீரனாக சி.அனுனும், தொடர் நாயகனாக பற்றிக்ஸ் கல்லூரி வீரன் கென்றிக்ஸ்சனும் தெரி வாகினர்.

இப் போட்டி இந்த வருடம் முதன்முறையாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இப் போட்டி யாழ்.இந்து கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெறுவதுடன்,

இப் போட்டியை பெருமளவான ரசிகர்களும் கண்டுகளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேலத்தில் பிரபா...

முன்பு துரைராஜ்க்கு கடிதம் அனுப்பி இருந்தது. துரைராஜ்தனது முகவரியை மாமனார் வீட்டு விலாசத்தில் கொடுதது இருந்தார்.

இங்கு கடிதம் வந்து பல நாட்கள ஆகியும் இந்த தபாலை துரை ராஜி டும் தரவில்லை. இதனால் அவருக்கு வேலை கிடைக்கவில்லை.

இதை அறிந்த துரைராஜ் அதிர்ச்சி அடைந்தார். பல மாதம் போராடி வேலையில் சேர கடிதம் வந்தும் தன்னால் வேலையில் சேர முடியவில்லையே என்று வருத்தப் பட்ட அவர், தனது மனைவியிடம தகராறு செய்தார். இதனால் செல்வராணி கோபித்து கொணடு தனது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார். அவரை பலமுறை துரை ராஜ் அழைத்தும் அவர் மறுத்து விட்டார்.

அடுத் தடுத் து நடந்த இந்த சம்ப வங்களால் வாழ்க் கையை வெறுத்த துரைராஜ், தனது மாமனார்குடும்பத்தை பழிவாங்க முடிவு செய்தார். இதற்காக அவர் டெல்லி மற்றும் சென்னையில் உள்ள சி.பி.ஐ. அதிகாரிகள், சிலருக்கு செல்போனில் குறுஞ் செய்திகளை அனுப்பி வைத்தார்.

இதில், சேலம் கிச்சிப்பாளை யம் வ.உ.சி. நகரில் வசிக்கும் பட்டறைக் காரர் மணி, பாப்பாத்தி, தர்மலிங்கம், கார்த்தி ஆகியோருடன் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின மனைவி மதிவதனி தங்கி உள்ளார் என்றும், இவர்கள் அனைவரும் சேலத்தில் இருந்து தப்பி செல்ல முயற்சிக்கிறார்கள். எனவே, எச்சரிக்கையாக இருங்கள் என்றும் தெரிவித்து இருந்தார்.

இதனால் உஷாரான டெல்லி பொலிஸார் தமிழக உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து விசாரிக்க உத்தர விட்டனர். பின்னர் சென்னை பொலி ஸார், சேலம் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதன் பேரில் சேலம் மாநகர நுண்ணறிவு பிரிவு பொலிஸா ரும், கியூ பிரிவு பொலிஸாரும் கடந்த 2 நாட்களாக கிச்சிப்பாளையம் பகுதியில் விசாரித்தனர்.

பிறகு துரைராஜின் மாமனார் மணியின் வீட்டில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். அப்போது அங்கு விடுதலைப்புலி இயக்கத்தை சேர்ந்தவர்கள் யாரும் இல்லை என்றும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மனைவி மதிவதனியும் இல்லை என்றும் தெரியவந்தது.

பின்னர் பொலிஸார் நடத்திய விசாரணையில் துரைராஜ் தனது மாமனார் குடும்பத்தை பழிவாங்க இப்படி குறுஞ் செய்தி தகவல் அனுபியது தெரிய வந்தது. பொலிஸார் துரைராஜை கைது செய்து விசாரிததனர்.

அப்போது அவர் உண்மையை ஒப்புக் கொண்டார். அவர் மீது தவறான தகவலை தெரிவித்து தவறான சூழ்நிலையை உருவாக்கியது, பொய் தகவல்களை பரப்பியது ஆகிய பிரிவுகளின் கீழ் கிசசிபாளையம் பொலிஸார் வழககுப்பதிவு செய்துள்ளனர். அவர் சி.பி.ஐ. அதிகாரிகளுக்கு குறுஞ் செய்தி அனுப்பிய செல்போனும் பறிமுதல் செய்யப்பட்டது.

அவர் வேறு வழக்குகளில் ஏதும சிக்கி உள்ளாரா? என்பது குறித்தும் பொலிஸார் விசாரித்து வருகிறார் கள். இந்த சம்பவம் சேலம் கிச்சிப் பாளையம் பகுதியில் பெரும் பர பரப்பை ஏற்படுத்தியது. (எ-4)

# தேர்தலைக்...

சந்தித்து குறித்த பிதிநிதிகள் கலந்துரையாடியதாகவும் தெரியவந்துள்ளது.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் கண்காணிப்பு பணிக்கென சார்க் நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் ஆசிய தேர்தல்கள் அதிகாரிகள் ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் வருகை தரவுள்ளனர் என தேர்தல் திணைக்களம் அறிவிததிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

# மலையகத்தில் கடும் மழை மண் சரிவு ; போக்குவரத்து பாதிப்பு

(கொழும்பு)

மத்திய மலைநாட்டில் மீண்டும் கடும் மழையுடன் கூடிய கால நிலை தற்சமயம் நிலவி வருகிறது.

மழை கடுமையாக பெய்து வருவதால் வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளதாக தெரியவருகிறது.

அதன்படி, வட்டவளையில் 35 வீடுகள், கொட்டக்கலையில் - லொக்கில், ஹெரிங்டன், மேபீல்ட், சாமஸ் ஆகிய பகுதிகளில் 48 வீடுகளில் வெள்ள நீர் உட்புகுந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும் வட்டவளை - ரொஸல்ல ரயில் நிலையத்திற்கு அருகில் பாறை ஒன்று சரிந்து வீழ்ந்து ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன, ஹட்டன் - கொழும்பு வீதியில் தியத்தலாவ தொடக்கம் வட்டவளைக்கு இடைப்பட்ட பகுதியில் ஆங்காங்கே மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.



கடும் மழை காரணமாக மலையகத்தின் பிரதான நீர்த்தேக்கங்களான லக்ஷபான, காசல்ரீ, கென்னியன் ஆகியவற்றின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஹட்டன் - கொழும்பு வீதியில் தியத்தலாவ தொடக்கம் வட்டவளைக்கு இடைப்பட்ட பகுதியில் ஆங்காங்கே மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை கொழும்பிலும மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

# ஊடக அடக்கு...

டத்தை ஆரம்பித்துள்ளது.

இலங்கை ஊடகவியலாளர் களின் தொழிற்சங்கம் நேற்று இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தது.

ஊடகவியலாளர் அடையாள அட்டை அரசாங்கத்தின் தகவல் திணைக்களம் வழங்குகின்ற அதேநேரம் ஊடகவியலாளர்கள் மீது தொடர்ந்தும் தாக்குதல்கள் நடத்தப்படுவதாக ஊடக அமைப் பினர் குறிப்பிட்டனர்.

எனவே ஊடகவியலாளர் அடையாள அட்டைகளை கொண்டுள்ள ஊடகவியலாளர்கள் தமது கடமையை பிரச்சினையின்றி மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தகவல் திணைக்கள பணிப்பாளரை கேட்டுக கொள்ளும் அட்டையும் இதன் போது கைச்சாத்திடப்பட்டது.

# யாழ்ப்...

யைப் பயன்படுத்திவருவதாக அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக் களமும், இராஜாங்கத் திணைக் களமும் கடந்த சில ஆண்டுகளாக குற்றம்சாட்டி வருவது குறிப்பிடத் தக்கது. (எ-4)

இதேவேளை, வெலிவேரிய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை மூன்றாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# நவநீதம்பிள்ளை...

எதிர்வரும் 25-ம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையில் தங்கி யிருந்து இங்குள்ள நிலைமை களை அவதானிக்கவுள்ளார்.

இந்நிலையில் நவநீதம் பிள்ளையைச் சந்தித்து பல்வேறு விவகாரங்கள் குறித்து தான் பேசவுள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனநாயகக்கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையின் ஜனநாயகம், நீதித்துறை மீதான தலையீடுகள் மற்றும் 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தனக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் நவ நீதம்பிள்ளையுடன் கலந்துரையாட முடியும் என்று நம்புவதாக அவர் குறிப்பிட்டுளளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல, ஒரு அரசியல் கட்சியின் தலைவர் என்ற முறையில் நவநீதம்பிள்ளையை சரத்பொன்சேகாவினால் சநதிக்க முடியும் என்று கூறியுள்ளார்.

ஐநாமனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பயண ஏற்பாடுகளை இலங்கை அரசாங்கம் ஐநாவுடன் இணைந்து ஒருங்கிணைக்கும் என்று வெளிவிவகாரச் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதனிடையில் நவநீதம்பிள்ளையின் இலங்கைக்கான விஜயம் தொடர்பான ஏற்பாடுகளை கவனிப்பதற்காக அண்மையில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் தலைமைப் பாதுகாப்பு அதிகாரி ஆப்ரஹாம் மத்தாய் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நவநீதம்பிள்ளை இறுதிக் கட்டப் போர் இடம்பெற்ற தமிழர்கள் பெரும் அவலத்தைச் சந்தித்த முள்ளிவாய்க்கால் பகுதிக்கும் நேரில் சென்று பார்வையிடவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

இந்தப் பயணத்தின்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்க் கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க மற்றும் தமிழ் அரசியல் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரையும் அவர்சந்தித்துக்கலந்துரையாடவுள்ளார்.

அதேவேளை, நவநீதம்பிள்ளை தனது இலங்கைப் பயணம் தொடர்பில் ஜெனிவாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக் குழு வின் 24வது அமர்வில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-4)


## அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் (வ-து)
## வட்டுக்கோட்டை / விசுவமடு
## அங்கத்தவர் மேலதிக கொடுப்பனவு தொடர்பான
## விசேட அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் வன்னிப் பகுதி அங்கத்தவர்கள் தமது வைப்புப் புத்தகம், தேசிய அடை யாள அட்டையாள போன்ற சான்றாதாரங்களுடன் அவரவர் நேரில் வந்து உங்கள் வைப்புப் பணங்களை வட்டியுடன் மீளப்பெறலாம்.

முன்பே வைப்புப் பணங்களைப் பெற்றவர்களின் சான்றாதாரங்கள் எம்மிடம் கையளிக்கப்பட்டுள் ளன. அவர்களும் வட்டிப்பணங்களை மேலதிகமாகப் பெறலாம். அவ்வாறே சேமிப்பில், நிலையான வைப்பில் மாதவட்டியில் வைப்பிலிட்ட அனைத்து அங்கத்தவர்களுக்கு விசுவமடு தபால் கந்தோருக்கு முன் புறம் உள்ள டாக்டர் வி.சுந்தரமூர்த்தியின் அரவிந் கிளினிக் என்ற வைத்திய நிலையத்திற்கு ஆகஸ்ட் மாதம் 7, 8, 9 ஆகிய திகதிகளில் வரவும்.

காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை வாய்ப்பைப் பயன்படுத்தி உரிய பணத்தை தவறாது பெற்றுக் கொள்ளுங்கள்.

தொலைபேசி : 0771495631

இ.ஆனந்தராஜா
நிர்வாக செயலாளர்.

(3544)






கடை கட்டிடங்கள்
## விற்பனைக்கு

பரந்தன், யாழ்ப்பாணம் - கண்டி வீதி, பரந்தன் சந்தியிலிருந்து முல்லைத்தீவு வீதியில் 150 யார் தூரத்திற்குள் ஒவ்வொன்றும் பதினைந்து அடி அகலமும் 105 அடி நீளமும் கொண்ட நான்கு கடைகள் தனித் தனியாகவோ மொத்தமாகவோ விற்பனைக்கு உண்டு.

K. முருகன் : 0775272093
P. சிங்கம் : 0776027324, 021 228 0020
(C-4199)

Shakthy microtec Computer wholesaler
Hotline: 0779120842

Rs.13,000/- Rs.14,000/- Rs.15,000/-
19"-Rs.7,000/-
17"-Rs.6,000/-
15"-Rs.5,000/-

Branded கணனிகள், மடிக் கணனிகளை (Labtop) 13000 ரூபா முதல் 35000 வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

100ற்கு மேற்பட்ட கணனிக் கொள்வனவிற்கு விஷேட விலைக்கழிவு

Head Office: 4500, Sheppard Ave, East, unit 27, Toronto, ON, M1S 1V2, Canada.
Branches: No.191/1, Grand pass Road, Colombo - 14
No.170, Palaly Road, Vigneswara Building, Kondavil East, Jaffna. Hotline : 0779120842
(C-4220)

VACANCY

LAKELAND INTER – AMERICAN SCHOOL
MONTESSORI, PRIMARY & DAY CARE CENTRE

Teachers For Year - 1 to 5 (female)
(Experience, trained teachers will be considered too.)
✓ Fluency in English ✓ 2-3 Years Experience
✓ Attractive Salary waits the right candidate
Forward your application, along with your CV, photograph and contact number to: Director: No.154, Brown road, Jaffna. T.P No: 021-2226242, 0212225600
E-mail: aerolankajaf@gmail.com Website: www.lakeland.edu.lk
(C-4215)

## வாழ்த்துக்கள்

இன்று ஆரம்பமாகும் க.பொ.த. உயர்தர பரீட்சையில் தோற்றும் அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் எமது உளம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யூனியன் அசுரன்ஸ்
யாழ்.பிராந்திய முகாமையாளர்,
ஊழியர்கள்.

union assurance
Trust in your tomorrow, today
(C-4226)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org